Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 28 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :231 ஆடி 02ஆம் நாள் வெள்ளிக்கிழமை 17 ஜூலை 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## மன்னார் சென்ற டக்ளஸ் வழிபாட்டை செய்தாராம்!

### பொலிஸார் அறிக்கை

மன்னார், ஜூலை 17
மன்னாருக்கு வந்திருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அங்குள்ள தேவாலயத்தில் தேர்தல் பரப்புரை நடத்தினார் என்று முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் பொலிஸார் சமர்பித் 25

## பாடசாலைகள் அடுத்த வாரம் மீண்டும் திறப்பு

கொழும்பு, ஜூலை 17
பாடசாலைகள் அடுத்த வாரம் மீண்டும் திறக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந் 25

# வடக்கில் இராணுவம் தெற்கில் கொரோனா

### சுதந்திரமான தேர்தலுக்கு வாய்ப்பேயில்லை என்கிறார் ரணில்



கொழும்பு, ஜூலை 17
நாடாளுமன்றத் தேர்தல் இந்தமுறை பாதுகாப்பாக, சுதந்திரமாக, நீதியாக நடைபெறும் என்பது சந்தேகமே. ஏனெனில் வடக்கில் உச்சக்கட்ட இராணுவப் பிரசன்னம் தெற்கில் மீண்டும் கொரோனாவின் தாக்கம். இந்தநிலையில் தேர்தல் எப்படி ஒழுங்காக நடைபெறும்? 27



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தேவாலய வளாகத்தில் பங்கேற்று கூட்டம் நடத்தியபோது எடுக்கப் பட்ட படம்.

## யாழ்ப்பாணம் வருகின்றார் ரணில்!

யாழ்ப்பாணம், ஜூலை 17
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கி 25

## யாழ். தேர்தல் முறைப்பாட்டு பிரிவுக்கு கொழும்பு அலுவலர்

யாழ்ப்பாணம், ஜூலை 16
யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இயங்கும் தேர்தல் முறைப்பாட்டுப் பிரிவுக்கு தேர்தல்கள் திணைக்களத்தின் கொழும்பு அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். மூன்று தினங்களுக்கு முன்னர் அவர் நியமிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கும் நிலையில் அவற்றுக்கான செயற் 27

## ராஜபக்சக்களின் காட்டாட்சியில் மக்கள் உயிருக்கு மதிப்பில்லை!

### ஜே.வி.பியும் காட்டம்

கொழும்பு, ஜூலை 17
நாட்டில் தற்போது காட்டாட்சியே நிலவுகின்றது. இந்தக் காட்டாட்சியில் எதையெல்லாம் செய்ய முடியுமோ அதையெல்லாவற்றையும் ராஜபக்சக்கள் செய்து முடிப்பார்கள். இவர்களுக்கு மக்களின் உயிர்கள் மீது அக்கறை இல்லை. மக்களின் சுகாதாரப் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் வழங்கி நீதியான தேர்தல் நடைபெற வேண்டும். 26

## ராஜபக்ச அரசு தமிழரை ஏமாற்ற இடமளியோம்!

### சம்பந்தன் திட்டவட்டம்

கொழும்பு, ஜூலை 17
தமிழர்களுக்கு அரசியல் தீர்வு வழங்கப்படும் என்று இந்தியாவிடம் ராஜபக்ச அரசு உறுதியளித்துள்ளது. அரசு தொடர்ந்து சாக்குப்போக்குக் கூறி தமிழர்களை ஏமாற்ற நாம் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம். தமிழர்க 27

## வடக்கை மீட்டெடுக்கும் அரசியல் சமர் தொடரும்!

### நாமல் சபதம்

கொழும்பு, ஜூலை 17
போரிலிருந்து வடக்கை மீட்டுவிட்டோம். அடுத்ததாக இன ரீதியான அரசியல் பிடிக்குள் இருந்தும் வடக்கை மீட்டெடுக்க வேண்டும். வடக்கு மக்களின் மனங்களை வெல்வதற்கு எமக்கு இன்னும் காலம் எடுக்கும். அதுவரையில் பொறுமைகாப்போம் இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் அம்பாந்தோட்டை மாவட்ட வேட்பாளரான நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.
கடந்த 10 ஆண்டுகளாக நீங்கள் வடக்குக்கு சென்றுவருகின்றீர்கள். இளைஞர்களை சந்திக்கிறீர்கள். அப்படி 27

## தேசிய அரசு அமைக்கும் பேச்சுக்கே இடமில்லை!

### மகிந்த அணி திட்டவட்டம்

கொழும்பு, ஜூலை 17
பொதுத்தேர்தலின் பின்னர் தேசிய அரசு அமைக்கும் எண்ணம் சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்கு கிடையாது என்று கொழும்பு மாவட்ட வேட்பாளர் சுசில் பிரேமஜயந்த 26

## 111 கிலோ கஞ்சா மண்டைதீவில் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 17
கடற்படையின் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக் 27

## 58 கிலோ கஞ்சா மண்கும்பானில் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 17
யாழ்ப்பாணம், மண்கும்பானில் நேற்று 27



## நல்லூர் பெருந்திருவிழா காளாஞ்சி கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 17
வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு கொடிச்சீலை வடிவமைப்பாளர்களிடம் காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு 27

### மிருசுவிலில் எண்மர் படுகொலை

## பொதுமன்னிப்புக்கு எதிரான வழக்கு இன்று விசாரணை!

யாழ்ப்பாணம், ஜூலை 17
யாழ்ப்பாணம், மிருசுவிலில் அப்பாவிப் பொதுமக்கள் எண்மர் படுகொலை செய்யப்பட்ட வழக்கின் குற்றவாளியான சுனில் ரத்நாயக்கவுக்கு பொதுமன்னிப்பு வழங்கியமைக்கு எதிராக உயர்நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.
2000ஆம் ஆண்டு யாழ்ப் 27

DFCC தங்கவரம்
தங்கநகை அடகுச் சேவை




அவசரத் தேவைகளுக்கு பணம் வேண்டுமெனில் வீட்டில் இருக்கும் தங்க நகைகளை எடுத்துக்கொண்டு DFCC வங்கிக்கு வாருங்கள்.

மறைமுகக் கட்டணங்கள் ஏதுமின்றி 0.84% குறைந்தபட்ச மாதாந்த வட்டியுடன் முன்னறிவித்தல் இன்றி தங்க நகைகளை மீட்கும் வசதியுடன், 24 கரட் பவுணுக்கு

ரூபா. 62,000/- அதிகபட்ச முற்பணத் தொகை.

24 மணிநேர அழைப்பு மையம்: 0112 350000
www.dfcc.lk

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

## கொரோனா 2,687

கொழும்பு, ஜூலை 17
நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 687 ஆக அதிகரித்துள்ளது. நேற்று 13 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

நேற்று அடையாளம் காணப்பட்டவர்களில் 8 பேர் கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தைச் சேர்ந்தவர்களது உறவினர்களாவர். 4 பேர் கட்டாரில் இருந்து நாடு திரும்பியவர்கள், ஒருவர் யு.ஏ.ஈயிலிருந்து திரும்பியவர் என்று என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார். (ஏ)

# சுகாதார வழிகாட்டல் வர்த்தமானி விரைவில்

## அமைச்சர் பவித்திரா தகவல்

கொழும்பு, ஜூலை 17
**நாடாளுமன்றத் தேர்தலின்போது பின்பற்றப்பட வேண்டிய சுகாதார பாதுகாப்பு வழிகாட்டல் ஆலோசனைகள் உள்ளடக்கிய வர்த்தமானி அடுத்த இரு நாள்களுக்குள் வெளியிடப்படும் என்று சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி நேற்றுத் தெரிவித்தார்.**



தேர்தலின்போது பின்பற்றப்பட வேண்டிய சுகாதார பாதுகாப்பு வழிகாட்டல் ஆலோசனைகள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் வெளியிடப்பட்டு 5 வாரங்கள் கடந்துள்ளன. எனினும் அவை இன்னும் வர்த்தமானி அறிவித்தலாக வெளியிடப்படாமையால் பரப்புரைக் கூட்டங்களில் சமூக இடைவெளி உள்ளிட்ட சுகாதார பாதுகாப்பு ஆலோசனைகள் பின்பற்றப்படாமை தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியாத நிலைமை காணப்படுவதாக சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய அண்மையில் கவலை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

## பெரமுன – சு.க. மோதல் டோஸ் குடுத்த கோத்தா!

கொழும்பு, ஜூலை 17
அண்மைக் காலமாக பொதுமக்கள் முன்னணியினதும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரமுகர்களும் பகிரங்க மோதலில் ஈடுபடுவதை கடும் தொனியில் விமர்சித்துள்ளார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச.

இந்த மோதலில் தீவிரமாக ஈடுபடும் தனது தீவிர விசுவாசியான பிரசன்ன ரணதுங்கவையும் வைத்துக்கொண்டு, நேற்றுமுன்தினம் அமைச்சரவைக் கூட்டத்தில் கடுமையான அதிருப்தியை கோத்தாபய வெளியிட்டுள்ளார்.

கம்பஹா, பொலன்னறுவை, மாத்தறை மாவட்ட பிரமுகர்களே இந்த மோதலில் ஈடுபட்டு வருகிறார்கள். இரு கட்சிகளின் வேட்பாளர்களையும் சேறு பூசுவது, பொதுமக்கள் முன்னணியின் தேர்தல் பரப்புரையை பெரிதும் பாதிப்பதாகவும், உடனடியாக இந்த விதமான மோதல்களை சம்பந்தப்பட்டவர்கள் நிறுத்திக் கொள்ள வேண்டுமென்றும் தெரிவித்துள்ளார். (ஒ.5)



### மன்னாரில்

# அனுமதியின்றி மேற்கொள்ளப்படும் கட்டுமானங்ளை நிறுத்த தீர்மானம்

மன்னார், ஜூலை 17
மன்னார் பஸார் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் மன்னார் நகர சபையின் அனுமதியின்றி மேலதிகமாக மேற்கொள்ளப்பட்டுள்ள கட்டுமானப்பணிகளை உடனடியாக அகற்ற மன்னார் நகர சபையால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மன்னார் நகர சபையின் 29 ஆவது அமர்வு நேற்று வியாழக்கிழமை நகர சபை முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தலைமையில் நடைபெற்றது. இதன் போது சபை உறுப்பினர்களான மைக்கல் கொலின் மற்றும் ஜோசப் தர்மன் ஆகியோர் மன்னார் பஸார் பகுதியில் மன்னார் நகர சபைக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்கள் சிலவற்றில் மேலதிகமாக குறித்த வர்த்தக நிலையங்களை நடத்துபவர்கள் கட்டுமானப்பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

கழிவு நீர் வடிகான்களுக்கு மேற்பகுதியிலும் கட்டுமானப்பணியை மேற்கொண்டுள்ளனர். ஆனால் மன்னார் நகர சபை பிரிவில் உள்ள வீடுகளுக்கு சுற்றுமதில் அமைப்பது என்றால் கூட மன்னார் நகர சபையின் அனுமதியைப் பெற்றுச் சுற்று மதில் அமைக்க வேண்டும். ஆனால் மன்னார் பஸார் பகுதியில் அதுவும் மன்னார் நகர சபைக்குச் சொந்தமான சில வர்த்தக நிலையங்களில் மேலதிகமாக கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, கழிவு நீர் வடிகானுக்கு மேற்பகுதியிலும் கட்டுமானப்பணிகள் இடம்பெற்றுள்ளது. எனவே குறித்த நடவடிக்கைகளுக்கு உடனடியாக மன்னார் நகரசபை உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு குறித்த கட்டுமானப் பணிகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை முன்வைத்தனர். இதற்கு சபை உறுப்பினர்கள் முழு ஆதரவை வழங்கினர். இதன்போது எதிர்வரும் 14 நாள்களுக்குள் மேலதிகமாக மேற்கொள்ளப்பட்ட கட்டுமானப்பணிகளை குறித்த வர்த்தக நிலையங்களை நடத்துபவர்கள் அகற்ற வேண்டும். அல்லது மன்னார் நகர சபை குறித்த கட்டுமான பணிகளை அகற்றும் என தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. (ஐ-56)

## புவனேகபாகுவின் அரசவை தகர்ப்பு

குருநாகல் அரசவையின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு பொலிஸாருக்கு அறிவித்திருந்த நிலையில், அது தகர்க்கப்பட்டமை தொடர்பில் தொல்பொருள் ஆணையாளர் நாயகம் பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்துள்ளார்.

முதற்தடவையாக குருநாகலை இராசதானியாக்கிக் கொண்ட இரண்டாவது புவனேகபாகு மன்னர், பலகையால் உருவாக்கப்பட்ட மேடையில் தமது அரசவையை நடத்தியிருந்தார். குருநாகல் நகர மத்தியிலுள்ள இந்த அரசவையின் பாதுகாப்பிற்காக பின்னர் ஒரு கட்டடம் அமைக்கப்பட்டது. இந்த அரசவையும் அதன் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்ட கட்டடமும் தொல்பொருள் சின்னங்களாக தொல்பொருள் திணைக்களத்தின் மேற்பார்வையில் இருந்தன.

இந்தக் கட்டடத்தின் ஒரு பகுதி கடந்த செவ்வாய்க்கிழமை புல்டோசர் மூலம் தகர்க்கப்பட்டுள்ளது. இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்களை உடனடியாக சட்டத்தின் முன் நிறுத்துமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது என்று தொல்பொருள் ஆணையாளர் நாயகம் கலாநிதி செனரத் திசாநாயக்க கூறினார். (ஏ)

### தனியார் தொழிற்துறையினருக்கு

# செப்ரெம்பர் வரையில் சம்பளம் வழங்கப்படும்

கொழும்பு, ஜூலை 17
கொரோனாத் தொற்றால் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு மத்தியில் தனியார் துறை ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவது தொடர்பில் இணக்கம் காணப்பட்ட கால எல்லையை நீடிப்பதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

கடந்த மே மற்றும் ஜூன் மாதங்களில் தொழிலின்மை காரணமாக ஊழியர்களை வீடுகளில் தங்கவைக்க நேரிட்ட நிறுவனங்களின் ஊழியர்களுக்கான அடிப்படைச் சம்பளத்தில் 50 வீதம் அல்லது 14 ஆயிரத்து 500 ரூபா ஆகிய இரண்டில் மிகவும் சாதகமான தொகையைச் செலுத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

சேவை வழங்குநர்கள், தொழிற் சங்கங்கள் மற்றும் திறன்விருத்தி மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற பேச்சில் இணக்கம் காணப்பட்டுள்ளது. இந்த இணக்கப்பாட்டிற்கு அமைய தனியார் துறையினருக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வரை அந்தத் தொகையை செலுத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் இணை அமைச்சரவை பேச்சாளர், அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். (ஒ.5)

# தனிமைப்படுத்தப்பட்டுள்ள இடங்களுக்கு வாக்காளர்அட்டை விநியோகம் நிறுத்தம்

கொழும்பு, ஜூலை 17
தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகள் மற்றும் வீடுகளுக்கு, வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் செயற்பாடு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.


சுகாதார ஆலோசனைகளுக்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று பிரதி தபால்மா அதிபர் ராஜித ரணசிங்க கூறுகின்றார். சுகாதார மற்றும் ஏனைய தரப்புகளின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக, அந்தப் பகுதிகளில் வாக்காளர் அட்டைகளை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய நிலைமையின் கீழ், சுகாதார ஆலோசனைகள் மற்றும் வழிமுறைகளைப் பின்பற்றியே தபால் திணைக்களம் செயற்பட்டு வருவதாக பிரதித் தபால்மா அதிபர் ராஜித ரணசிங்க குறிப்பிடுகின்றார்.

இதேவேளை, வாக்காளர் அட்டைகளைப் பொறுப்பேற்கும் சந்தர்ப்பத்தில் கையொப்பமிடுவதற்காக பிரத்தியேகமாக பேனைகளைப் பயன்படுத்துமாறு தபால் திணைக்களம் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. எதிர்வரும் 19 மற்றும் 26ஆம் திகதிகளில் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படவுள்ளன. (ஒ.5)

# யாழ்ப்பாணம் - கிளிநொச்சி
# தேர்தல் மாவட்டம்
## நாடாளுமன்றத் தேர்தல் - 2020

எங்கள் தேசம் எங்கள் சுவாசம்
எங்கள் எழுச்சி வாக்குப் புரட்சி
தமிழ் தேசத்தின் விடியலுக்காய்
உங்கள் கைகளில் உங்கள் தேசம்
இளைஞர்களே யுவதிகளே
வருங்கால சந்ததிகளே
உங்கள் எதிர்காலம் உங்கள் கைகளில்
விழித்தெழுவோம் காத்திடுவோம்
எங்கள் தமிழ்த் தேசத்தைக் கட்டி எழுப்புவோம்.



## பரநிருபசிங்கம் வரதராஜசிங்கம் (விண்ணன்)

X 5

## உண்மைகள் யாவும் அம்பலத்திற்கு....

# வடக்கு மாகாண முஸ்லிம் மக்களே கூட்டமைப்புக்கு வாக்களியுங்கள்

## முஸ்லிம் ஆதரவாளர் வட்டம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 17

**வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த முஸ்லிம் மக்கள் இம்முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரித்து, வாக்களிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முஸ்லிம் ஆதரவாளர் வட்டத்தினால் கோரப்பட்டுள்ளது.**

இது குறித்து அவர்களால் யாழ் ஊடக அமையத்தில் வைத்து வெளியிடப்பட்ட பிரகடனத்தில் மேலும் உள்ளதாவது:

மிக நீண்டகாலமாக இழுத்தடிப்புச் செய்யப்படுகின்ற எமது மக்களின் மீள்குடியேற்றம் மற்றும் வடக்கின் தமிழ் பேசும் மக்களாக நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்காக தமிழ் முஸ்லிம் மக்கள் ஐக்கியமாகுதல் என்கின்ற இரண்டு விடயங்கள் எமது சிந்தையை ஈர்க்கின்றன. மீள்குடியேற்றத்திற்கான அடிப்படைகளை ஏற்படுத்துதல், திட்டமிடல்களை உருவாக்குதல், வளங்களை ஒருங்கிணைத்தல் போன்ற பல்வேறு விடயங்கள் இன்னமும் உரியமுறையில் அணுகப்படவில்லை. எனவே பாதிக்கப்பட்ட வடக்கு மக்களாக எம்மையும் அடையாளப்படுத்தி வடக்கின் மக்கள் அனைவருக்குமான பொதுவான மீள்குடியேற்றச் செயற்றிட்டத்தோடு வடக்கு முஸ்லிம் மக்களும் உள்வாங்கப்பட வேண்டிய தேவையை நாம் உணர்கின்றோம். அதற்கான தலைமைத்துவத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினாலேயே வழங்க முடியும். இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த நாட்டின் தமிழ் பேசும் மக்களாக தமிழ் முஸ்லிம் மக்கள் நாம் எல்லோரும் ஒன்றிணைய வேண்டியிருக்கின்றது. அதற்கான தலைமைத்துவத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழங்கும். மேலும் தமிழ் மக்களின் ஜனநாயக வழிமுறைக் கூடான உரிமைப் போராட்டத்தில் வடக்கு முஸ்லிம்களாகிய நாமும் பங்கெடுக்க விரும்புகின்றோம். அவ்வாறே வடக்கில் தமிழ் பேசும் மக்களாக தமிழ் முஸ்லிம் மக்கள் இணைந்து இத் தேர்தலில் ஒரு விசேட தீர்மானத்தை எடுக்க வேண்டிய அவசியத்தில் இருக்கின்றோம். எனவே மேற்கூறிய விடயங்களின் அடிப்படையில் வடக்கு முஸ்லிம் மக்கள் இம்முறை தமது வாக்குகளைத்தமிழ்மக்கள்நீண்டகாலமாக ஆதரித்து மக்கள் ஆணையை (வாக்குகளை) வழங்கிவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வீட்டுச் சின்னத்திற்கு' வழங்குவதனூடாக ஒரு முன்மாதிரிமிக்க நகர்வை முன்னெடுக்கமுடியும் என நாம் நம்புகின்றோம். இவ்வாறான ஒரு தீர்க்கமான முடிவினை நாம்பின்வரும்நியாயப்பாடுகளின் அடிப்படையில் முன்னெடுக்க முடியும். இலங்கை முஸ்லிம் மக்களை ஒரு தனியான இனத்துவமாகவும், இறைமை அதிகாரமுள்ள மக்களாகவும், சுயநிர்ணய உரித்துடையவர்களாகவும் அரசியல் பரப்பில் அறிமுகப்படுத்திய பெருமை தந்தை செல்வா அவர்களையே சாரும். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாப்பிலே இது மிகவும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. என்றுள்ளது. (ப)




# கொரோனா தொற்றும் என்று மஹிந்த, கோத்தாவுக்கு பயம்

## ஹிருணிக்கா கிண்டல்

கொழும்பு, ஜூலை 17

ஜனாதிபதி , பிரதமர் ஆகியோர் வயதானவர்கள் என்பதால் வைரஸ் தொற்றுஏற்பட்டால் பாதிப்புகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படும். இதனாலேயே தேர்தல் பிரசாரக் கூட்டங்களை நிறுத்திவைத்துள்ளார்களே தவிர மக்கள் மீது கொண்டுள்ள அக்கறையின் காரணமாக அல்ல என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் ஹிருணிக்கா பிரேமச்சந்திர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஐக்கிய மக்கள் சக்தியில் பெண்கள் தொடர்பான செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்காக ஸ்தாபிக்கப்பட்டுள்ள 'ஐக்கிய பெண்கள் சக்தி ' செயற்றிட்டத்தின் அனைத்துப்பொறுப்புகளையும் , கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எனக்கே பெற்றுக் கொடுத்துள்ளார். கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக தங்களது பிரசாரக் கூட்டங்களை நிறுத்தி வைப்பதாக தெரிவித்துள்ளனர். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷவும் , பிரதமர் மஹிந்த ராஜபக் ஷவும் வயோதிபர்கள் என்பதால் அவர்களுக்கு வைரஸ் தொற்றிவிடும் என்பதன் காரணமாகவே , தேர்தல் பிரசாரங்களை நிறுத்திவைத்துள்ளார்கள். அரசாங்கம் தேர்தல் பிரசாரக் கூட்டங்களை நிறுத்துமாறும், தேர்தலைப் பிற்போடுவதாகவும் உறுதியாக அறிவித்தால் நாங்களும் எங்களது கூட்டங்களை நிறுத்துவோம் - என்றார். (ப)

*தேர்தல் நிலைமைகளை ஆராய*

# மட்டக்களப்பில் தேர்தல்கள் ஆணைக்குழு



மட்டக்களப்பு, ஜூலை 17

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் தேர்தல்கள் ஆணைக்குழு மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்துக்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை பிரதி தேர்தல் ஆணையாளர்களான எம்.எம்.எஸ்.கே.பண்டார, எஸ்.அச்சுதன் ஆகியோர் இவ்வாறு விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டச் செயலரும், தெரிவத்தாட்சி அலுவலருமான திருமதி. கலாமதி பத்மராஜா தலைமையிலான தேர்தல் கடமை நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் குழுவை அவர்கள் சந்தித்து தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பான முன்னேற்றம் பற்றிக் கலந்துரையாடினர். (ப)

# அரசியல் பழிவாங்கல்களை அரசு உடன் நிறுத்த வேண்டும்

## முன்னாள் பிரதி அமைச்சர் அப்துல்லாஹ் மஹ்ரூப் கூறுகிறார்

அரசியல் பழிவாங்கல் கைதுகளை அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும். இவ்வாறான கைது முயற்சிகள், இணக்கப்பாட்டு அரசியலில் அரசாங்கத்திற்கு நாட்டமில்லை என்பதையே வெளிப்படுத்துகின்றது என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் பிரதியமைச்சருமான அப்துல்லாஹ் மஹ்ரூப் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

சமூகம்சார் அரசியல் நலன்களை முன்னெடுக்கும் சிறுபான்மைத் தலைவர்களை, ராஜபக்ஷக்களின் அரசாங்கம் நெருக்குதலுக்குள்ளாக்கி வருகின்றமை கவலையளிக்கிறது. விசாரணை, கைது, பிடிவிறாந்து, வாக்குமூலமென எமது கட்சியின் தலைவர் ரிஷாத் பதியுதீனையும் இந்த அரசாங்கம் தொல்லைப்படுத்துகிறது. தங்களின் நிகழ்ச்சி நிரலுக்கு இணங்காத, எமது தலைவரை அச்சுறுத்துவதை அரசாங்கம் நிறுத்த வேண்டும். பொறுப்புமிக்க ஓர் அரசியல் தலைவரைத் தொடர்ந்து கெடுபிடிக்குள்ளாக்குவது, அவரை நம்பியுள்ள சமூகத்தின் மீதான அச்சுறுத்தல், அடக்குமுறைகளாகவே நாம் பார்க்கிறோம். ஆதாரங்களின்றியும், அத்துமீறியும் எமது தலைவருக்கு கொடுக்கப்படும் தொடர் அழுத்தங்களால், இந்த அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையை எமது மக்கள் இழந்து வருகின்றனர் - என்றார். (ப)

# பெரும்பான்மை அவசியமில்லை

## வாசுதேவ தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 17

நாட்டின் அரசமைப்புச் சட்டத்தில் மாற்றங்களைச் செய்வதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் அவசியமில்லை என முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அரசமைப்புச்சட்டத்தில் திருத்தங்களைச்செய்ய சிறியளவிலான பெரும்பான்மை பலம் போதுமானது. மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் கிடைக்காது போனால், புதிய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்குவதற்காக சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்ல முடியும். சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி, பெரும்பான்மையான மக்களின் அனுமதியைப் பெற்று புதிய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கலாம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# தென்னிலங்கை கட்சிகள் மீது ஆர்வம் காட்டும் இளையோர்

## கூட்டமைப்பின் கவனயீனமே காரணம் என்கிறார் அரவிந்தன்

கூட்டமைப்பின் கவனயீனத்தால் இளைஞர்கள் தென்னிலங்கைக் கட்சிகள் மீது ஆர்வம் காட்டுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. இது தமிழ்ச் சமூகத்துக்குப் பார தூரமான விளைவை ஏற்படுத்தும் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட தலைவரும் வேட்பாளருமான ச.அரவிந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்தாமையால் வடக்கு கிழக்குப் பகுதியிலுள்ள இளைஞர் யுவதிகள் பெரும்பான்மைக் கட்சிகளையும் அதன் வேட்பாளர்களையும் ஆதரிக்கும் நிலை உருவாகியுள்ளது. இந்த நிலைமையால். தமிழ்ச் சமூகத்துக்குப்பாரதூரமானபின் விளைவை ஏற்படுத்துகின்ற யதார்த்தமான நிலைஉருவாகியுள்ளது. அத்தகைய பெரும்பான்மைக் கட்சிகளில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள், இளைஞர்களை மையப்படுத்தி வேலைவாய்ப்புத் தருகின்றோம். விளையாட்டுப் பொருள்கள் உட்பட அனைத்து உதவிகளையும் செய் கின்றோம் எனக் கூறுகின்றார்கள். இந்த நிலைப்பாடுகளால் வடக்கு கிழக்கைச் சேர்ந்த இளைஞர்கள் அவர்கள் பக்கம் ஆதரவு வழங்குகின்ற நிலைமை காணப்படுகின்றது. இளைஞர், யுவதிகள் பெரும்பான்மைக் கட்சிகள் பக்கம் சாய்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே காரணம்- என்றார். (ப)

# தனிமைப்படுத்தப்பட்டோருக்கான வாக்களிப்புத் திகதி ஓகஸ்ட் 4

கொழும்பு, ஜூலை 17

வீடுகளில் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கு தனியான அல்லது நடமாடும் வாக்கெடுப்பு நிலையங்களை அமைப்பது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு கவனம் செலுத்தியுள்ளது. அதேபோன்று தனிமைப்படுத்தல் நிலையங்களிலும் வாக்கெடுப்பு நிலையங்களை அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்ததன் காரணமாக தபால் மூல வாக்களிப்பைத் தவறவிட்ட வாக்காளர்களுக்கு ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதி வாக்களிக்க வாய்ப்பளிப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது:

தனிமைப்படுத்தப்பட்டுள்ள வாக்காளர்களுக்கான 3 வேலைத்திட்டங்கள் குறித்து நாம் கலந்துரையாடியுள்ளோம். வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ள முடியாது என்று ஆரம்பத்தில் எண்ணினோம். எனினும் தற்போது அதிகளவானவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதால் அவர்களுக்காக தனி வாக்கெடுப்பு நிலையங்களை அமைப்பது அல்லது நடமாடும் வாக்கெடுப்பு நிலையங்களை நிறுவுவது குறித்து அவதானம் செலுத்தியுள்ளோம்.

தேர்தல்கள் ஆணைக்குழு சட்ட ரீதியான ஆலோசனைகளைப் பெற்று அதற்கான நடவடிக்கை எடுக்கும். சுய தனிமைப்படுத்தலில் மற்றும் இரண்டாவது முறையாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களை சாதாரண வாக்கெடுப்பு நிலையங்களுக்கு அனுமதிப்பதற்கு நாம் எதிர்பார்க்கவில்லை. வாக்கெடுப்பு நிலையங்களில் வைரஸ் பரவலுக்கு நாம் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை. தனிமைப்படுத்தல் நிலையங்களிலுள்ளவர்களுக்கும் நாம் நிச்சயமாக வாக்களிக்கும் உரிமையைப் பெற்றுக்கொடுப்போம். அங்கு சேவையாற்றும் அரச அதிகாரிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் சுகாதாரத்துறையினரின் உதவியுடன் அங்கு வாக்கெடுப்பு நிலையங்கள் அமைக்கப்படும். கொரோனா ஒழிப்பிற்கான ஜனாதிபதி செயலணியுடன் இணைந்து இதற்கான யோசனைகளைப் பெறுவதற்கு எதிர்பார்த்துள்ளோம், என்றார்.

(ஒ.5)

# பொலிஸ் நிலையம் முன்பாகப் பதற்றம்

கொழும்பு, ஜூலை 17

மொரட்டுவை, லுனாவ பகுதியில் பொலிஸார் அண்மையில் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் அங்குலான பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்ததை அடுத்து அங்குலான பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்றுப் பதற்றமான நிலை நிலவியது.

இந்த துப்பாக்கிப் பிரயோக சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சாட்சியாளர்கள் இருவர் நேற்றுக் காலை 5 மணியளவில் பொலிஸ் அதிகாரிகள் சிலரால் ஜீப் ஒன்றில் அழைத்துச் செல்லப்பட்டதை அடுத்து பொலிஸ் நிலையத்தின் முன்னால் பிரதேச வாசிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பொலிஸ் நிலையத்தின் மீது கல்வீச்சு மேற்கொண்டுள்ளனர். இதனையடுத்து பொலிஸார் அவர்கள் மீது கண்ணீர்ப் புகை பிரயோகம் மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், குறித்த வழக்குத் தொடர்பான விசாரணைகள் நேற்று கல்கிஸ்ஸ நீதவான் நீதிமன்றத்தில் இடம்பெற்ற நிலையில், இவ்வாறு பொதுமக்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ.5)

# சிறுவனை காணவில்லை

வவுனியா, ஜூலை 17

வவுனியா, சாம்பல் தோட்டப் பகுதியைச் சேர்ந்த 14 வயதுச் சிறுவனைக் காணவில்லை என்று வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் தனது உறவினர்களுடன் வசித்து வந்த 14 வயதுடைய விஜேந்திரன் பிரசாத் என்ற சிறுவன் உறவினர் வீட்டில் இருந்து கடைக்கு நேற்றுமுன்தினம் சென்றுள்ளான். பின்னர் வீடு திரும்பவில்லை. சிறுவனை இரவு வரை தேடிய உறவினர்களும், அயலவர்களும் அவனைக் கண்டுபிடிக்க முடியாமையால் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

(ஒ.5,18)

பாராளுமன்றத் தேர்தல் – 2020 – யாழ்ப்பாணம் மாவட்டம்



# தொல்பொருள் என்ற பெயரில் தோண்டப்படும் கிடங்குகளிலிருந்து புத்தர் உயிர்த்தெழுவார்

## தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலர் சுட்டிக்காட்டு

**மட்டக்களப்பு, ஜூலை 17**

**கிழக்கில் தொல்பொருள் என்ற பெயரில் தோண்டப் போகும் ஒவ்வொரு கிடங்கில் இருந்தும் புத்தர் உயிர்த்தெழப் போகின்றார். இப்போதைக்கு தொல்லியல் செயலணியின் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன என ஆளும் கட்சி சார்பான வேட்பாளர்கள் சொல்கின்றார்கள். ஆனால் அது முற்றாக நிறுத்தப்பட் டுள்ளதாக எந்தத் தகவலும் இல்லை என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளருமாகிய கி.துரைராசசிங்கம் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

எமது இனம், எமது மொழி என்பன தொடர்பில் கவலை கொள்ளாமல் அபிவிருத்தி, உணவு, உடுபுடவை என்று மட்டும் இருந்ததன் காரணமாகவே நாட்டில் தமிழர்கள் வாழ்ந்த பல இடங்கள் இன்று சிங்களப் பிரதேசங்களாகப் போயுள்ளன. ஆனால் வடக்கு கிழக்கில் தமிழ் அரசுக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வழிகாட்டலின் காரணமாகவே எமது நிலத்தில் எமது இனம், எமது மொழியோடு வாழ முடிகின்றது. எமது மிகப் பெரிய போராட்டம் முள்ளிவாய்க்காலிலே மிகப் பெரிய அநியாயத்துடன் முடிவுற்றதன் பிறகு எம்மை நோக்கி இருந்த பெரும் அபாயம் எமது மக்கள் எடுத்த தீர்மானத்தின் பிரகாரம் சற்றே தணிந்தது. போர் மௌனிக்கப்பட்ட பின்னர் எமது மக்கள் சரியான தீர்மானத்தை எடுத்திருக்காவிட்டால் பத்து ஆண்டுகளுக்குள்ளே நாம் இருந்த இடமெல்லாம் இல்லாமல் எமது அடையாளத்தைத் தொலைத்த இனமாக ஆகியிருப்போம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் எமது உரிமை தொடர்பிலான அரசமைப்பை மையப்படுத்தியதான கோரிக்கையை நாடாளுமன்றத்தில் ஒலிக்கச் செய்தார்கள். இதன் காரணமாக ஒரே நாடு. ஒரே மக்கள், ஒரே மொழி என்கின்ற அவர்களின் வேகம் தடைப்பட்டுப் போனது. தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கொடுக்கும் ஆதரவின் காரணமாக சிங்களப் பெருந்தேசியவாதம் நாட்டை அவர்கள் விரும்பிய படி சிங்கள பௌத்த ஏகாதிபத்தியத்துக்குள் கொண்டுவர முடியாத அவலம் அவர்களுக்கு இருக்கின்றது. தொல்லியல் ஆய்வுக்காக ஓர் அணியை உருவாக்கியுள்ளார். தொல்லியல் ஆய்வு என்றால் என்ன மண்ணைத் தோண்டி சரித்திரத்தைக் கண்டறிவது.

ஆனால் இங்கு என்ன நடைபெறும் தோண்டப் போகும் ஒவ்வொரு கிடங்கில் இருந்தும் புத்தர் உயிர்த்தெழப் போகின்றார். புத்தர் உயிர்த்தெழும் போது அங்கெல்லாம் பௌத்த ஆலயங்கள் உருவாகப் போகின்றன. அவர்களுடைய பௌத்த சாசனத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. பௌத்த ஆலயம் ஒன்று இருக்கும் பிரதேசத்தில் அந்த ஆலயத்தின் மணிஒலி எவ்வளவு தூரத்திற்குக் கேட்கிறதோ அவ்வளவு தூரத்திற்கு பௌத்தர்கள் குடியேற்றப்படல்வேண்டும் என்று. அந்த வகையில் இங்கு அரச மரம் இருக்கின்ற இடமெல்லாம் பௌத்த மத சின்னங்கள் வரப்போகின்றன- என்றார். (ப-150)

# அமைச்சர் அந்தஸ்தை வைத்து எதையுமே சாதிக்க முடியாது

## ரெலோ அமைப்பின் பிரதித் தலைவர் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 17

அமைச்சர் அந்தஸ்தை வைத்து நாங்கள் எதையும் சாதித்து விட முடியாது. எமது மக்களின் நிரந்தர சுயஉரிமைகளை முதலில் பெற்று நலிவடைந்துள்ள எமது பிரதேசங்களை நாங்களே அபிவிருத்தி செய்ய வேண்டும் என ரெலோ அமைப்பின் பிரதித் தலைவரும், கிழக்கு மாகாணசபை முன்னாள் பிரதித் தவிசாளருமாகிய இந்திரகுமார் பிரசன்னா தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

இன்றைய காலகட்டத்தில் எமது வீர மறவர்களின் தியாகங்களை மறந்து பலர் கதைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இன்றைய இளம்சந்ததிகள் எமது போராட்டங்களின் வரலாறு, வலி, வேதனைகளை உணராமல் இருப்பதும் வேதனைக்குரியது. 2001ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடாகத் தமிழர்கள் அனைவரும் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும் என்பதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. தமிழர்களின் விடுதலை, சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாட்டோடு உருவாக்கப்பட்ட இக்கூட்டமைப்பில் இருந்து கொண்டு தற்போது ஒரு சிலர் தடுமாறிக் கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறான வரலாறுகள் தெரியாதவர்களாகப் பலர் இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து கொண்டு போராட்டத்திற்கு எதிராகக் கதைப்பதும், அமைச்சர் பதவி பெறுவது தொடர்பிலுமாகப் பேசிக் கொண்டிருக்கின்றார்கள். நாங்கள் அமைச்சர் அந்தஸ்து பெறுவதற்காகப் போராடவில்லை. எமது மக்களின் உரிமை, விடுதலைக்காகவே போராடினோம். இந்த ஆயுதப் போராட்டத்தின் மூலமாகத்தான் இந்த நாட்டிலே தமிழ் மக்களுக்கு அநீதிகள் நடைபெறுகின்றன என்ற விடயத்தை சர்வதேசம் அறிந்தது. ஜனநாயக வழியூடாக அக்காலத்தில் இவற்றைச் சர்வதேசம் அறியவில்லை. இந்த நாட்டில் அமைக்கப்பட்ட வடகிழக்கு மாகாணசபை முறைமை கூட எமது ஆயுதப் போராட்டத்தின் மூலம் கிடைக்கப் பெற்ற பெறுபேறேயாகும் - என்றார். (ப)

# தேர்தலை ஒத்திவைத்தால் வரும் விளைவை ஏற்கவும்

## தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு பெரமுனவின் வக்கும்புர சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 17

கொரோனா வைரஸ் பரவல் என்ற போர்வையில் மீண்டும் தேர்தலை ஒத்திவைக்காது, முன்னர் அறிவித்துள்ளபடியே நடத்துமாறும் தவறின், நாட்டில் ஏற்படும் நெருக்கடியான நிலைமைகளுக்கு தேர்தல் ஆணைக்குழு பொறுப்புக் கூற வேண்டும் என்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இரத்தினபுரி மாவட்ட வேட்பாளர் ஜானக்க வக்கும்புர தெரிவித்துள்ளார்.




இரத்தினபுரியில் அவர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் மேலும் தெரிவித்ததாவது:

மார்ச் 2 ஆம் திகதி முதல் தேர்தலை ஒத்திவைத்த தேர்தல் ஆணைக்குழு மீண்டும் தேர்தலை ஒத்திவைக்க முயற்சித்து வருகிறது. இது நாட்டுக்கு நல்லதல்ல. சர்வதேச சதித்திட்டத்தை இவர்கள் அரங்கேற்றி வருகின்றனர். மக்களின் பிரதிநிதிகள் இல்லாமல் அரச அதிகாரிகளுக்கும், ஜனாதிபதிக்கும் நாட்டை நிர்வாகம் செய்வது சிரமமானது. இதனால்தான் நாளைய தினத்திலாவது தேர்தலை நடத்துங்கள் என்று கேட்கிறோம். கொரோனா வைரஸ் பரவல் மோசமாக மாறினால், தேர்தலை ஒத்திவைக்க இணங்குவோம். ஆனால் மோசமான நிலைமை இல்லை - என்றார். (த)

# அபிவிருத்தி, வேலைவாய்ப்புகளுக்காக உரிமையைத் தாரைவார்க்க முடியாது

## கூட்டமைப்பின் வேட்பாளர் ஞானப்பிரகாசம் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 17

தற்போதைய எமது சமுதாயம் வழிமாறிய தவறான பாதையில் சென்று கொண்டிருக்கின்றது. அபிவிருத்தி, வேலை வாய்ப்பு என்பது தேவையான ஒன்று தான். ஆனால் அவற்றுக்காக எமது உரிமைகளைத் தாரைவார்க்கக்கூடாது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் மு.ஞானப்பிரகாசம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

எமது எண்ணங்களை, நோக்கங்களைச் சரியாக முன்நின்று நடத்துவது மிகவும் முக்கியமான விடயம். வருங்காலத்தில் இன்னும் மாறுபட்ட கோணங்களில் எமது இனத்தின் விடுதலை நசுக்கப்பட இருக்கின்றது. எனவே அவற்றில் இருந்து நாங்கள் வெளியேறுவதற்கும் எமது இனத்தின் பாதுகாப்பிற்கும் நாங்கள் இப்போதே தீர்மானம் எடுக்கவேண்டும். தற்போது இருக்கின்ற அரசாங்கம் எமது இனத்தின் அடையாளத்தை எம்மவர்களை வைத்தே மாற்றும் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. நாங்கள் இதனைக் கவனமாகக் கையாண்டு இந்த அரசு எமக்குத் தருகின்ற நெருக்கடிகளில் இருந்து விடுபட நாம் எல்லோரும் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும்.

எமது போராட்டங்கள் மறக்கப்படக் கூடாது. எமது இன விடுதலைப் போராட்டத்தில் நாம் இழந்த இழப்புகளை பின்னுள்ள எமது சமுதாயம் அறிந்து கொள்ளும் வகையில் செயற்பட வேண்டும். தற்போதைய எமது சமுதாயம் வழிமாறிய தவறான பாதையில் சென்று கொண்டிருக்கின்றது. அந்த நிலைமையை மாற்றி அவர்களை எமது இனத்தின்பால், தேசியத்தின்பால் அக்கறை கொண்டவர்களாக மாற்ற வேண்டும். எமது போராட்டம், அதற்கான இழப்புகள் அத்தனையும் மறைக்கப்படக் கூடியதான காலகட்டமிது. அதற்காகவே அரசினால் பல திட்டமிட்ட செயற்பாடுகள் மேற்கொள்ளப் படுகின்றன. இதனை முறியடிப்பதற்கு நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து தொடர்ச்சியாகச் செயற்பட வேண்டும் -என்றார். (ப-150)

# வன்னியில் 90 வீதம் வாக்களிப்பு

வவுனியா, ஜூலை 16

வன்னி மாவட்டத்தில் 30 தேர்தல் முறைப்பாடுகள் இதுவரை பதிவாகியுள்ளன. சிறிய சம்பவங்கள் குறித்த முறைப்பாடுகளே அதிகளவில் இடம்பெற்றுள்ளன நேற்று நண்பகல்வரை 90 வீதமான தபால் வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளன - இவ்வாறு வவுனியா மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகரும் மாவட்டச் செயலருமான சமன் பந்துலசேன தெரிவித்தார்.

இது தொடர்பல் அவர் மேலும் தெரிவித்ததாவது;

2020 நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் தபால் மூலமான வாக்களிப்புக்கள் மிகவும் அமைதியான முறையில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. வாக்களிப்பு நிலையங்களில் எவ்விதமான வன்முறைச்சம்பவங்களோ, அசம்பாவிதங்களோ இடம்பெற்றிருக்கவில்லை . இது குறித்து முறைப்பாடுகள் எவையும் பதிவாகவில்லை . சுகா தாரத் துறை அமைச்சினுடைய ஆலோசனைகளுக்கு அமைவாக தபால் மூலமான வாக்களிப்புகள் முற்று முழுதாக பயன்படுத்தப்பட்டு நடைபெறுகின்றன. தபால் மூலமான வாக்களிப்புக்கள் இன்றுடன் (நேற்று) 90 வீதமாகக் காணப்படுகின்றது . வன்னி மாவட்டத்தில் மிகவும் வெற்றிகரமான முறையில் அது இடம் பெற்றுக்கொண்டிருக்கின்றது- என்றார். (ஐ-110)

# மக்களை காக்க அரசு நடவடிக்கை எடுக்கும்

## இரண்டாவது அலை இல்லை என்கிறார் பிரதமர் மஹிந்த

கொழும்பு, ஜூலை 17
நாட்டில் ஏற்பட்டுள்ள சுகாதார நிலைமை தொடர்பில் அரசு மிகுந்த அவதானத்துடன் செயற்பட்டு மக்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்றுக் காலை நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

கொவிட் தொற்று முதன் முதலாக வந்தபோது அதனைக் கட்டுப்படுத்த முடிந்தது. கொரோனா ஒழிப்பு ஜனாதிபதி பணிக்குழு, அத்தியாவசிய சேவை ஜனாதிபதி பணிக்குழு, அரச துறை, சுகாதார துறை, இராணுவம் உள்ளிட்ட முப்படையினர், பொலிஸார் அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர். விசேடமாக உளவுத்துறை மற்றும் சுகாதாரத்துறை ஆகியன செய்த அர்ப்பணிப்பை இங்கு நிச்சயம் நினைவுகூற வேண்டும்.

நாங்கள் எப்போதும் மக்களின் பாதுகாப்பிற்காக நடவடிக்கை எடுத்தவர்கள். அதனால் எதிர்காலத்தில் மக்களைப் பாதுகாப்பதற்கு நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம். தேர்தல் காலம் என்பதால் கொரோனா இரண்டாவது அலை நிலவிவருகிறது என தேர்தல் மேடைகளில் பிரசாரம் செய்து வருகின்றனர். மக்கள் பீதியில் உள்ள நிலையில் தேவையற்ற பீதியை ஏற்படுத்தாது செயற்பட வேண்டியது எமது பொறுப்பாகும்- என்றார். (எ)

# ஒன்ரறை வயதுக் குழந்தை துஷ்பிரயோகத்தால் சாவு!

## தாய் உட்பட மூவர் கைது

கொழும்பு, ஜூலை 17
நீர்கொழும்பு பெரியமுல்ல பகுதியில் ஒன்றரை வயது பெண் குழந்தை துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளது என்று நீர்கொழும்புப் பொலிஸார் தெரிவித்தனர். நீர்கொழும்புப் பொலிஸாரால் இது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள் ளன.

நீர்கொழும்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் உதயகுமார வுட்லரின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த விசாரணைகளின் அடிப்படையில் குழந்தையின் தாயும், இரு ஆண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆண்களில் ஒருவர் குழந்தையின் தாயுடன் முறையற்ற தொடர்பை வைத்திருந்தவர் என்றும், மற்றையவர் அவரின் சகோதரன் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தகவல்களின்படி, நீர்கொழும்பு பெரியமுல்ல பகுதியில் உள்ள பாலமொன்றுக்கு அருகில் கடந்த 13ஆம் திகதி குழந்தை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டபோது, குழந்தையின் தலை பாலத்தின் சுவர் அல்லது அங்கிருந்த பொருளொன்றில் மோதுண்டுள்ளது என்று கருதப்படும் நிலையில், குழந்தை சுகயீனமுற்ற நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளது.

சட்ட வைத்திய அதிகாரியின் விசாரணையும் பிரேதப் பரிசோதனையும் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதில் குழந்தை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டமை தெரிய வந்தது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதையடுத்து குழந்தையின் தாயுடன் முறையற்ற தொடர்பில் இருந்த 22 வயது இளைஞரும், அவரது சகோதரரும் கைது செய்யப்பட்டுள்ளனர். குற்றச் செயலுக்கு உதவி செய்தமை, தகவல்களை மறைத்தமை ஆகிய குற்றச்சாட்டுகளில் குழந்தையின் தாயும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நீர்கொழும்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் உதயகுமார் வுட்லர் தலைமையிலான குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# ஹெரோய்ன் வைத்திருந்த ஒருவர் கைது

சாவகச்சேரி, ஜூலை 17
முச்சக்கரவண்டியில் ஹெரோய்ன் கடத்தி வந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

நேற்று மாலை இவர் சாவகச்சேரி நகர்ப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மதுவரித் திணைக்களத்தினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் முச்சக்கரவண்டியை மறித்துச் சோதனை செய்தபோது அதனுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஹெரோய்ன் போதைப் பொருள் மீட்கப்பட் டது என்று மதுவரித் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

விசாரணையின் பின்னர் சந்தேகநபர் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

# தாஜுதீன் கொலை வழக்கு நவம்பர் 19க்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை 17
வசீம் தாஜுதீன் கொலை வழக்கின் சந்தேகநபர்களான அப்போதைய கொழும்பு பிரதான சட்ட வைத்திய அதிகாரி பேராசிரியர் ஆனந்த சமரசேகர மற்றும் முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அநுர சேனாநாயக்க ஆகியோர் தொடர்பில் நவம்பர் மாதம் 19 ஆம் திகதி நீதிமன்றத்தில் அறிக்கையிடுமாறு கொழும்பு மேலதிக நீவான் கலனி பெரேரா குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு நேற்று உத்தரவிட்டார்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில், முறைப்பாட்டாளர்கள் சார்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் டிலான் ரத்நாயக்க முன்னிலையானார்.

பேராசிரியர் ஆனந்த சமரசேகர உயிரிழந்து விட்டார் என்றும், முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அநுர சேனாநாயக்க கடுமையாக நோய்வாய்ப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுகின்றார் என்றும் அவர் நீதிமன்றத்தில் அறிவித்தார்.

இந்த விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்திய மேலதிக நீதவான், வழக்கை நவம்பர் மாதம் 19 ஆம் திகதி வரை ஒத்திவைத்ததுடன், விசாரணைகளின் முன்னேற்றம் தொடர்பில் நீதிமன்றத்தில் அன்று அறிக்கையிடுமாறு உத்தரவிட்டார்.

நாரஹேன்பிட்டி, ஷாலிகா விளையாட்டரங்குக்கு அருகில் காரினுள் உயிரிழந்திருந்த வசீம் தாஜுதீனின் சடலம் 2012ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி மீட்கப்பட்டிருந்தது. (எ)

# விபத்தில் ஒருவர் காயம்

பளை, ஜூலை 17
சாவகச்சேரி, சங்கத்தானையில் நேற்று மாலை நடந்த மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார். இரு மோட்டார் சைக்கிள்கள் விபத்துக்குள்ளாகியுள்ளன. சங்கத்தானையைச் சேர்ந்த யோகேஸ்வரன் சூரியகுமார் (வயது-61) என்பவரே காயமடைந்துள்ளார். அவர் சிகிச்சைக்காகச் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ-9)

# நடைபாதையில் வாகனம் நிறுத்தினால் சட்டம் பாயும்

யாழ்ப்பாணம், ஜூலை 17
இன்று முதல் வீதிகளின் நடைபாதைகளில் வாகனம் நிறுத்துபவர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோகண தெரிவித்துள்ளதாவது

நடைபாதையில் வாகனங்களை நிறுத்துவது சட்டத்துக்கு முரணானது. அதைத் தடுக்கும் நோக்கில் நாளைமுதல் சிறப்புப் பொலிஸ் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது- என்றார். (எ)



## கசிப்பு உற்பத்தி; ஒருவர் கைது

பளை, ஜூலை 17
செம்பியன்பற்றுப் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.
அவரிடமிருந்து 40 லீற்றர் கோடா, கசிப்பு உற்பத்திக்கான உபகரணங்கள் என்பவை கைப்பற்றப்பட்டதாக பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.
இதேவேளை அரசடிப் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மணல் அகழ்வில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் டிப்பர் வாகன சாரதியும், உழவு இயந்திர சாரதியும் கைது செய்யப்பட்டனர்.
சந்தேகநபர்கள் மூவருக்கும் பொலிஸ் பிணை வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## நாடளாவிய ரீதியில் 75,531 பேர் கைது

நாடளாவிய ரீதியில் கடந்த 39 நாள்களாக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் 75,531 பேர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.
திட்டமிட்ட குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் குற்றப் புலனாய்வு பிரிவினர் விசேட சுற்றிவளைப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.
இதற்கமைய கடந்த மாதம் 6 ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை ஆறு மணிமுதல் நேற்றுமுன்தினம் புதன் கிழமை நள்ளிரவு 12 மணிவரை முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புக்களின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.
சட்டவிரோத ஆயுதங்கள், போதைப் பொருள்கள், சட்டவிரோத மதுபானம் வைத்திருந்தமை தொடர்பிலும், பிடியாணை உத்தரவு வழங்கப்பட்டிருந்தவர்கள் மற்றும் பல்வேறு குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்டவர்களும் இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர்.
இதன்போது போதைப் பொருள் வைத்திருந்தமை தொடர்பில் 17,301 பேரும், கஞ்சா போதைப் பொருளுடன் 7,064 பேரும், ஐஸ் போதைப் பொருளுடன் 589 பேரும் கைது செய்யப்பட்டனர்.
சட்டவிரோத மதுபானம் தொடர்பில் 14,583 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 4 இலட்சத்து 68 ஆயிரத்து 184 லீட்டர் மதுபானம் கைப்பற்றப்பட்டன.
அத்தோடு சட்டவிரோதமான முறையில் ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளை வைத்திருந்தமை தொடர்பில் 166 பேர் கைது செய்யப்பட்டனர்.
இதேவேளை பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 15,152 சந்தேகநபர்களும், வேறுவகையான குற்றச்செயல்களை புரிந்த பலரும் கைது செய்யப்பட்டனர்.
சந்தேக நபர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

### அரச, தனியார் துறை

# பணியாளர் நலனை கவனத்தில்கொள்க

### அனில் ஜாசிங்க வலியுறுத்து



கொழும்பு, ஜூலை 17
அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள் தொடர்பில் அந்த நிறுவனங்களின் தலைவர்கள் பொறுப்புடையவர்களாக இருக்க வேண்டும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று மீண்டும் தலைதூக்கி வரும் நிலையில் இந்த விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
அரசமற்றும்தனியார்துறைநிறுவனங்களில் பணியாளர்களின் சுகாதார நிலைமை தொடர்பாக அவதானம் செலுத்தி, அவர்களில் எவருக்காவது நோய் அறிகுறிகள் தென்படுமாயின், அவர்களுக்கு சிகிச்சையளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
அவர்கள் சேவைக்கு சமூகளிப்பதைத் தவிர்க்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
பணியாற்றும் இடங்களில் உள்ள பிரிவுகளை இயன்றளவு தனித்தனியாக செயற்படுத்துவதுடன், குறித்த பிரிவுகளைச் சார்ந்தவர்கள் தமக்குள் சந்திப்புக்களை மேற்கொள்வதைத் தவிர்க்க ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்- என்றார். (க)

## விபத்தில் ஒருவர் சாவு

கொழும்பு, ஜூலை 17
இரண்டு தனியார் பஸ்கள் டிப்பருடன் மோதிய பின்னர் முன்னால் உள்ள கடைத்தொகுதி மற்றும் மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகின.
அதில் ஒருவர் உயிரிழந்தார்.
இந்த விபத்து பன்னல நகரில் நேற்று அதிகாலை நடந்துள்ளது.
குளியாப்பிட்டிய மற்றும் கிரிஉல்ல பகுதியில் இருந்து வந்த பஸ்கள் விபத்துக்குள்ளாகின.
விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் பலர் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (க)



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கை விளக்க நூல் ஒன்றை அதன் தலைவர் இரா.சம்பந்தன் நேற்றுமுன்தினம் வெளியிட்டார். இதில் நாடாளுமன்றில் இரா.சம்பந்தனின் விசேட உரைகளும், கிழக்கு தொல்லியல் செயலணி தொடர்பாக அவர் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதம் உள்ளிட்ட விடயங்களும் அடங்கியுள்ளன. (த)

## கரையோர காவல் பிரிவால் மீனவரின் படகு மூழ்கடிப்பு

### மீனவரொருவர் படுகாயம்
### திருமலையில் சம்பவம்

திருமலை, ஜூலை 17
கரையோரக் காவல் படையினரின் படகு மோதியதில் ஜமாலியா பிரதேச மீனவர்களின் படகொன்று கடலில் மூழ்கடிக்கப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் திருகோணமலையில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது. மீன்பிடித்து கரை திரும்பிய ஜமாலியா பிரதேச மீனவர்களின் படகொன்றின் மீதே கரையோர காவல் படையினரின் படகு மோதியுள்ளது. இதில் மீனவர் ஒருவர் படுகாயமடைந்ததுடன் படகு பலத்த சேதத்திற்கு உள்ளானது.
அப்துல் மஜீத் மௌஜூத் (வயது - 40) என்ற ஜமாலியா பிரதேச மீனவர் ஒருவரே படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலை அதி தீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை துறைமுகப்பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## முல்லைத்தீவு பெருங்காட்டுக்குள் வழிதவறிய மாணவர்கள் மீட்பு!

முல்லைத்தீவு, ஜூலை 17
முல்லைத்தீவு மாவட்டத்தின் முத்தையன்கட்டு காட்டுக்குள் சென்று திரும்பி வரமுடியாது தவித்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் 9 பேர் ஊரவர்கள், படையினர் மற்றும் பொலிஸாரால் பத்திரமாக நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளனர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கான இறுதியாண்டுப் பரீட்சை கடந்த மாதம் இடம்பெற்றது. இவர்களுக்கான பெறுபேறுகள் இன்னமும் வெளியாகவில்லை. இந்த நிலையில் இவர்களில் 9 பேர் முல்லைத்தீவுக்குச் சுற்றுலா சென்றுள்ளனர்.
உடையார்கட்டு ஊடாக முத்தையன்கட்டுக் குளத்தைப் பார்வையிடுவதற்கு நேற்றுமுன்தினம் காலை சென்றுள்ளனர். இவர்கள் பெருங்காட்டுப் பகுதிக்குள் சென்றுள்ளனர். இராணுவ முகாம்களை அண்மித்த பகுதிகள் ஊடாகச் சென்று கொய்யாக்குளம் வரையில், சுமார் 15 கிலோ மீற்றர் தூரம் வழி தெரியாமல் நடந்து சென்றுள்ளனர். இவர்கள் இரண்டு குழுக்களாக காட்டினுள் பிரிபட்டுள்ளனர்.
நண்பர்கள், ஊரவர்கள், பொலிஸார் மற்றும் இராணுவத்தின் உதவியுடன் நேற்று மாலையிலிருந்து இவர்களைத் தேடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இரவிரவாக தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இந்த நிலையில் இன்று காலை ஒட்டுசுட்டான் மாங்குளம் வீதியில் 9ஆம் கட்டைப் பகுதியில் ஒரு தொகுதியினர் கண்டுபிடிக்கப்பட்டனர். ஏனையவர்கள் கொய்யாக்குளம் பகுதியில் வைத்துக் கண்டுபிடிக்கப்பட்டனர்.
அவர்கள் அனைவரும் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்களிடம் வாக்குமூலங்கள் பொலிஸாரால் பெறப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர். (ஓ,5,19)



## அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவுக்கு எதிராக திருமலையில் போராட்டம்

திருகோணமலை, ஜூலை 17
நாளாந்தம் அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவுக்கு எதிராக கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று திருகோணமலை நகர் பஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்று முன்னெடுக்கப்பட்டது.
தேசிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
குறித்த கவனயீர்ப்புப் போராட்டமானது சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இடம் பெற்றதுடன் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமது எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் எரிபொருள் விலையைக் குறை, மின்சார தண்ணீர் கட்டணங்களைதாங்கமுடியாதுள்ளது, உடன் நிவாரணம் வழங்கு, உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதாதைகளை கைகளில் ஏந்தியிருந்தனர். (ஐ)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மனோநிலை மாறுமா?

ஒரு போலி மருத்துவர் புதிதாக ஓர் இடத்தில் கிளினிக் சென்ரர் ஒன்றை தொடங்கினார். அவருக்கு மருந்துகளைப் பற்றி எதுவுமே தெரியாது. ஆனாலும் எப்படியும் சமாளித்துவிடலாம் என்ற நம்பிக்கை அவரிடம் இருந்தது. அவரை பனடோல் மருத்துவர் என்றும் சொல்லலாம்.

முதலில் அவரிடம் சிகிச்சைபெற ஒரு காய்ச்சல்கார நோயாளி வந்தார். அவரைப் பரிசோதித்துவிட்டு, பனடோலை (பரசெட்டமோல்) எடுத்து தூளாக்கி ஒரு பைக்கற்றிலும், குளிசைகளாக இன்னொரு பைக்கற்றிலும், அதனை நீரில் கலந்து திரவமாக்கி போத்தலிலும் விட்டு மூன்று மருந்துகள்போல காட்டி நோயாளிக்குக் கொடுத்தார். போலி மருத்துவரின் குருட்டு அதிர்ஷ்டமோ என்னவோ, அவர் கொடுத்த மருந்துக்கு நோயாளியின் காய்ச்சல் மூன்றே நாள்களில் மாறிவிட்டது. அந்தக் கதை ஊரெங்கும் பரவ, போலி மருத்துவரிடம் சிகிச்சை பெற கூட்டம் அலைமோதியது. காய்ச்சல், இருமல், தலையிடி, வாந்தி, வயிற்றுவலி, என எந்த வருத்தம் என்று வந்தாலும், அவர்களுக்கு பனடோலை தூளாகவோ, திரவமாகவோ, வேறுவேறு வர்ணங்கள் பூசப்பட்ட குளிசைகளாகவோ கொடுத்து அனுப்பிவிடுவார். நோயாளிகளும் அவர் ராசியான மருத்துவர் என்றெண்ணி அந்த மருந்துகளை உட்கொண்டனர். பெரும்பாலும் பனடோலுக்கு இத்தகைய சாதாரண நோய்கள் மாறக்கூடியவை என்பதால், அவரிடம் சிகிச்சை பெற்றவர்களும் குணமடைந்தனர். போலி மருத்துவரின் புகழ் இன்னும் பரவ வெளியூர்களில் இருந்தும் மக்கள் வரத் தொடங்கினர், அவர்களுக்கும் சர்வரோக நிவாரணியாக பனடோலையே கொடுக்கத் தொடங்கினார். ஆனால் எத்தனைகாலம் தான் ஏமாற்ற முடியும்?

ஒருநாள் புற்றுநோயாளி ஒருவர் சிகிச்சைக்கு வர, அவருக்கும் பனடோலையே கொடுத்தார். ஆனால் அதை உட்கொண்ட மறுநாளே புற்றுநோயாளி மரணமடைந்துவிட்டார். அடுத்தநாள் ஆஸ்துமாவில் அவதிப்பட்ட இன்னொருவருக்கும் பனடோலையே போலி மருத்துவர் கொடுக்க, அவர் அங்கேயே உயிரிழந்தார். அடுத்தடுத்து இருவர் உயிரிழக்கக் காரணம் போலி மருத்துவரே எனக் கண்டுகொண்ட மக்கள் அவரை ஊரைவிட்டே அடித்துக் கலைத்ததுடன், பொலிசாரிடம் முறையிட்டு சிறையிலும் தள்ளவைத்தனர்.

இப்போது இந்தப் பனடோல் மருத்துவரின் கதை எதற்கு? காரணமுண்டு. அந்தப் போலிமருத்துவர் எப்படி எல்லா நோய்களையும் பனடோல் மூலம் சரிக்கட்டிவிடலாம் என நம்பினாரோ, அப்படித்தான் கோத்தாபய அரசாங்கமும், எல்லாப் பிரச்சினைகளுக்கும் இராணுவத்தின் மூலம் தீர்வைக் கண்டுவிடலாம் எனக் கண்மூடித்தனமாக நம்புகிறது. அதனால்தான் கொரோனா ஒழிப்புச் செயலணி, சிவில் நிர்வாக நடவடிக்கைகள் என எல்லாவற்றிலும் சீருடை அதிகாரிகளை உச்ச அதிகாரக் கதிரையில் இருத்தியுள்ளது. அந்த மருத்துவருக்கு குருட்டு அதிர்ஷ்டம் மூலம் சிலருக்கு நோய் குணமடைந்ததைப்போல, இராணுவத்தைப் பயன்படுத்திய சில வேலைத்திட்டங்கள் வெற்றியில் முடிய, இன்னும் அதிகமாக இராணுவத்தை நம்பும் நிலைக்கு அரசு போய்விட்டது. அதனால்தான் இப்போது சாரதி அனுமதிப்பத்திரங்களைத் தயாரிக்கும் பொறுப்பும் படைத்தரப்பு வசம் செல்லவுள்ளது. கூடவே தேர்தல்பணிகளிலும் இனிவரும் காலங்களில் முற்றுமுழுதாக இராணுவத்தை அரசு ஈடுபடுத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால் அப்படி அதீதமாகத் திணிக்கப்படும் இராணுவமயமாக்கல் ஒரு கட்டத்தில், பூமராங்காகத் திரும்பி இதே அரசையே தாக்கவும் சந்தர்ப்பங்கள் அதிகமுண்டு. அப்போது எல்லாக் காரியங்களும் கையை மீறியிருக்கும். இராணுவமே சர்வரோக நிவாரணி என்ற மனோநிலையை அரசு விட்டுத் தொலைக்கும்வரை இலங்கைக்கு விடிவில்லை என்பதே நிதர்சனம்.

# பல திணைக்களங்களிலும் ஆடிக்கூழ் வழங்கப்பட்டது



யாழ்ப்பாணம், ஜூலை 17

தமிழர்களின் பாரம்பரிய நிகழ்வான ஆடிக்கூழ் காய்ச்சி உண்டு மகிழும் நிகழ்வு வீடுகளிலும் திணைக்களங்களிலும் நேற்று நடைபெற்றது. யாழ்ப்பாணக் கல்வி வலயம் உட்பட அநேகமான திணைக்களங் கள் மற்றும் நிறுவனங்களில் ஆடிக்கூழ் காய்ச்சிப் பரிமாறப்பட்டு உண்டு மகிழ்ந்தனர்.

இந்துக்களால் விசேடமாக ஆடி மாதம் முதலாம் திகதி ஆடிக் கூழ் காய்ச்சி பரிமாறப்படுகிறது.

கொரோனாத் தொற்றால் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளமையால் பாடசாலைகளில் ஆடிக் கூழ் காய்ச்சி பகிர்ந்து உண்டு மகிழும் நிகழ்வு இடம்பெறவில்லை.

எனினும், ஏனைய இடங்களில் நேற்று ஆடிக் கூழ் காய்ச்சி உண்டு மகிழ்ந்தனர்.

(து-422)

## பிடிபடும் மீன்களைச் சேமிக்கும் வசதிகளை மேம்படுத்தத் திட்டம்

### நீரியல்வள அமைச்சு தெரிவிப்பு

கடலில் பல நாள்கள் தரித்து நின்று மீன்பிடித்தலில் ஈடுபடும் மீன்பிடிப் படகுகளில் மீன்களை சேமித்து வைக்கும் வசதிகளை மேம்படுத்தவும், அவ்வாறு பல நாள்கள் கடலில் தரித்துநின்று மீன்பிடிக்கும் புதிய மீன்பிடிப் படகுகள் தொடர்பாக புதிய வடிவமைப்பு மாதிரிகளை அறிமுகப்படுத்தவும் மீன்பிடி அமைச்சுதீர்மானித்துள்ளது.

கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சின் வழிகாட்டலின்கீழ் தேசிய நீரியல் வளங்களின் ஆய்வு மற்றும் அபிவிருத்திமுகவரகம், தேசிய பொறியியல் ஆய்வு மற்றும் அபிவிருத்தி கேந்திரம், மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள்திணைக்களம் ஆகியவை இணைந்து இந்தத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளன.

இலங்கையர் ஒருவர் வருடமொன்றில் சராசரி 15.8 கிலோ மீன் உண்கிறார். சுகாதார அமைச்சின் ஆலோசனையின்படி இலங்கையர் ஒருவர் வருடமொன்றுக்கு 21 கிலோ மீன் உண்ணவேண்டும். எனவே நாட்டின் உற்பத்தியை அதிகரிப்பதுடன், பிடிக்கப்படும் மீனின் தரத்தை உறுதிப்படுத்துவதுடன் மக்களின் புரதத் தேவையை பூர்த்தி செய்யும் அளவுக்கான மீன்களைப் பிடிக்க வேண்டியுள்ளது.

நாரா முகவரகம் முன்னர் மேற்கொண்ட ஆய்வுகளின்படி நாடு முழுவதும் உள்ள மீன்பிடித் துறைமுகங்களில் பிடிக்கப்படும் மீன்களில் 30 முதல் 40 சதவீதமானவை முறையாகக் கையாளப்படாததால் அவற்றின் தரம் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையிலும் உள்ளன. தென்பகுதி மீன்பிடித் துறைமுகங்களில் இவ்வாறான தரமற்ற மீன்களினால் ஏற்படும் நட்டம் 60 முதல் 70 சதவீதமாக உள்ளது. பிடிக்கப்படும் மீன்கள் முறையாக கையாளப்படாததால் வருடாந்தம் 22 பில்லியன் ரூபா நட்டம் ஏற்படுகிறது.

இலங்கை மக்களுக்குத் தேவையான விலங்குப் புரதம் கிடைப்பதற்கு மீன் உற்பத்திகளே முக்கிய ஆதாரமாக உள்ளது. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.7 சதவீதத்தை இது பூர்த்தி செய்கிறது. அத்துடன் மக்களின் உணவில் 65 சதவீத விலங்குப் புரதத்துக்கு இது வழிவகுக்கிறது - என்றுள்ளது. (த)

## இங்கிரியவில் 16 பேர் தனிமை

களுத்துறை மாவட்டம் இங்கிரிய பிரதேசத்தில் 13 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் அண்மையில் கதிர்காமம் சென்றுள்ளனர். அங்கு தங்கியிருந்த விடுதியில் கொரோனா தொற்றுடைய நபர் தங்கியிருந்தமை தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் கதிர்காமம் சென்றவர்களில் 13 பேர் இங்கிரிய மற்றும் இமகிரி ஆகிய பிரதேசங்களில் சுய தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## இதுவரை 3210 முறைப்பாடுகள்

நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணி நேரத்தில்(நேற்று முன்தினம் காலை முதல் நேற்று அதிகாலை வரை) தேர்தல் சட்டங்களை மீறியமைக்கான 170 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதுவரை பதிவாகிய தேர்தல் சட்டத்தை மீறிய சம்பவங்களாக 3ஆயிரத்து 210 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்றும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (க)

## கந்தகாட்டில் 533 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி

கொழும்பு,ஜூலை 17

கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்பைப் பேணிய சுமார் 533 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்களில், 444 கைதிகள், 4 பயிற்றுநர்கள் உட்பட ஊழியர்கள், 25 பேர் பாதிக்கப்பட்ட நோயாளிகளுடன் தொடர்பைப் பேணியவர்கள் என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு நிலையத்தில் கைதிகள் மற்றும் ஊழியர்கள் மீது நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் அனைத்து அறிக்கைகளும் பெறப்பட்டுள்ளன.

புனர்வாழ்வு நிலையத்துக்கு வருகை தந்த கைதிகளின் உறவினர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

ஒரு சிறிய குழுவினர் மீது நடத்தப்பட்ட பி.சி.ஆர் சோதனைகளின் அறிக்கைகள் இன்னும் பெறப்படவில்லை.

அறிக்கைகள் கிடைத்ததும், சோதனை செய்யப்பட்ட நபர்களுடன் தொடர்புகொண்டவர்களைத் தனிமைப்படுத்தலாமா இல்லையா என்பது குறித்து முடிவு எடுக்கப்படும்.

கந்தகாடுபுனர்வாழ்வுநிலையத்தில்கொரோனா வைரஸ் பரவல் முற்றிலும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க)

# இதுவரை தேர்தல் வன்முறைகள் 769

## பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 17**

**தேர்தல் வன்முறை தொடர்பாக இதுவரை 769 சம்பவங்கள் இடம்பெற்றுள்ள போதும் மிகப் பெரிய சம்பவங்கள் எதுவும் இடம்பெற்றதாக அறிவிக்கப்படவில்லை. அத்துடன் அரச உத்தியோகத்தர்கள் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டுவருகின்றமை பெரிய பிரச்சினையாகும் என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியராச்சி தெரிவித்தார்.**

பவ்ரல் அமைப்பு நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட் டார் ரோஹன ஹெட்டியாராச்சி.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கை யில்,

எதிர்வரும் பொதுத் தேர்தலை முன்னிட்டு பவ்ரல் அமைப்பு 5 ஆயிரத்துக்கும் அதிக கண்காணிப்பாளர்களை நாடளாவிய ரீதியில் கடமையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்திருக்கின்றது. இம்முறை தேர்தல் பல விசேட அம்சங்களுடன் இடம்பெறுவதால் அதற்கேற்றவகையில் கண்காணிப்பாளர்களுக்கும் பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுத்திருக்கின்றோம். குறிப்பாக கொரோனா தொற்று அபாய நிலைமையில் தேர்தலை எதிர்கொள்வதால் சுகாதார பிரிவினரால் வழங்கப்பட்டிருக்கும் சுகாதார வழிகாட்டல்களை நூறு வீதம் பின்பற்ற நடவடிக்கை எடுத்திருக்கின்றோம்.

அத்துடன் கடந்த மாதம் 14 ஆம் திகதியில் இருந்து நேற்று 15 ஆம் திகதி காலை 6 மணிவரை 769 சம்பவங்கள் பதிவாகி இருக்கின்றன. அவற்றில் தேர்தல் மற்றும் ஏனைய சட்டங்களை மீறியதாக 785 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருக்கின்றன. இந்த முறைப்பாடுகளில் பெரிய சம்பவங்கள் எதுவும் இதுவரை பதிவாகவில்லை.

இருந்தபோதும் அரச அதிகாரிகள் மற்றும் அரச வளங்கள் தேர்தல் பிரசார நடவடிக்கைக்காக பயன் படுத்தப்படுகின்றமை தொடர்பான பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருக்கின்றன. அரச அதிகாரிகள் வாக்களிப்பு நிலையங்களின் பிரதானிகளாக நியமிக்கப்படுகின்றமையால் அவர்கள் தேர்தல் பிரசாரங்களில் கலந்து கொள்வது நீதியான தேர்தலொன்றுக்கு பெரிய பிரச்சினை யாகும். அதனால் இது தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவுறுத்தி இருக்கின்றோம் - என்றார். (ரி2)



# கதிர்காம யாத்திரிகருக்கு கொரோனா

கொழும்பு, ஜூலை 17

கதிர்காமத்துக்கு யாத்திரைக்குச் சென்ற நபர் ஒருவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளார் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதன் காரணமாக, அவர் கதிர்காமத்தில் தங்கியிருந்த விடுதி, அதன் உரிமை யாளர், அவரது மனைவி மற்றும் ஊழியர்கள் உட்பட 9 பேர் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என சுகாதாரப் பரிசோதகர் சமன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார். பொலனறுவை, திவுலன்கடவல பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய இராணுவ கொப்ரல் ஒருவரே இவ்வாறு கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது;

அவர் கடந்த 7ஆம் திகதி 20 பேர் கொண்ட குழுவினருடன் கதிர்காமத்துக்கு யாத்திரை சென்றுள்ளார். பின்னர் அங்குள்ள விடுமுறை விடுதி ஒன்றில் தங்கியுள்ளார். கிரிவெஹர மற்றும் தேவாலயத்துக்குச் சென்று 8 ஆம் திகதி அங்கிருந்து சென்றுள் ளார் சுகாதார அமைச்சினால் ஊவா மாகாண சபையின் சுகாதார பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவர் அங்கு சில பகுதிகளுக்குச் சென்று பலருடன் பழகியுள்ளார். அதற்கமைய அவர் கதிர்காமம் சென்றது முதல் அவர் பழகிய நபர்கள் தொடர்பில் விசாரிக்கப்பட்டு வருகின்றது.

எதிர்வரும் நாள்களில் கதிர்காமத்தில் மேலும் சில கொரோனா நோயாளிகள் அடையாளம் காணக்கூடும் என்பதனால் அனைத்து மக்களும் அத்தியாவசிய விடயங்களைத் தவிர்த்து வெளியே செல்ல வேண்டாம் எனவும், மக்களுடன் பழகுவது மிகவும் அவதானமாக மேற்கொள்ள வேண்டும் எனவும், முகக் கவசம் அணிவது கட்டாயம் எனவும் சுகாதார ஆலோசனைகளை கடுமையாகப் பின்பற்ற வேண்டும் எனவும் பிரதேச மக்களுக்குக் கட்டுபாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. (ரி2)

# தமது பணி நீக்கம் தொடர்பில் ஷானி அபேசேகர மனுத்தாக்கல்

காலி, ஜூலை 16

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர தனது பணி நீக்கம் மற்றும் இடமாற்றத்துக்கு எதிராக உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதம், உடன் அமுலுக்கு வரும் வகையில் இவர் பணி நீக்கப்பட்டு, காலி பிரதிப் பொலிஸ்மா அதிபரின் பிரத்தியேக உதவியாளராக நியமிக்கப்பட்ட நிலையிலேயே இவர் இந்த மனுத் தாக்கலைச் செய்துள்ளார்.

பிரதிப் பொலிஸ்மா அதிபர், பாதுகாப்புச் செயலாளர், தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் மற்றும் அதன் உறுப்பினர்கள், தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் அதன் உறுப்பினர்கள், சட்டமா அதிபர் உள்ளிட்ட 17 பேரை பிரதிவாதிகளாக பெயரிட்டே அவர் இந்த மனுத் தாக்கலைச் செய்துள்ளார்.

முன்னாள் பிரதி அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுடன் ஷானி அபேசேகர உதவி பொலிஸ் அத்தியட்சகராக இருந்த போது முன்னெடுத்ததாகக் கூறப்படும் தொலைபேசி உரையாடல் ஒன்றின் ஒலிப்பதிவினால், இலங்கை பொலிஸ் சேவையின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தினார் என்ற காரணத்துக்காக அவர் இவ்வாறு பணி இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளார் என தேசிய பொலிஸ் ஆணைக் குழு சுட்டிக் காட்டியுள்ளமை குறிப்பி டத்தக்கது. (ரி2)

# தேர்தல் உரிமை மீறல் குறித்து முறையிட அலகு!

கொழும்பு, ஜூலை 17

2020 பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய மனித உரிமை மீறல் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்வதற்கான அலகு ஒன்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நிறுவப்பட்டுள்ளது.

1996 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு 24 மணி நேரமும் முறைப்பாடுகளை இவ் அலகில் பதிவு செய்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எழுத்து மூலமாக குறித்த முறைப் பாடுகளைப் பதிவு செய்ய விரும்பு கின்றவர்கள் தேர்தல் முறைப்பாட் டைப் பெற்றுக் கொள்ளும் அலகு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இல.14 ஆர்.ஏ.த மெல் மாவத்தை, கொழும்பு 4 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ரி1)

# மக்களுக்கு உண்மைத் தகவல்களை வழங்குவதே சுகாதாரக் கடமை

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 17

கொரோனா வைரஸ் பரவல் தொடர்பான உண்மையான தகவல்களை மக்களுக்கு வழங்குவது சுகாதாரக் கடமை எனவும் தற்போது வழங்கப்பட்டுள்ள தெளிவுப்படுத்தல்கள் போதுமானவை அல்ல எனவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அதன் செயலாளர் மருத்துவர் ஹரித அளுத்கே இதனைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நிலவும் உண்மையான நிலைமையை தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பு சுகாதார அமைச்சின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் உட்பட அதிகாரிகளுக்கு இருக்கின்றது என்பதை நாங்கள் அன்றும் கூறினோம், இன்றும் கூறுகிறோம். அவர்கள் பொய் கூறுகின்றனர் என்பது அர்த்தமாகாது. மக்களுக்கு வழங்கும் தெளிவுபடுத்தல்கள் போதுமானதாக இல்லை.

கொரோனா தொற்று ஏற்பட்டவர்களை தொற்று ஏற்படாதவர்கள் என்று கூறுகின்றனர். ஏன் அப்படி நடக்கின்றது என்பதை தெளிவுபடுத்தவேண்டும். குண்டசாலையில் ஒரு நோயாளி அடையாளம் காணப்பட்டுள்ளார் என்று கூறினால் மாத்திரமே அங்குள்ள மக்கள் தம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

அதனை அறிவிப்பதற்கு தாமதமாகும் போது பிரதேசத்தில் கொரோனா வைரஸ் பரவும் ஆபத்து அதிகம். இதனால், இந்த விடயத்தை சுகாதார அமைச்சுக்கு நினைவூட்ட விரும்புகி றோம். சகல தகவல்களையும் தாமதமின்றி, தெளிவாக மக்களுக்கு வழங்க வேண்டும் என நாங்கள் வலியுறுத்துகிறோம் - என்றார். (ரி2)

උසස් අධ්‍යාපන අමාත්‍යාංශය
உயர் கல்வி அமைச்சு
Ministry of Higher Education

# பரீட்சைகள் திணைக்கள சேவைகள் இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூலை 17

இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் ஒரு நாள் மற்றும் வழமையான சேவைகள் அனைத்தும் மீள அறிவிக்கும் வரையில் நேற்றுமுன்தினம் முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவிவரும் கொரோனா அச்சம் காரணமாகப் பாதுகாப்பு நடவடிக்கைகளை கருத்திற் கொண்டு இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுளளது. (ரி1)

*வெடிப்பு சம்பவம்:*

## கைதடியில் வைத்து ஒருவர் கைதானார்

கிளிநொச்சி, ஜூலை 17
இயக்கச்சி வெடிப்பு சம்பவம் தொடர்பில் மேலும் ஒருவர் யாழ்ப்பாணத்தில் வைத்து நேற்றுமுன்தினம் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் இயக்கச்சி பகுதியில் உள்ள புளியடி சந்திக்கு அருகாமையில் கடந்த 3ஆம் திகதி மாலை 7.30 மணியளவில் வெடிச்சத்தம் இடம்பெற்றிருந்தது. சத்தம் கேட்ட வீட்டில் இருந்த குடும்பத்தலைவர் எரிகாயங்களுடன் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்திருந்தார். முன்னாள் போராளியான தங்கராசா கங்கை ஆத்மன் (வயது 43) என்பவரே உயிரிழந்திருந்தார்.

அவர் உள்ளூர் வெடிகுண்டு தயாரிப்பில் ஈடுபட்டிருந்தார் என்று குற்றஞ்சாட்டில் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர், அவருடைய மனைவி உட்பட 8 பேரைக் கைதுசெய்திருந்தனர். இருவர் விடுவிக்கப்பட்டனர். இறந்தவரின் மனைவி உட்பட ஏனையவர்கள் தடுப்பில் உள்ளனர்.

இந்த நிலையிலேயே கைதடியில் வைத்து நேற்றுமுன்தினம் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் விசாரணை முன்னெடுக்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-6,26)

# வர்த்தமானி வெளியாகும்வரை மக்கள் பாதுகாப்பு சந்தேகமே!

*எச்சரிக்கிறார் முன்னாள் சபாநாயகர்*



**கொழும்பு, ஜூலை 17**
**பொதுத்தேர்தலின்போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகள் தொடர்பான அறிவுறுத்தல்களை வர்த்தமானியில் வெளியிடுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு தொடர்ச்சியாக முன்வைக்கும் கோரிக்கையை உரிய அதிகாரிகள் செவிமடுக்க வேண்டும்.**

வர்த்தமானியை வெளியிடாத வரையில் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாது என்பதுடன் இந்தத் தாமதம் மன்னிக்கப்பட முடியாதது மாகும். வர்த்தமானியை வெளியிடுவதில் தடையை ஏற்படுத்துபவர்கள், ஒட்டுமொத்த நாட்டு மக்களினதும் எதிரியாகவே வரலாற்றில் பதியப்படுவார்கள் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்திருக்கிறார்.

தேர்தலின்போது பின்பற்றப்பட வேண்டிய சுகாதாரப்பாதுகாப்பு விதிமுறைகளை வர்த்தமானி அறிவித்தலாக வெளியிடுமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவும் சுகாதார சேவையாளர்களும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர்.

இதுகுறித்து கரு ஜயசூரிய தனது டுவிட்டர் பக்கத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

கொவிட் 19 கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு கடந்த காலத்தில் நாட்டு மக்கள் பெருமளவான தியாகங்களைச் செய்திருக்கிறார்கள். அதேபோன்று சுகாதார சேவையாளர்களும், பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகளும் மிகுந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றியிருக்கிறார்கள்.

ஆகவே ஏதேனும் அவசரநிலைமைகள் ஏற்படும் பட்சத்தில், அதுகுறித்து விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்வது மிகவும் அவசியமாகும். ஏனெனில், நாட்டின் பொருளாதாரம் மீண்டுமொரு முழுமையான முடக்கத்தை எதிர்கொள்ளத்தக்க நிலையில் இல்லை.

அதேவேளை, தேர்தலின்போது பின்பற்றப்பட வேண்டிய சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளை வர்த்தமானியாக வெளியிடல் மற்றும் சுகாதார சேவையாளர்களுக்குரிய நிலுவைத் தொகையைச் செலுத்துவதிலுள்ள தாமதம் என்பன தற்போதைய சூழ்நிலை யில் மிகவும் ஆபத்தானவை. தற்போது நாட்டில் சுகாதாரப் பாதுகாப்பு என்பது முதன்மையாக முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய விடயமாக இருக்கும் நிலையில், சுகாதார சேவையாளர்களின் மனநிறைவை உறுதிப்படுத்தும் வகையில் அரசு செயற்பட வேண்டியது அவசியம் - என்றுள்ளது. (த)

## நாட்டின்சில இடங்களில் மழைக்கு வாய்ப்புள்ளது

கொழும்பு ஜூலை 17
நாட்டின் சில பகுதிகளில் மழையுடனான வானிலை நிலவக்கூடும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில், நாட்டின் தென்மேற்கு பகுதியில் மழையுடனான வானிலை மேலும் தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல், சப்ரகமுவ, தென் மற்றும் மத்திய மாகாணங்களில் அவ்வப்போது மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

வடமேல் மாகாணத்தில் பல தடவைகள் மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

சப்ரகமுவ மாகாணத்திலும் களுத்துறை, காலி, மாத்தறை மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மில்லிமீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் சில இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் காற்றின் வேகம் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

*சாவகச்சேரி நகர ஆளுகை எல்லைக்குள்*

# வருடாந்த கட்டணம் கட்டியே ஓட்டோக்கள் இயங்கமுடியும்

*பொலிஸாரின் உதவியுடன் செயற்படுத்தத் திட்டம்*

சாவகச்சேரி, ஜூலை 17
சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் செயற்படும் அனைத்து முச்சக்கரவண்டிகளும் சபையில் வருடாந்தம் ஜனவரி மாதத்தில் பதிவு செய்யப்பட்டு மாதாந்தம் கட்டணம் அறவிடப்படல் வேண்டும். பதிவுகள் மேற்கொள்ளாத முச்சக்கரவண்டிகள் ச்பை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் செயற்பட அனுமதிக்கக்கூடாது. அவ்வாறான முச்சக்கர வண்டிகள் பொலிஸாரின் உதவியுடன் அப்புறப்படுத்தப்படல் வேண்டும். சபையில் பதிவு செய்யப்படும் முச்சக்கர வண்டிகளுக்கு சபையினால் ஸ்ரிக்கர் ஒட்டப்படல் வேண்டும்.

இவ்வாறு சாவகச்சேரி நகரசபையின் மாதாந்த அமர்வில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

சபையின் அமர்வு நேற்று நடைபெற்றது.

முச்சக்கர வண்டிகளுக்கு கொரோனாத் தொற்று மற்றும் ஊரடங்குச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட முச்சக்கர வண்டிகளின் உரிமையாளர்களுக்கு இரு மாதங்கள் வாடகை அறவிடுவது நிறுத்தப்பட வேண்டுமென்று முன்மொழியப்பட்ட பிரேரணை தொடர்பாக உரையாற்றிய உறுப்பினர் க.கஜீதன் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார்.

அவர் தனது உரையில், யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அனைத்து பொலிஸ் பிரிவுகளுக்கும் உட்பட்ட பகுதிகளில் செயற்படும் முச்சக்கர வண்டிகளின் விவரம் யாழ்ப்பாணம் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பணியகத்தில் உள்ளன. ஆனால், சாவகச்சேரி நகரசபை எல்லைக்கு உட்பட்ட 7 இடங்களில் தரித்து செயற்படும் முச்சக்கரவண்டிகளின் பதிவுகள் அங்கு இல்லை. சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் செயற்படும் முச்சக்கரவண்டிகளின் சங்க பிரதிநிதிகளை அழைத்து பதிவுகளை மேற்கொண்டு ஸ்ரிக்கர் ஒட்டப்படல் வேண்டும்.

பதிவு மேற்கொள்ளாத முச்சக்கர வண்டிகளுக்குப் பதிலாக வேறு முச்சக்கரவண்டிகளுக்கு பதிவு மேற்கொண்டு செயற்பட அனுமதிக்கலாம் என்று உரையாற்றினார்.

இதற்குப் பதிலளித்த தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன், முச்சக்கரவண்டிகளின் உரிமையாளர்களுக்கு இறுதி சந்தர்ப்பம் வழங்கி, இயங்கும் முச்சக்கரவண்டிகளின் சங்கங்களுக்கு அறிவித்தல்கள் வழங்கி அதன்பின்னர் உறுப்பினரின் கோரிக்கையை பொலிஸாரின் உதவியுடன் எமது பகுதியில் செயற்படுத்தலாம். அடுத்த மாதம் தொடக்கம் நகரசபையின், ஸ்ரிக்கர் இல்லாத முச்சக்கர வண்டிகள் செயற்படமாட்டாது - என்று தெரிவித்தார். (த-9)

## பல்கலை. ஓய்வூதியம் பெறுவோருக்கு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 17
பல்கலைக் கழகங்களின் ஓய்வூதியத்தைப் பெறும் ஆசிரியர்களுக்கும் ஊழியர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஊழியர் சங்கப் பணிமனையில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஓய்வுபெற்ற பல்கலைக்கழக பணியாளர்களுக்கு ஓய்வூதியம் சீரான முறையில் மறுசீரமைக்கப்படாமை காரணமாக மிகக்குறைந்தளவிலான ஓய்வூதியத்தை பல்கலைக்கழக பணியாளர்கள் பெற்றுவருகின்றனர்.

1999இல் ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டபோது ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கொருமுறையும் மீளாய்வு செய்யப்படும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கூறியிருந்த பொழுதிலும் இற்றைவரை மீளாய்வு ஏதும் செய்யப்படவில்லை.

இது தொடர்பில் ஆராய்வதற்கு பல்கலைக்கழகத்திலிருந்து ஓய்வுபெற்றுச் சென்ற பல்கலைக்கழகங்களின் ஓய்வூதியத்தைப் பெறும் ஆசிரியர்களையும் ஊழியர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் மேலும் தெரிவித்துள்ளதாவது.

பங்குபற்றுவோர் உரிய பாதுகாப்பு நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதுடன் முகக்கவசம் அணிந்து தனியாள் இடைவெளியையும் கடைப்பிடித்தல் அவசியம் என்று கூறப்பட்டுள்ளது. (த)

# மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மாற்று வழிகள் முன்வைக்கப்படவில்லை

## தமிழ்த் தலைமைகளைச் சாடினார் விமல்

**கொழும்பு, ஜூலை 17**

**வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றுமாறு குறிப்பிடும் தமிழ் அரசியல்வாதிகள் வடக்கு மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண மாற்று நடவடிக்கைகளை முன்வைக்கவில்லை. வடக்கு மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற அரசாங்கம் உரிய வழிமுறைகளைப் பொதுவாக ஏற்படுத்திக் கொடுக்கும் என கைத்தொழில் மற்றும் வளங்கள் முகாமைத்துவ அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

வடக்கு மாகாணத்தில் உள்ள மர முந்திரிகைக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான 6 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் 200 ஏக்கர் நிலப்பரப்பு வடக்கு மாகாணத்தில் வாழும் விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பனை அபிவிருத்தி சபையும், மர முந்திரிகைக் கூட்டுத்தாபனமும் இணைந்து முன்னெடுக்கும் செயற்திட்டத்திற்கான இணக்கப்பாடு ஒப்பந்தம் அமைச்சர் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டது. வன்னி பிரதேசத்தில் மர முந்திரிகைக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான காணியில் மர முந்திரிகை பயிர் செய்கையுடன். உப பயிர்ச்செய்கையை 4 வருட காலத்துக்கு முன்னெடுக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மன்னார் பகுதியில் உள்ள முசலி பனை அபிவிருத்திச் சபையின் விவசாயச் சங்கம், யாழ்ப்பாணத்தில் உள்ள வரணி விவசாயச் சங்கம் ஊடாக இந்த அபிவிருத்தி திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. அத்துடன் விவசாயப் பயிர்ச் செய்கைக்குத் தேவையான கடனுதவியை வழங்க மக்கள் வங்கி, சமுர்த்தி வங்கி, மற்றும் இலங்கை வங்கி ஆகியன இணக்கம் தெரிவித்துள்ளன. தேசிய பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு வடக்கில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்களை அகற்றுமாறு குறிப்பிடும் வடக்கு மற்றும் கிழக்கு அரசியல்வாதிகள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட மக்கள் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக்க பாதிப்பற்ற விதத்தில் எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை. வடக்கு மக்களுக்கு அபிவிருத்திப் பணிகளை அரசாங்கம் முழுமையாக முன்னெடுக்கும் - என்றார். (ப)




# சு.க., பெரமுனவைப் போன்றல்லாது ஐ.தே.கவில் யாரும் தலைவராகலாம்

## ரவி கருணாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 16

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியானது பண்டாரநாயக்க பரம்பரையைச் சேர்ந்தவர்களுக்கு உரித்தான கட்சியாகும். இக்கட்சியில் பண்டாரநாயக்க பரம்பரையைச் சேர்ந்தவர்களால் தான் அங்கு தலைவர்களாக வரமுடியும். அதேபோன்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியி ராஜபக்ச குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு உரித்தான கட்சியாகும். ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்தவர்களால்தான் இக்கட்சிக்கு தலைவராக வரமுடியும். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி குடும்ப ஆதிக்கம் செலுத்தும் கட்சி அல்ல. அது மூவின மக்களையும் ஒன்று சேர்க்கும் ஒற்றுமையான, பலமான கட்சியாகும். ஐக்கிய தேசியக் கட்சி பரந்துபட்ட மூவின மக்களுக்குரிய கட்சியாக இன்றும், நாளையும் திகழ்கின்றது; திகழும் இதிலே யாரும் வரலாம். போகலாம். யாரும் தலைவராக முடியும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித்தலைவரும், முன்னாள் நிதி அமைச்சருமான ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஐக்கிய தேசியக் கட்சி இந்த நாட்டிலே ஒரு வரலாற்றைக் கொண்ட கட்சியாகும். இதனை முற்றுமுழுதாக அழிப்பதற்குப் பலர் முயற்சிக்கின்றார்கள். கடந்த காலங்களில் எமது கட்சியைவிட்டுப்பிரிந்துசென்றவர்களால் ஒன்றும் சாதிக்க முடியாமல் பல விமர்சனங்களுக்குள்ளாகி மக்களால் பாடம் புகட்டப்பட் டுள்ளது. ருக்மன் சேனாநாயக்க மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ளார்.

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து எட்டு மாதத்தில் நாட்டில் பொதுமக்கள் பயன்படுத்தும் பொருள்களின் விலைவாசி அதிகரித்துள்ளது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியானது ஆட்சிக்கு வரும் முன் பல வாக்குறுதிகளை மக்களிடம் தெரிவித்து ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டார்கள். புதிய அரசாங்கத்தின் தேர்தல் வாக்குறுதிகள் ஜனாதிபதித் தேர்தல் முடிவுற்று எட்டு மாதங்களைக் கடந்துள்ளது. இந்த நிலையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் பொதுத்தேர்தலுக்குமுகம்கொடுத்துள்ளார்கள். ஆட்சியைக் கைப்பற்றியதும் பொருள்களின் விலையை இலகுவான முறையில் அதிகரித்தது. பொருள்களின் விலை அதிகரிப்பால் மக்கள்பொருளாதாரத்தை பெற்றுக்கொள்வதிலும், விரும்பியவாறு பொருள்களை வாங்குவதற்கும் திண்டாடுகின்றார்கள் - என்றார். (ப)

# ராஜபக்ஷக்கள் சஜித், ரணில் இனவாதிகளே

## பிரபா கணேசன் குற்றச்சாட்டு

வவுனியா, ஜூலை 17

கோத்தாபய ராஜபக்ச, மகிந்தராஜபக்ச, ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச ஆகிய அனைவருமே சிங்களப் பேரினவாதிகள் தான். நல்லவர்கள் அல்லர். தமிழர்களுக்கு எதையும் இலகுவில் கொடுக்கமாட்டார்கள் என்று ஜனநாயக மக்கள் காங்கிரஸின் தலைவர் பிரபா கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நான் வெற்றிபெற்றதும் 15 இலட்சம் ரூபாயை வீட்டுத்திட்ட நிதியாக ஒதுக்குவதுடன், அரைகுறையாகக் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு 4 இலட்சம் ரூபாயை அரசாங்க நிதியாக வழங்கப்புடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவுள்ளேன். இங்கு வீரவசனம்பேசுபவர்கள். மகிந்தவிடமோ, அல்லது அமைச்சர்களிடமோ சென்று சேர் சேர் என்று அழைப்பார்கள். நான் அப்படி அழைத்ததும் அல்ல அழைக்கவேண்டிய தேவையும் இல்லை.

கோத்தாபய, மஹிந்த, ரணில், சஜித் ஆகிய அனைவருமே சிங்களப் பேரினவாதிகள் தான். நல்லவர்கள் அல்லர். தமிழர்களுக்கு எதனையும் இலகுவில் கொடுக்க மாட்டார்கள். ஆனால் எம்மால் ஜனாதிபதியாகவோ, பிரதமராகவோ இந்தநாட்டில் வரமுடியாது. எனவே இந்த இனவாதிகளிடம் இருந்து எமது மக்களுக்குத் தேவையான விடயங்களைப்பெற்றுக்கொள்ளக்கூடியவர்களை நாடாளுமன்றம் அனுப்பினால்தான் மாற்றம் ஒன்று ஏற்படும். எனவே அதனை உணர்ந்து சரியானமுறையில் வாக்களியுங்கள் - என்றார். (ப-110)

# சு. கவின் தலைமைத்துவத்தை பிரதமர் மஹிந்த பொறுப்பேற்கார்

## மஹிந்த யாப்பா தெரிவிப்பு

கொழும்பு. ஜூலை 17

பொதுத் தேர்தலுக்குப் பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவத்தை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஒருபோதும் பொறுப்பேற்க மாட்டார் எனத் தெரிவித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த யாப்பா அபேவர்தன, பொதுஜன பெரமுனவின் தலைவராக இருந்து கொண்டு புதிய அரசாங்கத்தில் அவர் பிரதமர் பதவியை ஏற்பார் என்றும் கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2015 ஆம் ஆண்டு அரசியல் ரீதியில் ஏற்படுத்திய மாற்றங்களின் காரணமாகவே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஸ்தாபிக்கப்பட்டது.

ஆட்சிக்கு வந்து குறுகிய காலத்தில் பொதுஜன பெரமுன தேசிய தேர்தல்களில் வெற்றி பெற்று தற்போது ஆட்சியையும் கைப்பற்றியுள்ளது. என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# அடுத்த தலைமுறைக்கு வீட்டைக் கையளியுங்கள்

## சசிகலா ரவிராஜின் விருப்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

நாம் மேலும் மேலும் முன்னோக்கிச் செல்ல வேண்டும். எமது அடுத்த தலைமுறைக்கு இந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் அரசுக் கட்சியின் சின்னம் போய்ச்சேர வேண்டும் என்று கூட்டமைப்பின் யாழ். கிளிநொச்சி மாவட்ட வேட்பாளர் சசிகலா ரவிராஜ் தெரிவித்தார்.

கரம்பைக்குறிச்சி மேற்கு முன்பள்ளி வளாகத்தில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

உங்களுடைய சின்னம் வீட்டுச் சின்னம் அதை எந்த விதத்திலும் மாற்றாதீர்கள். விமர்சனங்கள் இருக்கின்றன ஆனால் அதைச் சொல்லுபவர்கள் தம்முடைய கட்சியே சிறப்பானது என்பதற்குச் சிறப்பான காரணங்கள் எதையும் சொல்வதில்லை. ஆகையால் மிகத் தெளிவாக வீட்டுச் சின்னத்துக்கு நேரே உங்களுடைய புள்ளியை இடுங்கள். மூன்று இலக்கங்களுக்கு விருப்பு வாக்குப் போடுங்கள். நான் முதன் முதலாக வந்து இருக்கிறேன். எனது கணவரின் அறிமுகம் தான் உங்கள் முன்னால் உள்ளது. பெண்என்ற ரீதியில் நான் வாக்குக் கேட்கிறேன். தென்மராட்சியில் உள்ள இடைவெளி நிரப்பப்பட வேண்டும். இந்தப் பிரதேசத்துக்கு நெருக்கமாகப் பழகக் கூடிய ஒருவர் தேவை. அதையும் மனதில் கொண்டு உங்களுடைய விருப்பு வாக்குகளில் ஒன்றை எனக்குத் தரலாம். இருந்தாலும் இறுதி முடிவு உங்களுடையது. நீங்கள் தெளிவாகச் சிந்தித்து கட்டாயம் கட்சிக்குரிய வாக்கைப் போடுங்கள் - என்றார். (ப-159)

# கல்முனை செயலகம் தரமுயர்த்தப்படுமாம்

கல்முனை, ஜூலை 17

கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகம் தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சியில் பெற்றுத்தரப்படும் என்று பொதுபலசேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணைப் பகுதிக்கு நேற்றுமுன்தினம் தனிப்பட்ட விடயமாகச் சென்ற கலகொட அத்தே ஞானசார தேரரிடம் அங்கு சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் கல்முனை உப பிரதேச செயலகம் குறித்து கேள்வி எழுப்பினார். இதற்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவசரப்படாமல் எதிர்பார்த்து காத்திருக்குமாறும் அவர் இதன்போது கூறியுள்ளார். (ப)

# ‘கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்’

## விக்கியின் இந்திய ஆதரவு நிலைப்பாடு குறித்து சத்தியலிங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

**இந்தியப் பேரரசைக் கடந்த காலத்தில் சரியாகப் பயன்படுத்தத் தவறிவிட்டோம் என சி.வி.விக்னேஸ்வரன் கூறுவது கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வதற்கு ஒப்பான செயல் என வவுனியா மாவட்ட தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளரான மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.**

சி.வி.விக்னேஸ்வரன் வடக்கு மாகாண முதலமைச்சராக வந்த காலம் ஒரு சர்வதேச எதிர்பார்ப்பு இருந்த காலம் . அக்காலத்தில் அபிவிருத்திக்காக எதனைக் கோரியிருந்தாலும் இந்திய அரசு வழங்கியிருக்கும். ஏதாவது ஒன்றையேனும் பெயர் சொல்லும் அளவிற்கேனும் பெற்றாரா என்றால் இல்லை என்பதே உண்மையாகும். அதனைவிட இரு தடவைகள் இந்தியா சென்றும் எதனையும் கோரவில்லை. இதற்கு மாறாகவே செயல்பட்டார். சொந்தக் கட்சியினால் பலாலி விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாகச் சீரமைத்து தருமாறு இந்திய அரசிடம் கோரியபோது அதனை இப்போது சீரமைக்க வேண்டாம் எனக் கோரியவர் இதே விக்னேஸ்வரன் தான். அதற்கு அவர் கூறிய நியாயம் விமான நிலையத்தைச் சீரமைத்துவிட்டு மக்களின் நிலத்தை விடுவிக்க மறுப்புத் தெரிவிப்பார்கள் என்றார். அது அவரது கையாளாகத்தனத்தையே எடுத்துக்காட்டியது. இருப்பினும் கூட்டமைப்பின் தொடர் முயற்சியினால் அது நடந்தேறியது.

இதேபோன்று பாரதப் பிரதமர், வரலாற்றுச் சிறப்பாக யாழ்ப்பாணத்துக்கு வந்தார். அதன்போது வடக்கு மாகாண முதலமைச்சர் என்ற வகையில் வரவேற்று கலந்துரையாடிய வேளையில் ஒப்புக்கேனும் இந்த விக்னேஸ்வரன் எதனையும் கோரவேயில்லை. மாகாண இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கும் வகையிலான 3 தொழிற்சாலைகளையேனும் கோரியிருக்கலாம். ஆனால் எமது முதலமைச்சரும் மாகாண மக்களின் விடிவுக்காக ஒன்றைக்கோரிமனுவைக்கையளித்தார். முதலமைச்சர் மனுவைக் கையளித்திருக்கின்றார் எமது மக்களின் பிரச்சினைகளைப் பட்டியலிட்டிருப்பார் என நம்பி அப் பட்டியலைத் தேடியபோது எமக்கு மட்டுமல்ல மாகாண மக்களின் இதயங்களில் இடிவிழுந்தமைபோன்று அந்தப் பட்டியல் வெளிவந்தது. அதில் முதல்வர் கோரியது பாலியல் குற்றவாளிகள் என மரபணு மூலம் உறுதி செய்யப்பட்டு தண்டனை வழங்கிய குற்றவாளிகளை விடுவிக்குமாறு கோரி நின்றார். இதனைச் செய்து வழங்காதமையால் தான் இந்தியப் பேரரசைக் கடந்த காலத்தில் சரியாகப் பயன்படுத்தத் தவறிவிட்டோம் எனக் கூறுகின்றாரோ தெரியவில்லை - என்றார். (ப)

---

# தோடம்பழ அணியினரின் முகத்திரை கிழிந்துள்ளது

## ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 17

சாய்ந்தமருது நகர சபைக் கோஷத்தைக் கையிலெடுத்து, அரசியல் செய்வதற்கு புறப்பட்ட தோடம்பழ அணியினரின் முகத்திரை இன்று கிழிந்து வருகிறது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு சாய்ந்தமருது நகர சபையை ஏற்படுத்துவதற்கான அத்தனை முயற்சிகளையும் மேற்கொண்டிருந்தோம். நிலைமைகளைப் புரிந்து கொண்டு சாய்ந்தமருதுதோடம்பழ அணியினர் கொஞ்சமும் பொறுமையில்லாமல் நடந்து கொண்டனர். ஏனென்றால் அவர்களது இலக்கு வேறாக இருந்தது. அவர்களுக்கு அரசியல் ஆசை வந்து விட்டது. அதனால் ஊரின் தேவையை நிறைவேற்றுவதை விட அவர்களது சொந்த, சுயநல அரசியலை முன்னெடுப்பதிலேயே குறியாக இருந்தனர். அதற்காக முஸ்லிம் சமூகத்தின் பேரியக்கமான முஸ்லிம் காங்கிரஸை இந்த மண்ணில் இருந்து அழித்து விட வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு அவர்கள் செயற்பட்டு வந்துள்ளனர்.

அதன் தொடர்ச்சியாக இன்று அதாவுல்லாஹ்வுக்கு ஏணியாக மாறியுள்ளனர். தோடம்பழ அணியினரின் இந்த பித்தலாட்ட அரசியல் இன்று மக்களுக்குப் புரியத் தொடங்கியுள்ளது. சாய்ந்தமருது நகர சபைக் கோஷத்தைக் கையிலெடுத்து. அரசியல் செய்வதற்குப் புறப்பட்டவர்களின் முகத்திரை கிழிந்து வருகிறது. கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் இவர்களை நம்பி ஏமாந்து போன சாய்ந்தமருது மக்கள் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அவர்களுக்குப் பின்னால் செல்லாமல் எம்மால் பிரகடனம் செய்யப்பட்ட வேட்பாளரையே ஆதரித்தனர். அவ்வாறே இந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் எம்மையே ஆதரிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை - என்றார். (ப)

---

# நாடாளுமன்றத்துக்கு என்னை அனுப்புங்கள்

## பஸ்மி கோரிக்கை

மன்னார், ஜூலை 17

ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளராக இருந்து பல அபிவிருத்தியை மேற்கொண்ட என்னை நாடாளுமன்றம் அனுப்புங்கள் அபிவிருத்தி முன்னெடுக்கப்படும் இவ்வாறு ஊடகவியலாளரும் வன்னித் தேர்தல் தொகுதி வேட்பாளராக ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிடும் அப்துல் சமியு முகம்மது பஸ்மி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

சாதாரண பிரதேச சபை உறுப்பினர் எனும் மக்கள் பிரதிநிதிப் பதவி கூட இன்றி மன்னார் மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர் எனும் பதவியைக் கொண்டு நான் மேற்கொண்ட பல அளப்பரிய பயன்தரும் வேலைதிட்டங்களை மிகப் பெரிய சாதனையாகவே நான் கருதுகிறேன். ஆகவே நான் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் பட்சத்தில் வன்னி மாவட்டத்தை மேலும் அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் செல்ல முடியும்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் நான் போட்டியிடுகிறேன்- என்றார். (ப)

---

# அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ள சர்வாதிகாரப் போக்கில் அரசாங்கம்!

## முன்னாள் எம்.பி. முஜிபுர் ரஹ்மான் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 17

தனிமைப்படுத்தல் கட்டளைச் சட்டங்களையும் தேர்தல் சட்டங்களையும் மீறியேனும் பொதுத் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே ஜனாதிபதி உள்ளார். அதன் காரணமாகவே அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காக சர்வாதிகாரமாகச் செயற்படும் அரசாங்கம் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்படும் எவ்வித அறிவுறுத்தல்களையும் பின்பற்றுவதில்லை என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

அரச ஊடகங்கள் அரசாங்கத்தின் தேர்தல் பிரசாரக் கூடங்கள் போன்று பக்கசார்பாகச் செயற்படுகின்றன. ஏனைய கட்சிகளுக்கு வழங்கப்படும் நேரம்மிகக்குறைவாகும். கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போதும் உள்ளூராட்சித்தேர்தலின்போதும் தேர்தல்கள் ஆணைக்குழு இவ்வாறான செயற்பாடுகளை அவதானித்து அதற்கு எதிராக நடவடிக்கை எடுத்திருந்தது. எனினும் இம்முறை ஆணைக்குழு இவ்வாறான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகத் தெரியவில்லை. எனவே இவ்விடயம் தொடர்பில் அவதானம் செலுத்துமாறு ஆணையாளரிடம் வலியுறுத்தினோம். இது வரி செலுத்துகின்ற மக்களின் உரிமையாகும். இவ்வாறிருக்கையில் அரச ஊடகங்கள் தமக்குத் தேவையான செய்திகளை மாத்திரம் ஒலிபரப்புவது தவறாகும். இது தொடர்பில் ஆணையாளர் கவலை தெரிவித்தார். தமது அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காக சர்வாதிகாரமாகச் செயற்படும் அரசாங்கம் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்படும் எவ்வித அறிவுறுத்தல்களையும் பின்பற்றுவதில்லை. தேர்தலில் வெற்றி பெறுவதற்காக எவ்வாறான கீழ்மட்டமான செயற்பாடுகளையும் செய்வதற்கு இந்த அரசாங்கம் தயாராகவுள்ளது. இவ்வாறான அரசாங்கத்துடனேயே நாமும் ஆணைக்குழுவும் செயலாற்ற வேண்டியுள்ளது. எனவே தான் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்துமாறு ஆணைக்குழுவை நாம் வலியுறுத்துகின்றோம் - என்றார். (ப)

---

# மனோ தொடர்பில் பேச முரளிக்கு உரிமையில்லை

## திலகராஜ் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 17

முன்னாள் கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரனுக்கு, முன்னாள் அமைச்சர் மனோ கணேசன் தொடர்பில் பேசுவதற்கு எந்த உரிமையும் இல்லை என்று மயில்வாகனம் திலகராஜ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

முன்னாள் கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன் எவ்வாறு முன்னாள் அமைச்சர் மனோகணேசன் தொடர்பில் கருத்துத் தெரிவிக்க முடியும். அவர் மனோவைப் போன்று தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் முன்னின்று செயற்பட்டுள்ளாரா? நாட்டு மக்களின் நல்லிணக்கம் மற்றும் ஐக்கியம் தொடர்பில் பேசியுள்ளாரா?, அவர் சிறந்த கிரிக்கெட் வீரர் என்ற வகையில் கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபடுவதற்கு நாங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. அரசியலுக்குள் வந்து இனங்களுக்கிடையில் முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் வகையில் செயற்பட வேண்டாம் என்றே கூறுகின்றோம். முன்னாள் கிரிக்கெட் அணித் தலைவர்களான சங்ககார, மஹேல ஜயவர்தனவை மஹிந்தானந்த காட்டிக் கொடுத்தபோது. முரளி எங்கே இருந்தார்? அப்போது மனோகணேசன் சங்காவுக்கும் , மஹேலவுக்கும் ஆதரவாக குரல் கொடுத்து வந்தார். நாங்களும் எமது கிரிக்கெட் வீரர்கள் பக்கமே இருந்தோம். எமது தமிழ் , முஸ்லிம் இளைஞர்களும் இன பேதம் பாராமல் எம்நாட்டு கிரிக்கெட் வீரர்களின் பக்கமே இருந்தார்கள். இவ்வாறன நிலைமையில் அமைதிகாத்து வந்த முரளி தற்போது மனோ தொடர்பில் பேசுவது அரசியல்இல்லாமல் வேறு என்ன ? அரசியல் செய்வதற்கு அனைவருக்கும் உரிமை உண்டு - என்றார். (ப)

# அபிவிருத்தியும் ஓர் உரிமையே!



நேர்கண்டவர் :
புத்திரசிகாமணி

**- உமாசந்திரா பிரகாஷ்**

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் உமாசந்திரா பிரகாஷ் உதயனுக்காக வழங்கியப் நேர்காணல் இது.

**கே**ள்வி: உங்களுடைய அரசியல் பிரவேசம் எப்படி ஆரம்பமானது. உங்களை அறிமுகப்படுத்தியது யார்?கொழும்பில் உயர்மட்ட வாழ்க்கைக்கு பழக்கப்பட்ட நீங்கள் திடீரென இங்கு களம் இறங்கியதன் நோக்கம் என்ன?

**ப**தில்: என்னுடைய சொந்த இடம் மட்டுவில் வடக்கு. 96ஆம் ஆண்டு இடப்பெயர்வு காரணமாக தென்னிலங்கைக்கு இடம்பெயர்ந்து கொழும்பிலே தங்கிவிட்ட குடும்பங்களில் எங்களுடைய குடும்பமும் ஒன்று. 2001ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக 16 வருடங்கள் ஊடகப் பயணம். 2018ஆம் ஆண்டு பெண்களுக்கு 25 சதவீதம் உள்ளூராட்சி சபைகளில் அரசியலுக்கான இடஒதுக்கீடு கிடைத்த ஒரு வரலாற்று ரீதியான முக்கியத்துவம்மிக்க சந்தர்ப்பத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பாக கொழும்பு மாநகர சபையில் நான் என்னுடைய பிரதிநிதித்துவத்தைப் பெற்றிருந்தேன். இதற்கு மேலதிகமாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளராகவும் மேல் மாகாண முதலமைச்சருடைய ஒழுங்கிணைப்புச் செயலாளராகவும் என்னுடைய அரசியல் பயணம் தொடர்ந்து சென்றது. ஆனால் 2020 ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படும் பொழுது அந்தத் தேர்தலுக்காக ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி உத்தியோகபூர்வமாக பொதுஜன பெரமுன வேட்பாளரும் தற்போதைய ஜனாதிபதியுமான கோத்தாபய ராஜபக்சவை ஆதரிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு வரும்பொழுது உணர்வுரீதியாக என்னுடை மக்களை நான் தவறான வழியில் இட்டுச் செல்ல முடியாது என்பதற்காக சுதந்திரக்கட்சியிலிருந்து வெளியேறி பொதுவேட்பாளார் சஜித் பிரேமதாசவை ஆதரித்திருந்தேன். இதன் காரணமாக கட்சியின் உறுப்புரிமை மற்றும் அங்கத்துவத்தை இழந்து அரசியல் எதிர்காலம் என்ன என்று கேள்விக்குட்பட்ட நிலையில் என்னைப் போன்ற ஆளுமையான மிக்க பெண்கள் அரசியலுக்கு வரவேண்டும் என்ற நோக்கத்தோடு யாழ்ப்பாணத்தில் போட்டியிடுவதற்கான வாய்ப்பை சஜித் வழங்கியிருந்தார்.

**கே**: நல்லாட்சி அரசில் ஐக்கிய தேசியக்கட்சி தமிழ் தேசியக் கூட்டமைப்பை தனது தேவைக்காக மட்டுமே பயன்படுத்திக்கொண்டது. தமிழ் மக்களுக்கு எதையும் செய்யவில்லை என்று ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது. அதற்கு உங்களுடைய பதில் என்ன?

**ப**: போராட்டத்திலிருந்து வேறுபட்டு ஜனநாயக ரீதியாக மக்களுக்கு ஒரு தீர்வைக் கொடுக்க வேண்டும் என்ற ஒரு காரணத்தால் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை புலிகள் உருவாக்கினார்கள். இந்தக் காரணத்துக்காக மக்கள் உணர்வுரீதியாக தொடர்ச்சியாக கூட்டமைப்புக்கு வாக்களித்து வருகின்றார்கள். கூட்டமைப்பில் பல கட்சிகள் பல காரணங்களுக்காக பிரிந்து சென்றது வேறுபுறம்.

விடுதலைப் புலிகள்கூட தங்களுடைய மக்கள் பசியோடு இருக்கும்போது முதலில் உணவு ,உடை ,உறையுள் என்று பெற்றுக்கொண்டுதான் அரசியல் தீர்வுக்கு முயற்சி செய்திருக்கின்றார்கள். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறோம் என்று கூறினாலும் அப்படியான எந்த நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை.

யுத்தம் முடிந்து 11 வருடங்கள் நிறைவுற்ற நிலையிலே எங்களுடைய மக்கள் வாழ்வதற்கு ஏதிலிகளாக, காணியில்லாதவர்களாக, வீடில்லாதவர்களாக, தொழில்வாய்ப்புக்கள் இல்லாதவர்களாக, கல்வி வசதியைப் பெற்றுக் கொள்ள முடியாதவர்களாக மற்றும் பொதுப் போக்குவரத்து இல்லாதவர்களாக, பொதுச் சுகாதார வசதிகள் இல்லாதவர்களாக மிகக் கஷ்டமான சூழ்நிலையில் வாழ்ந்து வருகின்றார்கள். வடக்குக் கிழக்கில் 87,000 விதவைகள் இருப்பதாக ஒரு கணக்கெடுப்பு சொல்கின்றது. ஆனால் கடந்த 11 வருடங்களாக அந்தக் கணக்கெடுப்பு மீள எடுக்கப்பட்டதா? அல்லது இந்த 87000 விதவைகளில் எத்தனை விதவைகள் புதிதாக உருவாகியுள்ளார்கள்?, 87000 விதவைகளில் எத்தனை பேருக்கு தீர்வுகளைக் கொடுத்துள்ளோம்? . உதாரணமாக வீட்டுத் திட்டங்களைக் கொடுத்திருக்கிறோம். சுயதொழிலுக்கான வாய்ப்புக்களை கொடுத்திருக்கிறோம் என்ற கணக்கு கூட்டமைப்பிடம் இருக்கின்றதா?

மிக இக்கட்டான சந்தர்ப்பங்களில் எல்லாம் அரசுக்கு முண்டுகொடுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களுடைய பிரச்சினைகள் தொடர்பிலோ அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பிலோ அரசியல்ரீதியாக உரிய அணுகுமுறையைக் கைக்கொள்ளவில்லை.

**கே**: தமிழ் பேசும் மக்கள் பெரும்பாலும் தென்னிலங்கை சிங்களக் கட்சிகளை ஆதரிப்பதில்லை. இந்த நிலையில் நீங்கள் ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட முன்வந்தது ஏன்?

**ப**: கட்சி எதுவாக இருந்தாலும் தூய்மையான அரசியலை முன்னெடுக்கக்கூடிய அரசியல்வாதிகளாக இருக்கின்றார்களா? அவர்கள் இலஞ்சம் ஊழலில் ஈடுபடாதவர்களாக தங்களுடைய அரசியல் பயணத்தை வெளிப்படைத் தன்மையுடன் கொண்டு செல்கிறார்களா? எந்தவொரு விடயத்தையும் மக்கள் சார்பாகச் சிந்தித்து மக்கள் சார்பாக குரல்கொடுக்கக்கூடிய அரசியல்வாதிகளாக இருக்கின்றார்களா? இந்த நிலைப்பாடு தொடர்பில் மக்கள் அதிகமாக சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள். உரிமை சார்ந்த அரசியலா அல்லது அபிவிருத்தி சார்ந்த அரசியலா என்பதைப் பார்க்கும்போது என்னைப் பொறுத்தவரையில் அபிவிருத்தி என்பதும் ஓர் உரிமையாகவே பார்க்கப்படுகின்றது.

யுத்தம் முடிவடைந்ததற்குப் பிறகு மக்களுடைய நலன் சார்ந்த விடயங்கள் மக்களுடைய அபிவிருத்திகள், சுகாதாரக் கட்டமைப்பு, பொதுப் போக்குவரத்து இவ்வாறான விடயங்களைக் கூட சலுகை சார்ந்த அரசியலாகவே பார்க்கின்றோம். ஆனால் அது உண்மையில் உரிமை அரசியல்.

இலங்கையராக எங்களுக்குக் கிடைக்க வேண்டிய விடயங்களை இலங்கை அரசாங்கம் கொடுக்கவேண்டும். கொடுக்கவில்லை என்றால் அதைக் கேட்டுப் பெறுவதற்கு எங்களுடைய அரசியல்வாதிகள் துணிந்தவர்களாக இருக்க வேண்டும். ஐ.நாவில் மாத்திரம் பொறுப்புக்கூறலைப் பேசிப் பயனில்லை. எங்களுடைய மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்களுக்கான தீர்வுத்திட்டங்கள், அபிவிருத்திகள், வாழ்வாதார உதவிகள் கூட ஒரு பொறுப்புக்கூறல் தான். இலங்கை அரசாங்கம் அதற்குப் பொறுப்புக்கூறக் கடமைப்பட்டிருக்கிறது. உள்நாட்டில் அதற்கான அழுத்தத்தைக் கொடுத்து அவர்களிடமிருந்து அதற்கான பிரதிபலனைப் பெற்று மக்களுக்குக் கொடுக்கக் வேண்டியவர்களாக நாங்கள் இருக்கின்றோம்.

**கே**: ஐக்கிய தேசியக்கட்சி இரண்டாகப் பிரிந்துள்ள நிலையில் இங்கே உங்கள் அணிக்கு ஆதரவு இருக்கின்றதா? மக்கள் மத்தியில் உங்களுக்கு வரவேற்பு காணப்படுகின்றதா?

**ப**: ஐக்கிய தேசிக் கட்சி தற்போது ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி என இரண்டாக உடைந்துள்ளது. ஆனாலும் இலஞ்சம் ஊழல் இல்லாத, மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்ற இளமைத் துடிப்போடு வெளிப்படைத்தன்மையான அரசியல்வாதிகள் பலர் சஜித் பிரேமதாசவுடன் இருக்கிறார்கள். ஐக்கிய தேசியக் கட்சியில் வழமைபோன்று மக்கள் நலன் சார்ந்து செயற்படாத தலைவர்கள் ரணில் விக்கிரமசிங்க பக்கம் இருக்கின்றார்கள். மக்களோடு இருப்பவர்ளை மக்கள் மிகவும் நேசிக்கின்றார். என்னைப் பொறுத்தவரையில் சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி அணியினருக்கும் நாடு முழுவதும் மிகச் சிறந்த வரவேற்பை கொடுத்திருக்கின்றார்கள். அதிக ஆசனங்களைக் கைப்பற்றி சஜித் பிரேமதாசவை பிரதமராக அமர்த்துவோம் என்பதில் நாங்களும் மக்களும் தெளிவாக இருக்கின்றோம். சிலவேளைகளில் அது நடக்காமல் போனாலும் பெரும்பான்மையான ஆசனங்களைக் கைப்பற்றி வலுவான ஒரு எதிர்க் கட்சியாக இருந்து மக்களுடைய குறைநிறைகளைப் பேசி அதற்கான தீர்வுத் திட்டங்களை முன்வைப்போம்.

**கே**: வெற்றிவாய்ப்பு எப்படி இருக்கின்றது எத்தனை ஆசனங்களைப் பெறுவீர்கள்?

**ப**: யாழ்ப்பாணத்தில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக இரண்டு ஆசனங்களைக் கைப்பற்றுவோம் என்ற நம்பிக்கை இருக்கின்றது. மக்களும் அந்தக் கருத்துக் கணிப்பைத் தான் சொல்லுகின்றார்கள்.

நான் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் யாழ்ப்பாணத்தில் வெற்றிபெறுவேன். சிலவேளைகளில் அந்த வாய்ப்பு கிடைக்காமல் இருந்தால் என்னுடைய அரசியல் பயணம் யாழ்ப்பாணம், கிளிநொச்சியை மையப்படுத்தியதாக தொடர்ந்து நகரும். நான் இறக்குமதி அரசியல் செய்ய வருபவள் அல்ல. சஜித் பிரேமதாச, வடக்கை மையப்படுத்தி பெண்கள் சிறுவர்களுடைய அபிவிருத்தி சார்ந்த பொறுப்பை என்னிடம் ஒப்படைத்துள்ளார். எனவே எங்களுடைய மக்கள் சார்ந்து என்னுடைய அரசியல் பயணம் தொடரும். யாழ்ப்பாணம் கிளிநொச்சி மக்களிடம் என்னுடைய வேண்டுகோள் இம்முறை புதியவர்களுக்கு வாய்ப்புக்கொடுங்கள். அதுபோன்று இம்முறை ஆளுமையான பெண்கள் போட்டியிடுகின்றார்கள். நீங்கள் தெரிவுசெய்கின்ற கட்சியில் ஒரு பெண் வேட்பாளருக்கு உங்கள் விருப்பு வாக்கை இடுங்கள்.



# மக்கள் மனதில் என்றும்...!

வே.தனபாலசிங்கம்.

யாழ்.மாவட்டத்தில் ஏழு ஆசனங்களைப் பெறுவதற்கு 19கட்சிகளும்,14 சுயேச்சைகளும் 330 வேட்பாளர்களை களத்தில் இறக்கிவிட்டுள்ளன. இந்த நிலை நல்ல ஆட்சிக்கு உகந்தது அல்ல என்பது உங்களுக்குத் தெரியும். மூன்று நான்கு கட்சிகள் போதும் என்ற நிலையை மக்கள் உணர வேண்டும். எல்லோரும் தலைவர்களாக வரவேண்டும் என்ற ஆசையே காரணமாகும். யாழில் 7 ஆசனங்களையும் ஒரு கட்சி பெறமாட்டாது. 4, 2,1என்றோ 3,2,1, 1என்றோ சிதறுண்டு போனால் இதனால் என்ன பயன். தமிழ் மக்கள் பிரச்சினை தீர்க்கப்படாத நிலையில் இந்த முறை தேர்தல் முக்கியமான தேர்தல்.

தமிழரசுக் கட்சி 1952 தொடக்கம் உள்ள கட்சி . செல்வநாயகம், வன்னியசிங்கம், இராசவரோதயம், இராசமாணிக்கம் போன்ற உத்தமர்களால் ஆரம்பிக்கப்பட்ட கட்சி . இதுவரை வடக்கு, கிழக்கில் கூடிய ஆசனங்களைப் பெற்ற கட்சி. இந்த முறை பல கட்சிகள் தோன்றியபடியால் ஆசனங்களின் எண்ணிக்கை குறையும். ஆனாலும் கூடிய ஆசனங்களை தமிழரசுக் கட்சி (த.தே.கூ) பெறும் என்ற நம்பிக்கை உண்டு.

மாற்றுத் தலைவர் என்று சொல்லப்படும் நீதியரசர் தமிழரசுக் கட்சியில் புகுந்தவர். அவர் ஓய்வுபெற்ற பிற்பாடு அரசிலுக்கு வந்தவர். மாகாண சபைக்குள் தலைவராக வந்தபின் புதிய எண்ணம் கொண்டார், தலைவராக வேண்டும் என்று. முன்பு தமிழரசுக்கு எதிரானவர்களுக்கும் தமிழரசில் இருந்து பிரிந்தவர்க ளுக்கும் மாற்றுத் தலைமையின் கீழ் கட்சி தோன்ற வேண்டும் என்ற எண்ணம் உதயமானது. இது இயல்பு.

> தமிழரசுக் கட்சியினர் போர் நடந்தபோது கூட மக்களுக் காகக் குரல் கொடுத்தவர்கள். இன்று மாற்றுத்தலைமை என்று அறிக்கை விடும் எவரும் அப்போது மக்களுக்காக எந்தவொரு சிறு துரும்பைக் கூட அசைக்கவில்லை.

மாற்று அணி என்று தம்மைச் சொல்வோர் தமிழரசிலிருந்து தாங்கள் பிரிந்தமைக்கு காரணம் ,தமிழரசுக் கட்சியினர் சுயநலவாதிகள், சுகபோகங்களை விரும்புபவர்கள் , தலைவர் மாளிகை கட்டிவிட்டார் என்று அபத்தங்களையே பட்டியலிடுவர். ஆனால் இவர்கள் இதுவரை என்ன செய்தார்கள்? இதற்குப் பதில் இன்று வரை தமிழரசுக் கட்சியை ஆதரித்தவர்களுக்குத் தெரியும். பிரிந்து வந்து வினாவுபவர்களுக்கும் விடை தெரியும். யான் 1952 தொடக்கம் தமிழரசுக் கட்சியை ஆதரித்து வருபவன் என்ற முறையில் தமிழரசுக் கட்சியினர் தங்களால் செய்யக் கூடியதை செய்தனர் என்று சொல்லமுடியும். பண்டா- செல்வா ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டிருந்தால் இன்று இலங்கை சிறந்த பொருளாதாரம் உள்ள நாடாகவும் இனப் பிரச்சினை இல்லாத நாடாகவும் இருந்திருக்கும். இனப்பிரச்சினை தீரும் வரை தமிழர்கள் ஒன்றுபட்டு நிற்கக்கூடிய கட்சி தமிழரசுக் கட்சியே.

தமிழரசுக் கட்சியினர் சுயநலம், சுகபோகம் உள்ளவர்கள் என்ற குற்றச்சாட்டும் பொருத்தமில்லை. மனிதர் யாவரும் சுயநலம் உள்ளவர்களே. மகாத்மா காந்தி ஒருவர் தான் சுயநலம். சுகபோகம் இல்லாது வாழ்ந்தவர். தென்னாபிரிக்காவிலிருந்து இந்தியா வரும்போது அங்குள்ள மக்கள் தனித்தனியே அவருக்கு தங்கத்தை பொதிகளாகக் கட்டிக்கொடுத்தார்கள். இந்தியா வந்தவுடன் அவர்கள் தந்த தங்கத்தை நாட்டின் விடுதலைப் போருக்கு கொடுத்தார் காந்தி. தமிழரசுக் கட்சியினர் போர் நடந்தபோது கூட மக்களுக்காகக் குரல் கொடுத்தவர்கள். இன்று மாற்றுத்தலைமை என்று அறிக்கை விடும் எவரும் அப்போது மக்களுக்காக எந்தவொரு சிறு துரும்பைக் கூட அசைக்கவில்லை. எனவே எல்லாவறையும் ஆராய்ந்து மக்கள் முடிவெடுக்கவேண்டும். வீடு மக்கள் மனதில் என்றும் உண்டு.

ஓர் உண்மை சம்பவம்

# குழந்தை பாசம்

சவுதி அரேபியாவில் ஒரு அரபிக்கு திருமணம் முடிந்து 20 வருடங்கள் கழித்து ஒரு ஆண் குழந்தை பிறந்தது. பல கம்பனிகளுக்கு சொந்தக்காரர்.

அனைத்து சொத்துக்கும் வாரிசு இல்லாமல் போய்விடுமோ என்ற கவலையில் இருந்த அந்த குடும்பத்துக்குப் பொக்கிசமாக வந்தது அந்த குழந்தை.

இந்த வீட்டில் இலங்கையைச் சேர்ந்த ஒரு பெண்மணி வேலை செய்து வருகிறார். இந்த அம்மணிக்கு ஊரில் 3 குழந்தைகள். சிறு வியாபாரம் செய்து குழந்தைகளையும் கவனித்து வருகிறார் அவரின் கணவர். இந்த வீட்டுவேலை செய்யும் அம்மணி தான் அரேபியக் கோடீஸ்வரரின் குழந்தைக்கு எல்லாமே. தாய்ப்பாலை தவிர அனைத்து தேவை களையும் பூர்த்தி செய்வது அவள் தான். தூங்கக் கூட அந்தக் குழந்தை பெற்றோரிடம் செல்லாது. தூங்கிய பின்பு, தூக்கிக்கொண்டு அவர்களின் ரூமுக்கு கொண்டு செல்வார்களாம் பெற்றோர்.

குழந்தைக்கு 2 வயதாகி இருக்கும். வீட்டு வேலை செய்யும் இலங்கைப் பெண்மணி விடுமுறைக்கு ஊர் செல்ல பலமுறை அனுமதி கேட்டும், முடியாத சூழ்நிலையில் தள்ளிக்கொண்டே போனது. மிகுந்த போராட்டத்துக்குப் பின்பு 3 மாத விடுமுறையில் இலங்கை வந்தார் அந்தப் பெண். அந்தப் பெண் பிரிந்த அடுத்த நிமிடத்தில் அழ ஆரம்பித்து விட்டது கோடீஸ்வரரின் குழந்தை. சரி, சிறிது நேரத்தில் சரியாகிவிடும் என்று இருந்து விட்டார்கள்.

இரவு உணவு உண்ணவில்லை. ஒரே அழுகை. அழுது.. அழுது.. துவண்டு தூங்கி விட்டது குழந்தை. அப்படியே தூங்கட்டும். காலையில் விழித்ததும் பசிக்கும், சாப்பிடும். என்று விட்டு விட்டார்கள். காலையில் விழித்ததும் ஈனக்குரலில் அழ ஆரம்பித்து விட்டது.

சாப்பாடு "ஊஹூம். "

அருகில் இருக்கும் சாமான்களைப் பலம் இல்லாத கையால் தூக்கி எறிவதும், துவண்டு விழுவதுமாக குழந்தை இருந்தது. சில மணித்துளியில் மயங்கி விழுந்து விட்டது. பயந்து போன பெற்றோர் மருத்துவமனையில் குழந்தையைச் சேர்த்து விட்டார்கள். ஒரே கவலை. மூன்று நாட்களாக 'ட்ரிப்' மூலம் தான் அனைத்தும் நடந்த து. டொக்டர்களுக்கு ஒன்றும் ஓடவில்லை. எந்த மருத்துவமும் கைகொடுக்கவில்லை. மூன்று நாட்களாகக் குழந்தை கண் திறந்து பார்க்கவில்லை.

மருத்துவர்கள் கையை விரித்து விட்டார்கள். ஒரே மருந்து.... அந்த வேலைக்காரப் பெண் மீண்டும் அங்கே வரவேண்டும். இல்லை என்றால் இப்படியே கோமாவில் தான் குழந்தை இருக்கும். அதன் பின்பு ஒன்றும் நல்லது சொல்ல இயலாது என்று கூறி விட்டார்கள். அந்த அரேபியக் கோடிஸ்வரன் இலங்கைக்குச் சென்ற வேலைக்காரப் பெண்ணை தொடர்பு கொள்ள எவ்வளவோ முயன்றும் முடியாமல் ஒட்டு மொத்த குடும்பமும் உருக்குலைந்து போனது.

கடைசியில் அந்தப் பெண்ணை வேலைக்கு அழைத்து வந்த முகவர் மூலம் ஒருவழியாக இலங்கையில் உள்ள அவளது வீட்டுத் தொலைபேசி இலக்கம் கோடீஸ்வரருக்கு கிடைத்தது. உடனேயே தமாதிக்காமல் அவளுக்கு போன் செய்தார். ஆனால் அந்த வேலைக்காரப் பெண்ணோ "நான் வந்து 4 நாட்கள் தான் ஆகிறது. கணவனுக்கு இளைப்பு நோய் வந்து மருத்துவமனையில் அட்மிட் பண்ணி இருக்கின்றோம். நான் எப்படி வர இயலும்?" என்று தன்னுடைய இயலாமையைக் கூறி அழுதாள்.

கோடீஸ்வரரோ தேம்பித் தேம்பி அழுது கொண்டு, "என் சொத்து அனைத்தும் போனாலும் பரவாயில்லை. எனக்கு என் குழந்தை வேண்டும்" என்று தன் மனேஜரிடம் கூறினார். அவரும் அந்தப் பெண்ணிடம் கெஞ்சிக் கூத்தாடி அவள் மீண்டும் சவுதிக்கு வரச் சம்மதிக்க வைத்தார்.


ஆனால் அடுத்த பிரச்சனை என்னவெனில், அவளுடைய கணவருக்கும் குழந்தைகளுக்கும் பாஸ்போர்ட் இல்லை. இதைத் தயங்கி தயங்கி கோடீஸ்வரரிடம் அவரது மனேஜர் சொல்ல, " என் மனைவி ஒரு அமீரா(இளவரசி) "என்று கூறிய கோடீஸ்வரர் அரசின் உதவியை நாடினார். , அதிசயத்திலும் அதிசயமாக 2 நாட்களில் அனைத்தும் முடிந்து. அவர்கள் அனைவர்களும் சவுதி விமான நிலையத்தில் வந்து இறங்கி விட்டார்கள்.

நேராக அவர்களை அழைத்துக் கொண்டு மருத்துவமனைக்கு போனார் கோடீஸ்வரர். மருத்துவமனையே பரபரப்பாக ஆகிவிட்டது.

குழந்தையின் நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. கசக்கி போட்ட சிறு துண்டு போல கிடந்தது. ஒரு சிறு அசைவு கூட இல்லை.

குடும்பத்தார்கள் கூட்டம் ஒருபக்கம். நண்பர்கள், நிறுவனத்தில் முக்கிய ஆட்கள் என்று பெரும் கூட்டம் மறுபக்கம்.

குழந்தை இருந்த நிலையை பார்த்ததும் அந்த



வேலைக்காரப் பெண்மணி கதறி விட்டார்.

அவளைத் தேற்றி ஆறுதல் படுத்தி, குழந்தைக்கு அருகில் அழைத்துச் சென்றனர்.

குழந்தையின் காதில் மெதுவாக அந்தப் பெண், "ஆதில், ஆதில், ராஜா "என்று தமிழில் அழைக்க, குழந்தையின் காலின் பெருவிரல் அசைய ஆரம்பித்தது. இங்கிலாந்தைச் சேர்ந்த மருத்துவர் சைகை காட்ட, அந்தப் பெண் "ஆதில் ஆதில்.. ராஜா.. ராஜா.. என் ராஜா.. " என்று தொடர்ந்து அழைத்துக் கொண்டே இருந்தார். ஒரே நிசப்தம். சிறிதாக குழந்தையிடம் அசைவு தெரிய.. அனைவர் முகத்திலும் பிரகாசம் .

ஒரு 20 நிமிடத்தில் கண்ணை திறந்தான் குழந்தை, அருகில் இருக்கும் கத்தாமாவை (வேலைக்காரப் பெண்ணைப்)பார்த்தான், எப்படிதான் அவன் உடலில் இவ்வளவு சக்தி இருந்ததோ தெரியவில்லை,

சடார்..... என்று எழ, உடலில் இணைக்கப்பட்ட வயர்கள், டியூப்கள் எல்லாம் தெறிக்க,

அவளை கட்டிப்பிடித்து, முதுகில் குத்து குத்து என்று குத்தி, அவளுடைய முகத்திலும், கழுத்திலும், முத்தங்கள் பொழிய அனைவரின் கண்களிலும் கண்ணீர் உருண்டு ஓடியது. எத்தனை பாசமலர் படம் பார்த்தாலும் இந்த காட்சி கிடைக்காது. அங்கிருந்த அனைத்து பெண்களும் அந்த வேலைக்காரியை முத்தத்தால் நனைத்தார்கள். சிறிது நேரத்தில் அந்த வளாகம் குதூகல மாகவும், சந்தோசமாகவும், ஒரு கல்யாணவீடு மாதிரி உருமாறி விட்டது. அந்த வேலைக்காரப் பெண்மணி சாப்பிட்டுக்கொண்டு இருந்த எச்சில் பட்ட 'கேக்கை', குழந்தை பிடுங்கித் தின்ன, கூடி இருந்த அனைவரும் ரசித்து பார்க்க.. ஒரே பரவசம் தான்.

அப்புறம், அவருடைய கணவருக்கு அதே மருத்துவமனையில் சிகிச்சை வழங்கப்பட்டு, அவர்களின் நிறுவனத்தில் நல்ல ஊதியத்தில் வேலையும் கொடுக்கப்பட்டது. அவளின் குழந்தைகளுக்கு நம்ப முடியாத வகையில் சர்வதேசப் பாடசாலையில் உயர்ந்த கல்வி.

கொடுக்க நினைப்பவன் கொடுக்க நினைத்தால் வாழ்க்கை வசந்தமே

# முறையாக முகக் கவசம் அணிவது கொரோனாத் தொற்றைக் குறைக்கும்

## இலங்கை சுவாச நோய் தொடர்பான வைத்திய நிபுணர்கள் சங்கம் அறிவுறுத்து

கொழும்பு, ஜூலை 17

முகக் கவசங்கள் அணிவதை முறையாகப் பின்பற்றுவதன் மூலம் கொரோனா வைரஸ் தொற்றானது, ஏற்கனவே தொற்றுக்கு இலக்கானவர்களிடமிருந்து ஏனையோருக்கு பரவுவதைக் குறைத்துக் கொள்ள முடியும் என இலங்கை மக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் இலங்கை சுவாச நோய் தொடர்பான வைத்திய நிபுணர்கள் சங்கத்தின் ஆய்வுப் பணிப்பாளர் துஷ்யந்தர மெதகெதர குறிப்பிடுகையில், குறைவான அறிகுறிகள் அல்லது அறிகுறிகள் அற்ற நிலையிலும் கொரோனா வைரஸ் தொற்றுக்கு ஒருவர் இலக்காகியிருக்கலாம். எனவே முகக் கவசங்களை அணிவதன் மூலமாக கொரோனா வைரஸ் தொற்றாளர்களிடம் இருந்து ஏனையோருக்கு தொற்றுப் பரவுவதைக் குறைத்துக்கொள்ள முடியும்.

அத்துடன், மக்கள் முகக் கவசம் அணிதல் மற்றும் சமூக இடைவெளியைப் பேணவேண்டும். அதே போல் பொதுமக்கள் அதிகம் உள்ள இடங்களில் துப்புவதையும் தவிர்த்துக் கொள்ளுங்கள். மேலும், வெவ்வேறு நோய் நிலைமை களினால் அவதியுறும் நோயாளர்களும் இந்த அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதன் மூலம் உயிர் ஆபத்துகளைத் தவிர்த்துக் கொள்ளமுடியும் எனவும் தெரிவித்துள்ளார். (ரி3)

# முதலையிடம் அகப்பட்ட சிறுமி மரணம்

தம்புத்தேகம, ஜூலை 17

முதலையின் தாக்குதலுக்கு உள்ளான மூன்று வயதுச் சிறுமி, உயிரிழந்த சம்பவம் மீகலேவா பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மீகலேவா பகுதியில் உள்ள ஏரியொன்றில் குறித்த சிறுமியும், அவரது தாயும் நேற்று முன்தினம் மாலை நீராடச் சென்ற போதே, சிறுமி முதலையிடம் சிக்கியுள்ளார்.

பின்னர் வனவிலங்கு அதிகாரிகள் மற்றும் பிரதேசவாசிகளால் சிறுமி முதலையிடமிருந்து காயங்களுடன் மீட்கப்பட்டார். தொடர்ந்து சிகிச்சைக்காக தம்புத் தேகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறுமி சிகிச்சை பயனின்றி உயிரிழந்து விட்டார் எனவும் இது தொடர் பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ரி3)

# புதிய வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல் மக்கள் பார்வைக்கு!

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ்ப்பாணம் மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத் தலைமை அலுவலகத்திலிருந்து கடந்த 9ஆம் திகதி கிடைக்கப் பெற்ற வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல், யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாவட்டச் செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திலும் பொதுமக்களின் பார்வைக்காக அறிவிப்புப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன் மாவட்டச் செயலக இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

இதற்கமைய புதிதாக வாகனங்களைப் பதிவுசெய்த உரிமையாளர்கள் வாகனப் பதிவுப் புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும் மாகாணங்களுக்கிடையே வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும்தாள் என்பவற்றையும் யாழ். மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத்தகடுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என மோட்டார் போக்குவரத்து திணைக்கள பிரதி ஆணையாளர் ய.பரந்தாமன் அறிவித்துள்ளார். (ரி3)

# மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதன்படி நாளை சனி காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ். மாவட்டத்தி**ல் அச்செழு பிரதேசம், திக்கம், பாரதிதாசன் படிப்பகம், வியாபாரிமூலை, முத்துமாரி அம்மன் கோவிலடி, நாவலடி, இன்பருட்டி, சுப்பர்மடம், ஸ்ரீலங்கா பாடசாலை, சுப்பர்மடம் மரின் வெல்த் ஐஸ் தொழிற்சாலை, நாரந்தனை, நாரந்தனை நீர்ப்பாசனசபை, புளியங்கூடல், சரவணை, சுருவில் ஆகிய இடங்களிலும், **கிளிநொச்சி மாவட்டத்தில்** கிளிநொச்சி நகரத்திலிருந்து பரந்தன் வரை, பரந்தன் சந்தியிலிருந்து பூநகரியூடாக கௌதாரிமுனை வரை, பரந்தன் சந்தியிலிருந்து புளியம்பொக்கணை வரை, தர்மபுரம், விசுவமடு, தேராவில், புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, மாத்தளன், கரைச்சிக்குடியிருப்பு, முல்லைத்தீவு நகரம், சிலாவத்தையிலிருந்து கொக்கிளாய் வரை, உமையாள்புரம், ஆனையிறவு, மாசர் சோரன்பற்று, கரந்தை, இயக்கச்சி, மல்வில், முகாவில், விநாயகபுரம், கோதாண்டார்குளம், கோவில்வயல் ஆகிய பிரதேசங்களிலும் **வவுனியா மாவட்டத்தில்** கிறிஸ்தவகுளம், புளியங்குளம். ஆகிய இடங்களிலும், **மன்னார் பிரதேசத்தில் காலை 9 மணியிலிருந்து மாலை 3மணி வரை** Southbar பிரதேசம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின்பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார்.



# இராஜாங்கனை பகுதியில் 12 ஆயிரம் குடும்பங்கள் தனிமைப்படுத்தலில்

கொழும்பு, ஜூலை 17

இராஜாங்கனை யாய பிரதேசத்தில் 12 ஆயிரம் குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று சுகாதார பணிப்பாளர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளனர்.

இராஜாங்கன யாய 1, 3 மற்றும் 5இல் வாழும் குடும்பங்களே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான சிலர் அடையாளம் காணப்பட்டமையைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ரி1)

# இன்றைய நாள்

**மேடம்:** எடுத்த செயலை செய்து முடிக்க தேவையான உதவிகள் கிடைக்கும். பெண்களுடைய நீண்ட நாள் பிரச்சினைக்குத் தீர்வு கிடைப்பதற்கான சூழல் உருவாகும். உத்யோகஸ்தர்களுக்கு தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**இடபம்:** திட்டமிட்ட செயல்களை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். புதிய வேலைக்காக காத்திருப்பவர்களுக்கு நல்ல தகவல் கிடைக்கும்.

**மிதுனம்:** குடும்ப வருமானத்தை உயர்த்தப் புதிய முயற்சிகளை மேற்கொள்வீர்கள். அக்கம் பக்கத்தினரிடம் இருந்துஆதரவுபெருகும். பிள்ளைகளின் தனித் திறமைகளை கண்டறிவீர்கள்.

**கடகம்:** உங்களின் மனஉளைச்சலை நெருக்கமானவர்களுடன் பகிர்ந்து கொள்வீர்கள். பணவரவு எதிர்பார்த்த அளவில் இருக்காது. உத்யோகஸ்தர்களுக்கு அலைச்சல் சற்று அதிகரிக்கும். தாயின் அன்பு, ஆசியை பெறுவீர்கள்.

**சிம்மம்:** வியாபாரத்தில் உள்ள பாக்கிகளை வசூல்செய்வீர்கள். நண்பர்கள் தங்களின் குடும்ப விஷயங்களை உங்களிடம் பகிர்ந்து கொள்வார்கள். கடந்த நாட்களில் இருந்த பிரச்சினை தீரும்.

**கன்னி:** நீண்ட நாள் கவலைகள் தீர ஆரம்பிக்கும். வியாபாரத்தில் துணிச்சலாக சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உடன் பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள்.

**துலாம்:** தன்னம்பிக்கையுடன் பொது நல விஷயத்தில் ஈடுபட்டுப் பாராட்டைப் பெறுவீர்கள். பெண்கள் வீண் விவாதங்களில் ஈடுபடாமல் இருப்பது நல்லது. கணவன், மனைவி இடையே ஒற்றுமை அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் திடீர் பிரச்சினைகள் ஏற்படலாம். பெண்களுக்கு செலவுகள் அதிகரிக்கும். இயந்திரப் பணியாளர்கள் பணிகளில் கவனமாக இருக்கவும்.

**தனுசு:** உத்தியோகத்தில் உங்களின் திறமையை வெளிப்படுத்துவதற்கான சூழல் உருவாகும். வாகனம் ஓட்டும்போது எச்சரிக்கை தேவை. பூர்வ சொத்துக்கள் மூலம் எதிர்பார்த்த பலன் உண்டு.

**மகரம்:** மனதில் தைரியம் கூடும். வாகனங்கள் மூலம் லாபம் கிடைக்கும். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாகும். சுபநிகழ்ச்சி தொடர்பான விஷயங்களில் தாமதம் ஏற்படலாம்.

**கும்பம்:** வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக அமையும். கலைப் பொருள்கள் வாங்குவீர்கள். தள்ளிப்போனவாய்ப்புகள் தேடி வரும்.

**மீனம்:** கருத்து வேறுபாடுகளால் விலகிய நண்பர்கள் தேடி வருவார்கள். வியாபாரத்தில் உள்ள கடனை தீர்க்க முயற்சி செய்வீர்கள். கலைத் துறையினருக்கு வெற்றி வாய்ப்பு கூடும்.

## செய்திகள், நிகழ்வுகளிடையே விருப்பு இலக்கங்கள் வேண்டாம்

### தேர்தல் ஆணைக்குழு கோரிக்கை

கொழும்பு, ஜூலை 17

செய்திகள், செய்தி நிகழ்ச்சிகள் அல்லது வேறு நிகழ்ச்சிகளுக்கு இடையில் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் மற்றும் வேட்பாளர்களின் விருப்பு வாக்கு இலக்கங்களைக் காட்சிப்படுத்த வேண்டாம் என்று தேர்தல் ஆணைக்குழு, சகல ஊடக நிறுவனங்களுக்கும் அறிவித்துள்ளது.

செய்திகள், செய்தி நிகழ்ச்சிகள் அல்லது வேறு நிகழ்ச்சிகளின்போது இலவசமாகவோ அல்லது கட்டணம் செலுத்தியோ பரப்புரை செய்யும் சந்தர்ப்பங்கள் சகல கட்சிகளுக்கும் அல்லது சகல வேட்பாளர்களுக்கும் கிடைப்பதில்லை.

இதனால் குறித்த சந்தர்ப்பம் கிடைக்காத தரப்பினர் பாதிப்புக்கு உள்ளாவார்கள் என்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவின் கையெழுத்தில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தவிர அரசியல் விவாதங்கள், கலந்துரையாடல்கள் போன்ற நிகழ்ச்சிகளுக்கு ஒரே கட்சியைச் சேர்ந்த அணியையோ அல்லது தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்களையோ அழைப்பது சிறந்தது அல்ல என்பது தேர்தல் ஆணைக்குழுவின் நிலைப்பாடு.

பொதுத்தேர்தல் சம்பந்தமான ஊடக வழிக்காட்டல்கள் ஏற்கனவே வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன. சகல ஊடக நிறுவனங்களும் அதற்கு இசைவாக சுதந்திரம் மற்றும் நீதியான தேர்தலை நடத்த உதவிகளை வழங்கும் என்று தேர்தல் ஆணைக்குழு எதிர்பார்த்துள்ளது என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (த)

# ராஜபக்ஷவின் ஆட்சியில் மீளவும் ஊடகவியலாளர்களுக்குத் தொல்லை?

### சி.ஐ.டியின் முன்னாள் அதிகாரிகளும் தப்பவில்லை

கொழும்பு, ஜூலை 17

**சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்கவை கொலைசெய்த குற்றவாளிகள் தொடர்பான இரகசிய தகவல்களைக் கசிய விட்டார் என்று குற்றம் சுமத்தி, ஊடகவியலாளர்கள் மற்றும் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் முன்னாள் அதிகாரிகளுக்கு எதிராக அந்தத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரியவருகிறது.**

இதனடிப்படையில், ஈதலய சஞ்சிகையின் தொகுப்பாளரான ஊடகவியலாளர் ஸ்ரீலால் பிரியந்த கடந்த 14 ஆம் திகதி குற்றவியல் விசாரணைத் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

லசந்த விக்ரமதுங்கவின் கொலையில் இரகசிய தகவல் கசிந்தது என்ற தலைப்பில் அந்த சஞ்சிகையில் வெளியான செய்தியில் வெளியிடப்பட்ட குற்றவாளிகளின் தொலைபேசி விவரங்களை வழங்கியது யார் என்பது குறித்து ஊடகவியலாளரிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது. எனினும், தனக்கு தகவல் வழங்கிய மூலத்தை வெளியிட ஸ்ரீலால் பிரியந்த மறுத்துள்ளார் என்று கூறப்படுகிறது.

இது சம்பந்தமாக குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவிடமும் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. அத்துடன் லசந்த விக்ரமதுங்கவின் கொலை தொடர்பான விசாரணைகளுக்கு பொறுப்பாக இருந்தவரும் பதுளைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளவருமான உதவிப்பொலிஸ்அத்தியட்சகர்பி.எஸ். திசேரா எதிர்வரும் 20 ஆம் திகதி விசாரணைகளுக்கு அழைக்கப்பட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது.

எது எப்படி இருந்த போதிலும் குற்றவியல் விசாரணை திணைக்களம் தற்போது லசந்த விக்ரமதுங்கவை கொலை செய்தவர்களை புறந்தள்ளிவிட்டு, கொலையாளிகள் தொடர்பான தகவல்களை வெளியிட்ட நபர்களை பின்தொடர்ந்து வருவதை தெளிவாக காண முடிவதாக அந்த வழக்கு குறித்து அவதானித்து வருவோர் தெரிவிக்கின்றனர். (த)

## மத்தியஸ்தர் சபை ஞாயிறு நடைபெறாது!

நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்படவிருந்த மத்தியஸ்தர் சபைக் கடமைகள் மறுஅறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளன என யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்ட மத்தியஸ்தர் சபைகளின் பயிற்சி அதிகாரி ப.சனாதனசர்மா தெரிவித்துள்ளார்.

கோரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக தடைப்பட்டிருந்து மத்தியஸ்தர் சபை அமர்வுகள் மீண்டும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நீதி மன்றத்துடன் தொடர்புடைய பிணக்குகளின் விசாரணைகளுக்கு நாளைமறுதினம் ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இந் நிலையில் மறுஅறிவித்தல் வரை மத்தியஸ்தர் சபை அமர்வுகள் மீண்டும் பிற்போடப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-39)

## உணவகங்கள், கடைகள் மீது சுகாதாரப் பகுதி திடீர் சோதனை

தென்மராட்சி, ஜூலை 17

கொடிகாமம் நகரப் பகுதியிலுள்ள உணவகங்கள், பலசரக்கு விற்பனை நிலையங்கள் மற்றும் சந்தை ஆகியவை சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு பொது சுகாதார பரிசோதகர்களால் நேற்று பரிசோதிக்கப்பட்டன.

நகரப் பகுதியில் உள்ள 10 உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் 15 பலசரக்கு விற்பனை நிலையங்கள் போன்றனவற்றில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

உணவு கையாளும் நிலையங்களில் காணப்பட்ட சில குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறு அறிவுறுத்தியுள்ளனர். 4 பலசரக்கு விற்பனை நிலையங்களில் திகதி காலாவதியான உணவுப் பொருள்கள் விற்பனைக்கு வைத்திருந்தமை மற்றும் பூச்சிகள் மொய்த்த கடலை, கோதுமை மா போன்றவை விற்பனைக்கு வைத்திருந்தமை போன்ற குற்றங்களுக்காக வர்த்தகர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர். (த-9)

## ரயில் மோதி இறந்தவரை அடையாளம் காணக் கோரிக்கை

சாவகச்சேரி, ஜூலை 17

சாவகச்சேரி சந்தைக்கு அருகில் ரயில் மோதுண்டு இறந்தவரின் சடலத்தை அடையாளம் காட்டுமாறு சாவகச்சேரி பிரதேச திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சீ.சீ.இளங்கீரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சம்பவத்தில் சுமார் 60 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார். சடலம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

அவரின் இறப்பு தொடர்பாக விசாரணை மேற்கொண்ட திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சடலத்தை இரு தினங்களுக்கு மேல் சாவகச்சேரி மருத்துவமனை சவச்சாலையில் வைத்திருக்க முடியாது என்பதால் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை சவச்சாலைக்குக் கொண்டு செல்லவேண்டும்.

நீல நிற கோடுள்ள வெள்ளை நிற சேர்ட்டும் மஞ்சள் நிறச் சாரமும் அணிந்துள்ளார். நான்கு அடி 6 அங்குல உயரம் கொண்டவர். இவரின் சேர்ட்டினுள் கனேமுல்லை பிரதேசத்தில் பெற்ற தேசிய லொத்தர் சபையின் அதிஷ்டலாபச்சீட்டு காணப்படுகிறது.

இவரைப்பற்றிய தகவல்தெரிந்தவர்கள் உடனடியாக சாவகச்சேரி பொலிஸாருடன் தொடர்புகொள்ளுமாறு அறிவித்துள்ளார். (த-9)

## பயங்கரவாத 'ஃபோடோ' அமைப்பு இலங்கை உட்பட 160 நாடுகளில்

கொழும்பு, ஜூலை 17

துருக்கி நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட இஸ்லாமிய மத பயங்கரவாத அமைப்பான 'ஃபோடோ' அமைப்பு இலங்கை உட்பட 160 நாடுகளில் இயங்கி வருகின்றது என்று இலங்கைக்கான துருக்கி நாட்டின் தூதுவர் ஆர்.தெமன் ஷேகிர் ஜியோலு தெரிவித்துள்ளார்.

பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் ஊடாக ஃபோடோ அமைப்பு தனது வலையமைப்பை நிறுவியுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

துருக்கியில் நடைபெற்ற இராணுவ சதிப்புரட்சி தோற்கடிக்கப்பட்ட நான்காவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் துருக்கி தூதுவர் இதனைக் கூறியுள்ளார்.

'ஃபோடோ' அமைப்பு 1970 ஆம் ஆண்டுகளில் தொண்டு நிறுவனமாக துருக்கியில் தனது பணிகளை ஆரம்பித்ததுடன் பின்னர் உலகம் முழுவதும் பாடசாலைகளை நிறுவியது.

ஃபோடோ அமைப்பு வர்த்தக கொடுக்கல், வாங்கல்கள் மற்றும் அரச கேள்வி மனுக் கோரல்கள் தொடர்பான செயற்பாடுகளில் தனது தொடர்புகளை ஆரம்பித்த பின்னர், பணச் சலவை, சட்டவிரோத பணப்பரிமாற்றம் மற்றும் ஏனைய நிதி ரீதியான குற்றங்களை வர்த்தகமாக்கிக் கொண்டது.

இதனையடுத்து அந்த அமைப்பு சீர்குலைப்புப் நடவடிக்கைகளுக்கு இந்த நிதியை பயன்படுத்தி வருகிறது. நிறுவனங்கள் மற்றும் வர்த்தகர்களிடம் பெறும் அன்பளிப்புகளை பொதுமக்கள் மத்தியில் நிலைப்பாடுகளை உருவாக்க ஊடக நிறுவனங்களை நிறுவியுள்ளது.

துருக்கியில் ஃபோடோ அமைப்பு செயலிழந்துள்ளது. எனினும் வேறு நாடுகளில் தமது அமைப்பைக் கொண்டு நடத்த அவர்கள் முயற்சித்து வருகின்றனர்.

உலக பொருளாதார மற்றும் உலக அரசியல் அழுத்தங்களை ஏற்படுத்தும் எதிர்பார்ப்பு ஃபோடோ அமைப்புக்கு உள்ளதால், அந்த அமைப்பு இயங்கும் நாடுகளில் அது நேரடியாக பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும்.

'ஃபோடோ' பயங்கரவாத அமைப்பு செயற்படும் விதம் தொடர்பாக இலங்கை அரசுக்கு அனைத்து தகவல்களும் வழங்கப்பட்டுள்ளன. இலங்கையில் உள்ள அந்த அமைப்பின் இணை நிறுவனங்கள் மற்றும் அவற்றில் செயற்படும் நபர்கள் தொடர்பான சகல தகவல்களும் வழங்கப்பட்டுள்ளன என்றும் துருக்கி தூதுவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (த)

## மேல் மாகாணத்தில் 422 பேர் கைது

கொழும்பு, ஜூலை 17

மேல் மாகாணத்தில் நடத்தப்பட்ட24 மணி நேர சிறப்பு சோதனை நடவடிக்கையின் போது 422 பேர் கைதுசெய்யப்பட்டனர். இவர்களில் 176 பேர் ஹெரோய்யின் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டனர்.

சட்டவிரோத மதுபானம் வைத்திருந்த குற்றச்சாட்டுக்காக 115 பேரும், கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டுக்காக 84 பேரும், ஏனைய குற்றச்சாட்டுக்களுக்காக மேலும் பலரும் இவ்வாறு கைது செய்யப்பட்டனர். (ஐ)

# வாழ்வாதார உதவிகளும் அன்பளிப்புகளும்



முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில் போரால் பாதிக்கப்பட்டு கை, கால் இழந்த நிலையில் வாழும் குடும்பத் தலைவர் ஒருவரின் மகளின் பல்கலைக்கழகச் செலவுக்காக சுசீலன் பவுண்டேசனால் மாதந்தோறும் 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகின்றது. கொழும்பில் வசிக்கும் நடராசன் என்பவர் கடந்த மாதத்துக்கான பணத்தை வழங்கியிருந்தார். (ம)





சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பால் சுமார் நான்காயிரம் வறிய குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் அண்மையில் வழங்கப்பட்டன. (ம)



வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் கழகத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் சிலருக்கு அண்மையில் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ம-222)



லண்டனில் வசிக்கும் கந்தப்பிள்ளை திலீபன் என்பவரின் சொந்த நிதி அன்பளிப்பில் கல்விக்கு கரம் கொடுப்போம் எனும் திட்டத்தின் கீழ் முள்ளியவளை கிழக்கில் வசிக்கும் மாணவன் ஒருவருக்கு உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ம)







வட்டு இந்து வாலிபர் சங்க கனடாக் கிளையின் நிதி அன்பளிப்பின் மூலம் வட்டு இந்து வாலிபர் சங்க கஜமுகன் முன்பள்ளி சிறார்களுக்கு சத்துணவுகள் அண்மையில் வழங்கப்பட்டன. (ம)



வவுனியா தெற்கிலுப்பைக்குளம் பகுதியில் வசித்து வரும் சிறப்புத் தேவைக்குட்பட்ட குடும்பத்திலுள்ள பாடசாலை மாணவி ஒருவருக்கு தமிழ் விருட்சம் அமைப்பால் துவிச்சக்கர வண்டியொன்று அண்மையில் வழங்கப்பட்டது. (ம)




ஜீவ ஊற்று அன்பின் கரம் ஊடாக முல்லைத்தீவு விசுவமடு தேவிபுரம் பகுதியைச் சேர்ந்த சிறப்புத் தேவையுடையவர்கள் சிலருக்கு நெதர்லாந்தைச் சேர்ந்த வெளிச்சவீடு தேவ ஆலயத்தால் உலருணவுகள் அண்மையில் வழங்கப்பட்டன. (ம)






சுசிலன் பவுன்டேசன் நிறுவனத்தால் முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழும் கர்ப்பவதிகளுக்கு அத்தியாவசிய மருந்துப்பொருள்கள் வழங்கப்பட்டன. (ம-222)




முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் 47 குடும்பங்களுக்கு வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தால் அண்மையில் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)

# யாருக்கும் அடிபணிந்து அரசமைப்பை உருவாக்கோம்!

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 17**

**ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுடனும் 'டீல்' அரசியல் செய்ய வேண்டிய தேவை, பொதுஜன பெரமுனவுக்கு கிடையாது. அரசியல்வாதிகளின் நிபந்தனைகளுக்கு அடிபணிந்து அரசமைப்பைத் திருத்த வேண்டிய தேவை கிடையாது. தீவிரவாத மற்றும் அடிப்படைவாத கொள்கைகளை உடைய அரசியல்வாதிகளுடன் ஒருபோதும் ஒன்றிணையமாட்டோம். தமிழ்– முஸ்லிம் சமூகத்தினருக்கு பொதுஜன பெரமுனவின் தேசிய பட்டியலில் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அனைத்து இன மக்களின் ஆதரவுடன் சிறந்த தேசியத்தை கட்டியெழுப்புவோம் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் முஸ்லிம் சமூகத்தினருக்கும் இடையில் ஆரம்ப காலத்தில் இருந்து நெருங்கிய உறவுநிலை காணப்படுகிறது. இந்த உறவு இலங்கையை மாத்திரம் வரையறுத்தது அல்ல. சர்வதேச முஸ்லிம் சமூகத்தினருடன் நெருங்கிய நல்லுறவு காணப்படுகிறது. அதுவே எமது ஆட்சியின் பலமாக காணப்பட்டது.

2015ஆம் ஆண்டுக்கு பிறகு சர்வதேச உறவுகள் குறுகிய நிலைக்குள் தள்ளப்பட்டன. வடக்கிலும், தெற்கிலும் இளைஞர்கள் ஆயுத மேந்தி போராட்டங்களில் ஈடுபடுவதற்கு ஆரம்ப கால அரசியல் தலைமைகளின் தவறான அரசியல் தீர்மானங்களே காரணம். 30 வருட கால போர் அனைத்து இன மக்களின் ஒத்துழைப்பின் ஊடாக தோற்கடிக்கப்பட்டு சுதந்திரம் உருவாக்கப்பட்டது. கடந்த அரசில் இனங்களுக்கிடையில் தேசிய நல்லிணக்கம் கட்டியெழுப்பப்படவில்லை.

மாறாக இனங்களுக்கிடையில் பிரிவினைவாதம் தோற்றுவிக்கப்பட்டது. 2015ஆம் ஆண்டு அரசியல் ரீதியில் மக்கள் செய்த தவறை இடம் பெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலில் திருத்திக்கொண்டார்கள். பொதுத்தேர்தலிலும் தவறுகள் திருத்தப்படும்.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் ஆகியோருடன் டீல் அரசியல் செய்யவேண்டிய தேவை எமக்குக் கிடையாது. இவர்களின் அரசியல் கொள்கைகள் முற்றிலும் மாறுபட்டவை. இரு தரப்பினரும் ஒருபோதும் இணைந்து செயற்பட முடியாது.

தீவிரவாதம், மற்றும் பிரித்தாளும் கொள்கையைக் கொண்டவர்களை புதிய அரசில் ஒருபோதும் இணைத்துக் கொள்ளமாட்டோம். முஸ்லிம், தமிழ் சமூகத்தினருக்கு பொதுஜன பெரமுனவில் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

அனைத்து இன மக்களையும் ஒன்றினைத்து இனவாதமற்ற தேசியத்தை நிச்சயம் கட்டியெழுப்புவோம்- என்றார். (ஒ,5)

# மாணவர்கள், ஊழியர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்துக!

## பல்கலைக்கழக நிறைவேற்று அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 17

பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு உடனடியாக நடவடிக்கைகளை எடுக்குமாறு, பல்கலைக்கழக நிறைவேற்று அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம், பல்கலைக்கழக நிறைவேற்று அதிகாரிகள் சங்கத்தின் தலைவரும் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் பிரதிப் பதிவாளருமான பிரதீப் ரத்நாயக்க விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

“கொரோனா வைரஸ் தொற்றுநோய் காரணமாக, நாட்டில் புதியதொரு சூழ்நிலை உருவாகி வருவதால், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஊழியர்களின் பாதுகாப்புத் தொடர்பில் நிச்சயமற்ற நிலைமை காணப்படுகின்றது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மாணவர்களும் ஊழியர்களும் தற்போது பல்கலைக்கழக முறைமைக்குள் நுழைந்துள்ளனர். அத்தோடு, அனைத்து நிர்வாக ஊழியர்களும் கல்வி சாரா ஊழியர்களும் பரீட்சைகளை நடத்துவதற்காக அழைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் நாளாந்த பொதுப்போக்குவரத்தை பயன்படுத்துபவர்களாவர்.

இது தொடர்பில் சுகாதார அதிகாரிகளுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கலந்துரையாடி, உடனடியாக நடவடிக்கைகளை எடுக்கும் என்று பல்கலைக்கழக நிறைவேற்று அதிகாரிகள் சங்கம் எதிர்பார்க்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)

# நீரோடையில் சிசுவின் சடலம் மீட்பு

கொழும்பு, ஜூலை 17

பிறந்து ஒரு நாளைக் கொண்ட பெண் சிசுவொன்றின் சடலம் நீரோடையில் மிதந்து வந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

சிசுவின் சடலம் வெலிமடைப் பகுதியின் வக்கடஹின்ன நீரோடையில் வெலிமடைப் பொலிஸாரால் நேற்றுமுன் தினம் மீட்கப்பட்டுள்ளது. இறந்த சிசுவின் தாயை பொலிஸார் தேடி வருகின்றனர். (ரி1)

# காலியில் 34 பேர் தனிமைப்படுத்தலில்

காலி, ஜூலை 17

காலிதெளிகட - மாஜுவானபிரதேசத்தில்கொரோனா சந்தேகத்தில் 34 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். கந்தகாடு புனர்வாழ்வு முகாமில் ஆலோசகராக பணியாற்றும் ஒருவர் கடந்த 5ம் திகதி குறித்த பிரதேசத்திற்கு வந்து சென்றுள்ளார். அதனைத் தொடர்ந்து இவருடன் நெருங்கிப் பழகியவர்களே தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)

கண்ணீர் அஞ்சலி



எமது ஆலய பரிபாலன சபை உறுப்பினர்
சின்னத்தம்பி
நவரத்தினம்
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வீரகத்திப் பிள்ளையாரை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
நம்பிக்கை பொறுப்பாளர் பரிபாலன சபையினர்
கைதடி வீரகத்திப்பிள்ளையார் கோயில்,
முதலாய கோயில்கள் (cs.33049) (13.17)

91ஆம் ஆண்டு பிறந்தநாள் வாழ்த்தும் நினைவும்



Dr.சேனா இந்திரராஜா
(Dr. Chelvadurai Indrarajah)
தோற்றம்
17.07.1929
மறைவு
29.04.2014
உங்கள்
நினைவுகளோடு வாழும்:
அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும்
நாகேஸ்வரி.

# சிறப்பாக நடைபெற்ற மரிய கொறற்றி ஆலயத் திருவிழா

மன்னார், ஜூலை 17

மன்னார் பெரிய பண்டிவிரிச்சான் பங்கின் தாய்க்கோயிலான புனித மரிய கொறற்றி ஆலயத் திருவிழா நேற்று முன்தினம் புதன்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

காலை 6.30 மணிக்கு அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளாரின் தலைமையில் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலியின் முடிவில் திருச் சொரூப ஆசீரும் நடைபெற்றன.

திருவிழா திருப்பலியில் அருட்தந்தை டெஸ்மன் குலாஸ் அடிகளார், மறைமாவட்ட அன்பியம், பாப்பிறை சபைகளின் இயக்குநர் அருட்தந்தை சவுல்நாதன் அடிகளார் உட்பட அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பங்கு மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-56)



# கன்னியா காணி வழக்கு செப்.15க்கு ஒத்திவைப்பு

திருகோணமலை, கன்னியா வெந்நீருற்றின் சர்ச்சைக்குரிய காணி விவகாரம் தொடர்பான வழக்கு எதிர்வரும் செப்ரெம்பர் 15 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

தொல்பொருள் திணைக்களம் சார்பாக சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் விக்கும் டி ஆப்ரு மன்றில் முன்னிலையானார். வழக்கை தள்ளுபடி செய்யுமாறு சட்ட மா அதிபர் திணைக்களம் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கோரினார்.

கோவில் சார்பாக மன்றில் முன்னிலையான சட்டத்தரணி, அந்தக்காணி இந்துக் கோவிலுக்கே சொந்தமானது எனவாதாடினார். இருதரப்பு வாதங்களையும் செவிமடுத்த திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி, வழக்கை எதிர்வரும் செப்ரெம்பர் 15 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (எ)


## மரண அறிவித்தல்



தோற்றம் 15 . 01 . 1943 — மறைவு 16 . 07 . 2020

### திருமதி தியாகராஜா இராஜேஸ்வரி (ராசேஸ்)

உடுவில் கிழக்கு, கற்பகப்பிள்ளையார் கோயிலடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தியாகராஜா இராஜேஸ்வரி (ராசேஸ்) நேற்று (16.07.2020) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தியாகராஜாவின் அன்பு மனைவியும், மங்களேஸ்வரியின் அன்புத் தாயாரும், சிவபாலுவின் அன்பு மாமியாரும், ஜெயபாலசிங்கம், காலஞ்சென்ற தனபாலசிங்கம் மற்றும் ஜெயராணி, புஸ்பராணி, காலஞ்சென்ற குலசேகரம் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற கனகாம்பிகை மற்றும் சண்முகம், கண்மணி, காலஞ்சென்ற துரை மற்றும் பாலசிங்கம் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.07.2020) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



தோற்றம் 19 . 01 . 1940 — மறைவு 16 . 07 . 2020

### திருமதி மார்க்கண்டு அரசம்மா

கோப்பாய் மத்தி, கோப்பாய் (கந்தசாமி கோவிலடி)ஐ பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மார்க்கண்டு அரசம்மா நேற்று (16.07.2020) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி சின்னப்பா - பொன்னம்மா தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற செல்லையா மார்க்கண்டுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா, வள்ளிப்பிள்ளை, நவமணி, இராமலிங்கம், பரமலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் விமலாதேவி, சரஸ்வதி (சுவிஸ்), வாணிஸ்ரீ, சாந்தினி, மனோன்மணி, செல்வமலர் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் மங்களேஸ்வரன், இந்திரகுமார் (சுவிஸ்), பரமலிங்கம், குணசீலன், விஜயகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சரண்யா (கனடா), லாவண்யா, சாதுர்த்தியா, லக்ஷியா (சுவிஸ்), புருஷோத்மன் (சுவிஸ்), கிரிசாந்த் (உரிமையாளர் **Orange Cool Bar**), வேணுஜன் (பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ். பல்கலைக்கழகம்), சுவர்ணா, கவிசனா, அபிஷயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.07.2020) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் வடக்கு கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோப்பாய் மத்தி, (கந்தசாமி கோவிலடி) கோப்பாய்.

தகவல்: குடும்பத்தினர்
077 8098 126


# வீதி அளவு நிர்ணய பணிகள் முன்னெடுப்பு

மட்டக்களப்பு, ஜூலை 17

மட்டக்களப்பு மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட வீதிகளை அடையாளப்படுத்தி அந்த வீதிகளுக்கான பெயர்களையும், வீதிரேகைகளின் அளவுகளையும் நிர்ணயம் செய்தல் தொடர்பான கலந்துரையாடலானது நேற்று மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் தலைமையில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாநகரில் பல வீதிகள் பெயர் சூட்டப்படாமல் காணப்படுகின்றமையுடன், அந்த வீதிகளின் அளவுகள் தொடர்பிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இதனை நிவர்த்தி செய்யும் வகையில் இந்தக் கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந்தக் கலந்துரையாடலில் மாநகருக்குள் காணப்படும் வீதிகளின் விவரங்களை சேகரித்து, திருத்தங்களை ஆராய்ந்து அவற்றை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வது என்றும், வீதி ரேகைகளின் அளவுகளை அந்தந்த வீதிகளுக்கு ஏற்ற வகையிலும், அந்த வீதி களுக்கு உரித்தான நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட அளவுகளுக்கு ஏற்ப தீர்மானித்து நடைமுறைப்படுத்துவது என்றும் அங்கு முடிவு எடுக்கப்பட்டது. (ரி2)

# பச்சை நிறப் பிணக்கு சுமுகமாகத் தீர்க்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூலை 17

சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியால் தேர்தல்கள் ஆணைக்குழுவில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு சுமுகமாகத் தீர்வு காணப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து புதிய கட்சியை சஜித் பிரேமதாச ஆரம்பித்திருந்தார். ஐக்கிய தேசியக் கட்சி பயன்படுத்தி வரும் பச்சை நிறத்தையே சஜித் பிரேமதாச அணியினரும் பயன்படுத்தி வருவதாகத் தெரிவித்து, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலர் அகிலவிராஜ் தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தார்.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு நேற்றுமுன்தினம் இரு தரப்பையும் அழைத்து ஆராய்ந்திருந்தது. கட்சியின் பெயர், சின்னம் என்பவற்றையே தேர்தல்கள் ஆணைக்குழு கவனத்தில் கொள்ள முடியும். நிறம் தொடர்பில் சட்ட ஏற்பாடுகள் இல்லை. இருதரப்பும் சுமுகமாகப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.

இதன்போது சஜித் பிரேமதாச அணியினர், பச்சை நிறத்துடன் வேறு நிறத்தையும் இணைத்துப் பயன்படுத்துவதாக அறிவித்துள்ளனர். அதனையடுத்து இந்த விவகாரத்துக்கு முற்றுப் புள்ளி வைக்கப் பட்டுள்ளது. (ஓ.5)


## மரண அறிவித்தல்



### திருமதி நாகேஸ்வரி குமாரசாமி

கண்டியைப் பிறப்பிடமாகவும் கச்சாய் வீதி .சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. நாகேஸ்வரி குமாரசாமி நேற்று (16.07.2020 ) இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - தையல்முத்து தம்பதியினரின் அன்பு மகளும் .காலஞ்சென்றவர்களான சின்னையா - மாணிக்கம் தம்பதியினரின். அன்பு மருமகளும் காலஞ்சென்ற குமாரசாமி (மாத்தையா) வின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, சுப்பிரமணியம்.பொன்னம்மா.இராஜேஸ்வரி.கைலைநாதன்.யோகரத்தினம் ஆகியோரின்அன்புச் சகோதரியும் .சுந்தரகலா, சூர்யகலா ( பிரான்ஸ் ) குமாரதாசன் (லண்டன் ) யோகதாஸ் (கனடா ) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் சிவகுமாரன் (பிரான்ஸ்) மைவிழி (லண்டன் ) விமலினி (கனடா ) ஆகியோரின் அன்பு மாமியாரும் .திருச்செந்தூரன், சிவரூபன், சிவதர்சன், சிவன்ஜா , குருபரன் , மதுமி .ஜோதீஸன் , நிதீஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று இன்று (17.07.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்., உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கச்சாய் வீதி, சாவகச்சேரி

தகவல் குடும்பத்தினர்.

# அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டுமே வெளியே வாருங்கள்!

### வைத்திய நிபுணர் சுதத் சமரவீர கோரிக்கை

கொழும்பு, ஜூலை 17

**அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டும் உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வெளியில் செல்லுமாறு சுகாதார அமைச்சின் சிரேஷ்ட தொற்றுநோயியல் வைத்திய நிபுணர் சுதத் சமரவீர நாட்டு மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: கந்தகாடு போதைப்பொருள் புனர்வாழ்வளித்தல் நிலையத்தில் ஆலோசகர்களாகப் பணியாற்றியவர்கள் அவர்களது வீடுகளுக்குச் சென்ற பின்னர், அங்கிருந்து மேலும் பல்வேறு இடங்களுக்குச் செல்கின்றமையை அவதானிக்க முடிகிறது. எனவே அவர்களிடமிருந்து வைரஸ் மேலும் பலருக்குப் பரவக்கூடிய வாய்ப்புகள் உள்ளது. அதன் காரணமாகத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்களின் எண்ணிக்கையும் அதிகமாக உள்ளது. ஆகவே கொரோனா வைரஸ் தொற்று பரவக்கூடிய அவதான நிலை மிகவும் உயர்வாகக் காணப்படுகிறது.

எனவே மக்கள் அநாவசியமாக வெளிப்பயணங்களை மேற்கொள்வதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். மிகவும் அத்தியாவசிய தேவைகள் இருப்பின் மாத்திரம் உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வெளியில் செல்லுங்கள். கந்தகாடு புனர்வாழ்வளித்தல் நிலையத்தில் பணியாற்றிய ஒருவர் மாத்திரமே இராஜங்கனைக்கு வருகை தந்திருக்கிறார். எனினும் அதனையடுத்து 16 பேர் வரையில் தொற்றுக்குள்ளாகியுள்ளமை இனங்காணப்பட்டிருக்கிறது. எனவே இது சமூகப் பரவலாக மாற்றமடைந்தால் இவ்வாறானதொரு நிலைமை ஒட்டுமொத்த நாட்டிலும் ஏற்படும் எனத் தெரிவித்துள்ளார். (ரி1)

# உணவகத்துக்கு எதிராக ரூ.55,000 அபராதம்

சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கி வந்த இரு உணவகங்களுக்கு எதிராக யாழ்.மாநகர சுகாதார பரிசோதகர் அ.சுரேஷ்குமாரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் சுகாதார விதிமுறைகளுக்கு முரணான வகையில் இயங்கிவந்த உணவகத்தின் உரிமையாளருக்கு எதிராக ஏழு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு யாழ்.மேலதிக நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

இவ் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது 35 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த நீதிவான் மறு அறிவித்தல் வரை உணவகத்தைப் பூட்டி சீல் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

யாழ். கச்சேரி பகுதியில் சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கிய உணவகத்தின் உரிமையாளருக்கு எதிராக 4 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் நீதிவான் 20 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துள்ளார். (ரி3)


## பெயர் மாற்றம்

சாம்சன் ஜெசில்டா ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை பிரசாந்தினி என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் பிரசாந்தினி என்றே கையொப்பமிடுவேன் என இலங்கை சோசலிச குடியரசிற்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன். (e.34390) (13.17)

## கைப்பை தொலைந்துவிட்டது

சாரதி அனுமதிப்பத்திரம். தேசிய அடையாள அட்டை (941703917V) ATM அட்டை அடங்கிய கைப்பை ஒன்று பலாலி வீதி. இலுப்பையடிச் சந்திக்கும். யாழ்ப்பாணம் சிற்றி மெடிக்கலுக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ் காணும் தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளுங்கள்

தொடர்பு: 076 256 5819 (es.33040) (13.17)

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாண வீதி, ஆனைக்கோட்டையில் ஆறு பரப்புடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. ( உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது / வியாபார நோக்கத்திற்காகவும் பயன்படுத்தலாம். 3 Rooms, 2 Halls, Kitchen, Attached Bathroom, Car Parking)

077 651 2037

## விற்பனைக்கு

கமுகு (பாக்கு) மடலில் செய்த சாப்பாட்டு தட்டுகள் விற்பனைக்கு உண்டு.

முற்றிலும் இயற்கையானவை, ஆரோக்கியமானவை, சூழலுக்கு பாதிப்பில்லை, உறுதியானவை.

தற்போதைய சூழலில் நிகழ்வுகளில் ஒருமுறை பயன்படுத்த உகந்தவை.

077 3164 617 LAVA CARE

85, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.


# நண்பர்களுக்கிடையில் மோதல்; Øk^1Âþwç\ 17.07.2020 ஒருவர் பலி

கொழும்பு, ஜூலை 17

கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுக் களனி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலவத்த, கோனவல பகுதியில் இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் பகுதியில் வாடகை அறையொன்றல் தங்கியிருந்த இரு நண்பர்களுக்கிடையில் நேற்றிரவு ஏற்பட்ட மோதல் காரணமாக மேற்கண்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது. தாக்குதலில் காயமடைந்த 18 வயதுடைய நபர் கிரிபத்கொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். இச் சம்பவத்துடன்

# உயரமான அலைகளால் கரையோரங்கள் மூழ்கும்

### அனர்த்த முகாமைத்துவ நிலையம் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 17

கடலில் ஏற்படும் உயரமான அலைகளால் கடலோரப் பகுதிகளில் கரையோரங்கள் நீரில் மூழ்குவதற்கான சாத்தியம் உள்ளது என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் எச்சரித்துள்ளது.

பேருவளை தொடக்கம் பொத்துவில் வரை காலி, மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை வரை உள்ள கரையோரப் பகுதிகளில் கடல்களில் ஏற்படும் அலைகளின் உயரம் 2.0 - 2.5 மீற்றர் வரை உயரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த கடல் பிரதேசங்கள் சில நேரங்களில் மிகவும் கொந்தளிப்பாக இருக்கும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

கடற்படை மற்றும் மீனவர்கள் மற்றும் கடலோர பகுதிகளில் வசிப்பவர்கள் இது குறித்து விழிப்புடன் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ரி1)



# மோட்டார் சைக்கிள்கள் மோதுண்டு விபத்து

கொடிகாமம், ஜூலை 17

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்டதில் ஒருவர் மயங்கிய நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை பலாலி கோப்பாய் வீதி டிப்போவுக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

பலாலி வீதி வழியாகப் புன்னாலைக்கட்டு வன் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும், கோப்பாய் டிப்போவுக்கு அரு கில் உள்ள கடையிலிருந்து பிரதான வீதியை நோக்கிஏற முற்பட்ட மோட் டார் சைக்கிளும் மோதுண்டதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3-159)

# போதனாசிரியர்களுக்கான விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜூலை 17

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் யாழ்.மாவட்ட தொழிற்பயிற்சி நிலையங்களில் கற்பிப்பதற்கு முதியோர் பராமரிப்பாளர் கற்கைநெறி மற்றும் ஜப்பான் மொழியியல் கற்கைநெறி என்பவற்றுக்கு போதனாசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் தமது சுயவிவரக் கோவை, சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் அனுபவச் சான்றிதழ்கள் என்பவற்றை இணைத்து உதவிப் பணிப்பாளர், இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை, இல.120, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு இலங்கை தொழிற்பயிற்சி உதவிப்பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (ரி3)

### கொரோனா பரவலுக்கு காரணமான

# புகையிலையை தடைசெய்க!

கொழும்பு, ஜூலை 17

கொரோனா வைரஸ் பரவலுக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்தும் புகையிலைகளைத் தடை செய்யுங்கள் என்று இலங்கை புகையிலை மற்றும் மதுபானம் மீதான தேசிய ஆணையகத்தின் தலைவர் வைத்தியர் சமாதி ராஜபக் ஷ தெரிவித்துள்ளார். தனிமைப்படுத்தல் நிலையங்களில் உள்ள போதைப் பொருள் அடிமையானவர்களினால் இந்த விடயம் உறுதியாகியுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆபத்தான போதை மருந்துகள், போதைப் பொருள் அல்லது புகையிலை காரணமாக ஏற்படும் மயக்க நிலையானது கொரோனாப் பரவலுக்கு பிரதான காரணமாகின்றதெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ரி1)



சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி பழைய மாணவர் சங்க அமைப்பினரால் முல்லைத்தீவு நெடுங்கேணி மாமடுச் சந்தி வெள்ளைப்பிள்ளையார் ஆலய "கற்பகா" அறநெறிப் பாடசாலை மாணவர்களை கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாப்பதற்காக கால்களைப் பயன்படுத்தி கை கழுவும் உபகரணங்கள் இரண்டும் மாணவர்களின் உடல் வெப்பநிலையை அளவிடும் கருவி ஒன்றும் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. (ரி3-222)

# விடுதலைப் புலிகளை அழித்தமைபோல் கூட்டமைப்பையும் அழிக்கமுடியாது

## வினோநோகராதலிங்கம் சூளுரை



**முல்லைத்தீவு, ஜூலை 17**

**விடுதலைப் புலிகளையோ, அவர்கள் போராட்டத்தையோ ஆயுதபலம் கொண்டு அழித்தமையைப் போன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழிக்க முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட வேட்பாளர் வினோநோக ராதலிங்கம் தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப் புலிகளை சர்வதேச பலத்தின் உதவியுடன் அழித்தமைப் போன்று விடுதலைப் புலிகளின் மறுவடிவமாக இருக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை- விடுதலைப் புலிகளால் அரசியல்ரீதியான செயற்பாடுகளுக்காக உருவாக்கப்பட்ட கூட்டமைப்பை அழிப்பதற்கு இந்த அரசு முனைந்து கொண்டிருக்கின்றது. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழிக்கமுடியாது என்பதை இந்தத் தேர்தல் முடிவுகள் பறை சாற்றி நிக்கும்.

வன்னியில் தமிழ்மக்களின் வாக்குப் பலத்தைப் பிரித்து சிதைத்து அரசியல் ரீதியான இனவாதபோக்கிலான பிரசாரங்கள் ஊடாக வெற்றியைப் பெறுவதற்கு தேசியக் கட்சிகள் முனைந்து கொண்டிருக்கின்றன. ஆனால் நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு டன் ஒன்றித்து பயணித்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரணாகக் காப்போம் என்பதையும், கூட்டமைப்பினை சிங்களக் கட்சிகளால் தமிழ்க் கூட்டமைப்பை அழிக்கமுடியாது என்ற செய்தியையும் சிங்கள தேசத்திற்கு தமிழ் மக்கள் காட்டுவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ரி3-19)



## 130,390 பி.சி.ஆர். பரிசோதனைகள்

கொழும்பு, ஜூலை 17

இலங்கையில் இதுவரை 130,000க்கும் மேற்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் அறிக்கையின் படி, பெப்ரவரி மாதம் முதல் நாட்டில் மொத்தமாக இதுவரை 130,390 பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்று முன்தினம் 2,470 பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட் டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)

## விபத்தில் உயிரிழந்த கான்ஸ்டபிளுக்கு சார்ஜண்ட் பதவி

ஹக்மன, ஜூலை 17

ஹக்மன விபத்தில் உயிரிழந்த பொலிஸ் கான்ஸ்டபிள், சார்ஜண்ட் பதவிக்கு தரம் உயர்த்தப்பட்டுள்ளார்.

ஹக்மன பொலிஸ் பிரி வுக்குட்பட்ட கொங்கல பகுதியில் அமைந்துள்ள வீதிச் சோதனைச் சாவடியொன்றில் கடமையில் ஈடுபட்டிருந்தபோதே அவர் மீது டிப்பர் வாகனம் மோதுண்டு உயிரிழந்துள் ளார்.

இந்த நிலையிலேயே விபத்தில் உயிரிழந்த பொலிஸ் கான்ஸ்டபிள், சார்ஜண்ட் பதவிக்கு தரமுயர்த்தப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ரி2)



## விபத்துக்களைத் தடுக்க விசேட கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஜூலை 17

கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகரித்து வரும் வீதி விபத்துக்களைத் தடுப்பது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட செயலர் றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில், கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகள், அதிகரித்த பாரஊர்திகளின் போக்குவரத்து, சேதமடைந்த வீதிகள், மக்கள் வீதி சமிக் ஞைகளைப் பின்பற்றாமல் பயணிப்பது போன்ற காரணங்களால் விபத்துக்கள் ஏற்படுவதற்கான காரணங்கள் தொடர்பில் ஆராயப்பட்டமையுடன், இது தொடர்பில் குழு ஒன்றை அமைத்து விபத்துக்களைத் தடுப்பதற்கு மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கை தொடர்பாக ஆராய்ந்து அவற்றை நடைமுறைப்படுத்த உரியவர்களுக்கு தெரியப்படுத்துவது எனவும் முடிவெடுக்கப்பட் டது.

மேலும், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை பணிப்பாளரும் வைத்தியசாலையின் வைத்திய நிபுணர்களும் எடுத்துள்ள இந்த முயற்சிக்கு பாராட்டுத் தெரிவித்த மாவட்டச் செயலர், கிளி நொச்சி மாவட்டத்தில் கடந்த ஆண்டு 278 விபத்துக்கள் பதிவாகியுள்ளன எனவும் இவற்றில் அதிகளவில் ஆண்களே விபத்துக்களால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் கிளிநொச்சி - முல்லைத்தீவு பிரதி பொலிஸ்மா அதிபர், கிளிநொச்சி மாவட்டப் பொலிஸ் நிலையங்களின் பொறுப் பதிகாரிகள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளர், மாவட்ட பொது வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி, சத்திரசிகிச்சை நிபுணர், வீதி அபிவிருத்தி திணைக்களப் பொறியியலாளர், பிரதேச செயலாளர்கள் என பலர் கலந்துகொண்டு தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். (ரி3-6)

## மன்னார் மாவட்டச் செயலகத்தில் ஆடிப்பிறப்பு





மன்னார், ஜூலை 17

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் வரு டாந்த ஆடிப்பிறப்பு கொண்டாட்டம் மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்று காலை 8 மணியளவில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சி.ஏ.மோகன் றாஸ் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

ஆடிப்பிறப்பின் தந்தை என்று போற்றப் படும் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் (துங்கத்தாத்தா) அவர்களின் படத்துக்கு மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் அதிகாரிகள் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். அதனைத் தொடர்ந்து மாவட்டச் செயலக அலுவலர்களினால் ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை என்னும் பாடலும் இசைக்கப்பட்டது.

நாட்டில்ஏற்பட்டுள்ள "கொரோனா" அசாதாரண சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு எளிமையான முறையில் சுகாதார நடைமுறையைப் பின்பற்றி 2020 ஆம் ஆண்டுக் கான ஆடிப்பிறப்பு கொண்டாடப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (ரி3-56)

## வவுனியாவிலும் ஆடிப்பிறப்பு கொண்டாட்டம்!!

வவுனியா,ஜூலை.17

வவுனியா தர்மலிங்கம் வீதியிலுள்ள சோமசுந்தரப் புலவரின் நினைவுத் தூபிக்கு முன்பாக வவுனியா முச்சக்கரவண்டி சங்கத்தின் அனுசரணையில் தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ் . சந்திரகுமார் தலைமையில் ஆடிப்பிறப்பு கொண்டாட்டம் நேற்று இடம்பெற்றது.

சோமசுந்தரப்புலவரை நினைவுகூரும் முகமாகவும் தமிழர் பாரம்பரிய நிகழ்வாகவும் ஆடிப்பிறப்புத் தினத்தில் வருடாவருடம் வவுனியா தர்மலிங்கம் வீதியிலுள்ள சோமசுந்தரப் புலவரின் நினைவுத் தூபியில் நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன .

அந்தவகையில் தமிழருவி த. சிவகுமார், சோமசுந்தப் புலவரின் வாழ்க்கை வரலாற்றை நினைவுகூரும் சொற்பொழிவை மேற்கொண்டதுடன், "ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை" என்ற பாடலை விபுலானந்தா கல்லூரி மற்றும் தமிழ் மத்திய மகா வித்தியாலய பாடசாலை மாணவர்கள் பாடி மகிழ்வித்திருந்தனர்.

நிகழ்வில் கொழுக்கட்டை, ஆடிப்பிறப்புக்கூழ் என்பன வழங்கப்பட்டமையுடன், முச்சக்கரவண்டி சங்கத்தின் தலைவர் எஸ்.ரவீந்திரன், உறுப்பினர்கள், பிரதேச கலாசார உத்தியோகத்தர் வி.பிரதீபன், சமூக ஆர்வலர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் வர்த்தகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர் . (ரி3-110, 18)







# ஆர்சனல் அணியிடம் வீழ்ந்தது லிவர்பூல்!

லண்டன், ஜூலை 17

இங்லீஷ் பிரீமியர் லீக் கால்பந்து தொடரில், லிவர்பூல் அணிக்கெதிரான லீக் போட்டியில் அர்சனல் அணி வெற்றி பெற்றுள்ளது. இந்த ஆட்டம் எமிரேட்ஸ் விளையாட்டரங்களில் உள்ளூர் நேரப்படி நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

பரபரப்பாக நடைபெற்ற ஆட்டத்தில், 20 ஆவது நிமிடத்தில் லிவர்பூல் அணியின் நட்சத்திர வீரரான செடியோ மானே அணிக்காக முதலாவது கோலை பதிவு செய்தார். ஆட்டத்தின் 32ஆவது நிமிடத்தில் அர்சனல் அணியின் வீரரான அலெக்ஸாண்ட்ரே லாகசெட், அணிக்காக முதலாவது கோலைப் பெற்றுக்கொடுத்தார்.

ஆட்டத்தின் 44ஆவது நிமிடத்தில், அர்சனல் அணியின் மற்றொரு வீரரான ரெய்ஸ் நெல்சன் அணிக்காக இரண்டாவது கோலை பெற்றுக்கொடுத்தார்.

அதன்பின்னர் இரு அணிகளாலும் கோல் அடிக்க முடியாததால், போட்டியின் இறுதியில் 2:1 என்ற கோல்கள் கணக்கில் அர்சனல் அணி வெற்றிபெற்றது.

நடப்பு ஆண்டுக்கான சம்பியன் பட்டத்தை லிவர்பூல் அணி உறுதிசெய்துவிட்டாலும், இந்த தோல்வி லிவர்பூல் அணிக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது. (ரி2)

# கோலியை விடவும் வில்லியம்ஸ் சிறந்தவர்

லண்டன், ஜூலை 17

**இந்திய அணித் தலைவர் விராட் கோலியை விட கடினமான சூழ்நிலைகளில் கேன் வில்லியம்ஸ் தான் சிறந்த துடுப்பாட்ட வீரர் என்று நியூசிலாந்து அணியின் முன்னாள் துடுப்பாட்ட ஜாம்பவான் கிளென் டர்னர் தெரிவித்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

திறமையான துடுப்பாட்ட வீரர்களுக்கு இடையிலான குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவர்கள் எந்த சூழ்நிலையில் விளையாடுகிறார்கள், அவர்களுடைய ஆளுமையுடன் அவர்கள் வளர்ந்து வந்த விதம் ஆகியவற்றுடன் உருவாக்கப்படுகின்றன.

கேன் வில்லியம்ஸினை காட்டிலும் விராட் கோலி இயற்கையாகவே அதிரடியாக ஆடும் பழக்கத்தைக் கொண்டவர். ஆனால் இருவரின் ஆட்டமும் வெற்றியைக் குறைப்பதாக இருக்காது. இருவரின் நோக்கமும் வெற்றிபெற வேண்டும் என்பதுதான்.

துடுப்பாட்டம் செய்ய மிகவும் கடினமான சூழ்நிலையில் விராட் கோலியை விட கேன் வில்லியம்ஸ் தான் சிறந்த துடுப்பாட்ட வீரர். மைதானத்தில் விராட் கோலி அதிகமாக ஆதிக்கம் செலுத்துவார். இதனால் அவருடைய அணிக்கு அதிகமான நேரங்களில் வெற்றி கிடைத் துள்ளது - என்றார். (ரி2)

# மீண்டார் மோட்ரசா

டாக்கா, ஜூலை 17

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் மோட்ரசா கொரோனா தொற்றில் இருந்து மீண்டுள்ளார். 24 நாள்கள் சிகிச்சையின் பின்னர் அவர் நலமடைந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மாதம் 20 ஆம் திகதி அவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது. அதன்பின்னர் அவர் தொடர் சிகிச்சையில் இருந்தார். தற்போது அவர் அதிலிருந்து மீண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளதாவது:

எனக்கு மீண்டும் எடுக்கப்பட்ட பரிசோதனையில் நெகட்டிவ் வந்தது. எனக்காகப் பிரார்த்தனை செய்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எனது மனைவி கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு இரண்டு வாரங்களாக சிகிச்சை பெற்று வருகிறார். அவர் ஆரோக்கியத்துடன் உள்ளார். அவருக்காகவும் பிரார்த்தனை செய்யுங்கள்.

நான் வீட்டில் இருந்தே சிகிச்சை பெற்றேன். கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்கள் நேர்மறை எண்ணத்துடன் இருங்கள். கடவுள் மீதுநம்பிக்கைவைத்து விதிமுறைகளைப் பின்பற்றுங்கள். நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து கொரோனாவை எதிர்த்து போரிடுவோம் என்றார். (ரி2)

# மஹேலவுக்கு புதிய பதவி

லண்டன், ஜூலை 17



சிங்களீஸ் விளையாட்டுக் கழகத்தின் (எஸ்.எஸ்.சி) கிரிக்கெட் குழுவின் தலைவராக இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜெயவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற சிங்களீஸ் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தின் போதே மஹேல ஜெயவர்தனவை தலைவராக நியமிக்க முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சிங்களீஸ் விளையாட்டுக் கழகத்தின் (எஸ்.எஸ்.சி.) கிரிக்கெட் தொடர்பான முடிவுகளை எடுக்கும் பொறுப்பு மஹேல ஜெயவர்தனவுக்கு வழங்கப்பட்டுள்ளது. (ரி2)

# யு.ஏ.ஈயில் ஐ.பி.எல்.!

புதுடில்லி, ஜூலை 17

ரி20 உலகக் கிண்ணத் தொடர் தொடர்பாக சர்வதேச கிரிக்கெட் சபை அறிவிப்பு எதையும் விடுக்காதிருக்கும் நிலையில், இந்தியக் கிரிக்கெட் சபை ஐ.பி.எல். 2020 தொடர்பாக ஐக்கிய அரபு அமீரக கிரிக்கெட் சபையுடன் பேச்சு நடத்தியுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொரோனா வைரஸ் தாக்கம் தற்போது உலகளாவிய ரீதியில் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. கிரிக்கெட் தொடர்கள் சுமார் 117 நாள்கள் நடத்தப்படாதிருந்து தற்போது மீண்டும் டெஸ்ட் தொடர் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உலகக் கிண்ண ரி20 கிரிக்கெட் தொ்டரை ஐ.சி.சி. வட்டாரங்கள் சூசகமாக தெரிவிக்கின்றன. ஐ.சி.சி. இது பற்றி வாயைத் திறக்கவில்லை என்றாலும் தொடரை நடத்தும் ஆஸ்திரேலியா தரப்புக்கு நெருக்கமானவர்கள் ரி20 உலகக் கிண்ணத் தொடர் ரத்தாகும் என்று கூறுகின்றனர்.

ஐபிஎல் போட்டிகளை நடத்தாவிட்டால் இந்தியக் கிரிக்கெட் சபைக்கு 4 ஆயிரம் கோடி ரூபா (இந்திய நாணய மதிப்பு) நட்டம் ஏற்படும், அணி உரிமையாளர்கள், ஒளிபரப்பு கூட்டாளிகளுக்கும் பெரும் நட்டம் ஏற்படும் என்பதால் எப்படியாவது ஐபில் கிரிக்கெட் தொடரை நடத்த இந்தியக் கிரிக்கெட் சபை படாத பாடு படுகிறது.

இந்தியக் கிரிக்கெட் சபை பெறும் ஒளிப்ரப்பு உரிமை தொகையில் 8 அணிகளுக்கும் 50 வீத பங்கு உண்டு. ஐபிஎல் அணிகள் ஒரு தொடரில் 100 கோடி ரூபா முதல் 150 கோடி ரூபா வரை லாபம் ஈட்டுவார்கள் என்று வல்லுநர்கள் கூறுகின்றனர்.

2014 ஆம் ஆண்டு ஐபிஎல் போட்டிகளின் ஒரு பகுதி ஐக்கிய அரபு அமீரகத்தில் நடந்தன. வெளிநாட்டு வீரர்களும் ஐபிஎல் தொடருக்காகவே காத்திருக்கின்றனர். இந்த நிலையில் ஐக்கிய அரபு அமீரகத்தில் செப்ரெம்பர் மாதம் ஐபிஎல் நடக்க வாய்ப்பிருப்பதாகவே தெரிகிறது. (ரி2)

# இங்கிலாந்து அணியின் இந்தியப் பயணம் ரத்து!

புதுடெல்லி, ஜூலை 17

செப்ரெம்பர் மாதம் நடக்கவிருந்த இந்தியா, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஒருநாள் மற்றும் ரி20 ஆட்டங்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ளும் இங்கிலாந்து அணி மூன்று ஒருநாள் ஆட்டங்கள் மற்றும் மூன்று ரி20 ஆட்டங்களில் விளையாடத்திட்டமிட்டிருந்தன. ஆனால் கொரோனா வைரஸ் பரவல் காரணமாக அந்தத் தொடர் ஒத்திவைக்கப்படும் என்று இந்தியக் கிரிக்கெட் சபையின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக இதுவரை உத்தியோகபூர்வ அறிவிப்புக்கள் வெளியாகாத போதும், விரைவில் இந்த அறிவிப்பு வெளியாகலாம் என்று தெரியவருகின்றது.

அதேபோன்று நியூஸிலாந்து ஏ அணியும் இந்தியா செல்லத் திட்டமிட்டிருந்த போதும், அதுவும் தற்போது இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இந்தியக் கிரிக்கெட் சபையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்ததாவது:




இப்போதுள்ள சூழலில் இங்கிலாந்து அணி இந்தியாவில் பயணிக்கும் நிலையில் இல்லை என்பதால், இந்தத் தொடர் ரத்தாகும். எதிர்வரும் வெள்ளிக்கிழமை இந்தியக் கிரிக்கெட் சபையின் அமைப்பின் உயர்மட்டக்குழு கூடுகிறது. இந்தக் குழுவில் இந்திய அணியின் எதிர்காலப் பயணத்திட்டம் குறித்து மறுதிட்டமிடல் செய்யப்படும்.

இந்தக் கூட்டத்தில் இங்கிலாந்து பயணம் ஒத்திவைப்பு அல்லது ரத்து என்பதில் இறுதிக்கட்ட அறிவிப்பு வெளியாகும். நியூஸிலாந்து ஏ அணி ஓகஸ்ட் மாதம் இந்தியா வருவதாக இருந்த திட்டமும் ரத்தாகும். ஆனால், இந்தியாவில் சூழல் நிலைமை சரியானால் இங்கிலாந்து இங்கு வாய்ப்புள்ளது - என்றார். (ரி2)



வடகிழக்கு இந்தியாவில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக நேற்று முன்தினம் 7 பேர் உயிரிழந்துள்ளனர். இதனால் ஏற்பட்ட மொத்த உயிரிழப்புகளின் எண்ணிக்கை 66 ஆக உயர்வடைந்துள்ளது.



## வெள்ளத்தில் மூழ்கியது காசிரங்கா பூங்கா

*51 விலங்குகள் உயிரிழப்பு*

புதுடில்லி, ஜூலை 17

அசாமில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் யுனெஸ்கோவின் உலக பாரம்பரியத் தளமான காசிரங்கா தேசிய பூங்கா மற்றும் புலிகள் காப்பகம் என்பவை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

பூங்காவின் 80 சதவீத பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இரண்டு காண்டாமிருகங்கள் மற்றும் ஐந்து காட்டுப்பன்றிகள் உட்பட 51 விலங்குகள் உயிரிழந்துள்ளன.

170 விலங்குகளை அதிகாரிகள் மீட்டுள்ளனர், இதில் ஒரு வயது பெண் காண்டாமிருகக் கன்று அதன் தாயிடமிருந்து பிரிக்கப்பட்டுள்ளது. (ரி)

## எகிறும் கொரோனா பிரேசிலில் ஒரே நாளில் 47,857 தொற்றுக்கள்

பிரேசிலியா, ஜூலை 17

உலக அளவில் கொரோனாப் பாதிப்பில் 2ஆவது இடத்தில் உள்ள பிரேசிலில் நேற்று முன்தினம் ஒரே நாளில் 47 ஆயிரத்துக்கு 857 பேருக்கு புதிதாகத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதைத்தொடர்ந்து கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 19 லட்சத்து 26 ஆயிரத்து 824 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் மட்டும் 1,300 பேர் கொரோனாவுக்கு பலியாகினர். அதைத்தொடர்ந்து பலி எண்ணிக்கை 74 ஆயிரத்து 133 ஆக உயர்ந்துள்ளது. இதனை பிரேசிலின் சுகாதாரத்துறை அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது. (ரி)



# 20 நாடுகளின் சனத்தொகை 2100 இல் 50 வீதம் குறையும்

## ஆய்வில் தகவல்

**ஜப்பான், தாய்லாந்து, சீனா, இத்தாலி, போலந்து, ஸ்பெயின், தென்கொரியா, போர்த்துக்கல் உட்பட 20 நாடுகளில் சனத்தொகை 2100ஆம் ஆண்டில் 50 சதவீதம் அளவில் குறையும் என்று தெரியவந்துள்ளது. புகழ்பெற்ற மருத்துவ ஆய்விதழான தி லான்செட் நேற்று முன்தினம் புதன்கிழமை வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.**




அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

தற்போது உலக மக்கள் தொகை 7.8 பில்லியனாக உள்ளது. 2064ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 9.7 பில்லியனாக உயரும். ஆனால், 2100ஆம் ஆண்டில் மக்கள் தொகை 8.8 பில்லியனாக குறையும் என்று அந்த ஆய்வில் கணிக்கப்பட்டுள்ளது.

குழந்தை பிறப்பு விகிதம் கணிசமாகக் குறையும். வயதானவர்களின் எண்ணிக்கை அதிக அளவில் இருக்கும்.

இந்தியாவின் மக்கள் தொகை 138 கோடியிலிருந்து 109 கோடியாகக் குறையும். சீனாவின் மக்கள்தொகை 140 கோடியிலிருந்து 73 கோடியாகக் குறையும்

தற்போது 32.5 கோடியாக இருக்கும் அமெரிக்காவின் மக்கள் தொகை 2062 ஆம் ஆண்டில் 36.4 கோடியாக உயரும். அதன் பிறகு 2100இல் 33.6 கோடியாக குறையும். பொருளாதார ரீதியில் 2035ஆம் ஆண்டில் அமெரிக்காவின் இடத்தை சீனா பிடிக்கும். 2098இல் மீண்டும் அமெரிக்கா முதல் இடத்தைப் பிடிக்கும் என்றும் லான்செட் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி)

### கொரோனாவின் கோரத்தாண்டவம்

## 25,000 ஊழியர்களை வீட்டுக்கு அனுப்பியது அமெரிக்கன் எயார்லைன்ஸ்

வொஷிங்டன், ஜூலை 17

25,000 ஊழியர்களை தற்காலிக பணிநீக்கம் செய்வதற்கு அமெரிக்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் தீர்மானித்துள்ளது.

கொரோனாப் பரவல் காரணமாக ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சரிவை எதிர்கொள்வதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. கடந்த வாரம் யுனைடெட் எயார்லைன்ஸ் நிறுவனம் 36,000 ஊழியர்கள் வேலையை இழப்பார்கள் என்று தெரிவித்திருந்தது. டெல்டா நிறுவனம் 2000 விமானிகளுக்குக் கடிதம் அனுப்பி இருந்தது.

இந்நிலையில் அமெரிக்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் உதவி ஊழியர்கள் 10,000 பேருக்கு தற்காலிக பணி நீக்கக் கடிதங்கள் சென்றுள்ளன. 4,500 விமான நிலைய தரை ஊழியர்கள் மற்றும் 2500 விமானிகளுக்குப் பணி நீக்கக் கடிதங்கள் அனுப்பப்படவுள்ளன. (ரி)

## எல்லைகளை மீண்டும் திறந்தது மாலைதீவு

மாலே, ஜூலை 17

கொரோனா காரணமாக மூடிய எல்லைகளை மாலைதீவு மீண்டும் திறந்துள்ளது.

இதன் முதல் நடவடிக்கையில், கட்டார் ஏர்வேஸ் விமானம் 107 வெளிநாட்டுப் பிரஜைகளையும், 27 மாலைதீவு பிரஜைகளையும் ஏற்றிக்கொண்டு நேற்று முன்தினம் புதன்கிழமை காலை மாலைதீவில் உள்ள வேலனா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

மார்ச் 27 மாலைதீவு எல்லைகளை மூடிய தன் பின் சுற்றுலாப் பயணிகளின் முதல் வருகையாக இது பதிவாகியுள்ளது. (ரி)



## அமெரிக்கப் பிரபலங்களின் டுவிட்டர் கணக்கு ஹக்கிங்

வொஷிங்கடன், ஜூலை 17

செல்வந்தர்களான எலன் மஸ்க், பில் கேட்ஸ் உள்ளிட்ட அமெரிக்க பிரபலங்களின் டுவிட்டர் கணக்குகள் ஹக்கிங் செய்யப்பட்டுள்ளன.

உலக செல்வந்தர்களுள் ஒருவரான பில்கேட்ஸின் டுவிட்டர் கணக்கில் "ஆயிரம் டொலர்களை நீங்கள் வழங்கினால் அதனை இரட்டிப்பாக்கித் தருவேன்" என பொருள்படும் விதத்தில் பதிவிடப்பட்டு ஓரிரு நிமிடங்களில் அந்த டுவீட் நீக்கப்பட்டுள்ளது.

பிட்கொய்ன் எனப்படும் இணைய வழி பணப்பரிமாற்ற முறையினூடாக வெளிப்படையாக இந்த பணக் கோரிக்கைகள் விடுக்கப்பட்டு பதிவேற்றப்பட்டுள்ளன. அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா, ஜோ பைடன் மற்றும் கானியா வெஸ்ட் உள்ளிட்டோரின் டுவிட்டர் கணக்குகளும் இந்த முறைகேட்டில் இலக்கு வைக்கப்பட்டுள்ளன எனக் கூறப்படுகின்றது. (ரி)

*மன்னார்...*

துள்ள அறிக்கையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தேவாலய வழிபாட்டுக்கே அங்கு வந்தார் என்றும் பரப்புரை நடத்தவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளனர். இருப்பினும், மன்னார் மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர், அங்கு தேர்தல் பரப்புரை இடம்பெற்றது என்றும், அதற்கான ஒளிப்படச் சான்றுகள் இருப்பதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிக்கையிட்டுள்ளார்.

கடந்த 10ஆம் திகதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மன்னாருக்குச் சென்றிருந்தார். இதன்போது சிலாவத்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட லியோன் தேவாலயத்துக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானத்தா சென்றுள்ளார். அங்கு பங்குத் தந்தை தலைமையில் அரசியல் பரப்புரைக் கூட்டம் நடைபெற்றதாக, உள்ளூர்வாசி ஒருவரால் ஒளிப்பட ஆதாரங்களுடன் தேர்தல்கள் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

முறைப்பாட்டுக்கு அமைவாக சிலாவத்துறை பொலிஸாரிடம் அறிக்கை கோரப்பட்டிருந்தது. அவர்கள் சமர்பித்துள்ள அறிக்கையில், தேவாலயத்துக்கு டக்ளஸ் தேவானந்தா சென்றிருந்தார் என்றும் அவர் வழிபாடுகளில் பங்கேற்கவேசென்றிருந்தார்எனவும்குறிப்பிட்டுள்ளனர். ஆனால் மன்னார் மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர், அங்கு தேர்தல் பரப்புரை இடம்பெற்றமைக்கான ஒளிப்பட ஆதாரங்கள் உள்ளதாகத் தெரிவித்து அறிக்கை சமர்பித்துள்ளார். (ஓ,5)

*பாடசாலைகள்...*

திப்பில், இணை அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன இதனைத் தெரிவித்தார்.

கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் கொரோனாத் தொற்று அடையாளம் காணப்பட்டு, கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதியும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமும் உறுதியளித்துள்ளனர். இதன்படி பாடசாலைகள் மற்றும் பரீட்சைகள் திட்டமிட்டடி நடத்தப்படும் என்று அமைச்சர் குணவர்தன தெரிவித்தார்.

கல்விச் செயற்பாடு மற்றும் பரீட்சைகள் தொடர்பாக நேற்று அமைச்சரவை கூட்டத்திலும் விவாதிக்கப்பட்டதாகத் தெரிவித்தார். ஒன்று அல்லது இரண்டு மாணவர்கள் வைரஸ் தொற்றுக்குள்ளாகுவதை வைத்து, எதிர்க்கட்சிகள் மாணவர்களை அச்சத்தில் ஆழ்த்த முயற்சிப்பதாகவும் தெரிவித்தார். கொரோனாத் தொற்று அடையாளம் காணப்பட்டு, கட்டுக்குள் கொண்டுவரப்பட்டு விட்டதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் இராணுவத் தளபதி இருவரும் அரசுக்கு உத்தரவாதம் அளித்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

(ஓ,5,44)

*யாழ்ப்பாணம்...*

ரமசிங்க எதிர்வரும் 23ஆம் திகதி வியாழக்கிழமை தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் பங்கேற்பதற்காக யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார். (ஓ,5,111)



*ராஜபக்சக்களின்...*

அதுவே எமது விருப்பம்.
இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
இந்தக் காட்டாட்சியில் எதையெல்லாம் செய்ய முடியுமோ அதையெல்லாவற்றையும் ராஜபக்சக்கள் செய்து முடிப்பார்கள். அதே போல் கொரோனா வைரஸின் பரவலுக்கு மத்தியிலும் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தியே தீர வேண்டும் என்பதில் அவர்கள் விடாப்பிடியாக உள்ளார்கள். இவர்களுக்கு மக்களின் உயிர்கள் மீது அக்கறை இல்லை. மூன்றிலிரண்டு பெரும்பான்மை மீது தான் இவர்களுக்கு அதீத பிரியம். இதற்குத் தேர்தல்கள் ஆணைக் குழுவும் ஒத்துழைப்பு வழங்குவது தான் மிகவும் கவலையாக இருக்கின்றது. சுயாதீன ஆணைக்குழுவான தேர்தல்கள் ஆணைக்குழு இன்று அரசின் வலது கரமாக மாறிவிட்டதோ என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. மக்களின் சுகாதாரப் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் வழங்கி நீதியான தேர்தல் நடைபெற வேண்டும். அதுவே எமது விருப்பம் - என்றார். (எ-22)

*தேசிய...*


தெரிவித்தார்.
சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் ஊடகவியலாளர் மாநாடு கொழும்பிலுள்ள அந்தக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.
இதன்போது கருத்து வெளியிடுகையிலேயே சுசில் பிரேமஜயந்த மேற்கண்டவாறு கூறினார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
கொரோனா தொடர்பில் அரசு மீதும், சுகாதார அமைச்சர் மீதும் ரணில் விக்கிரமசிங்க குற்றஞ்சாட்டி வருகின்றார். மறுபுறத்தில் திசை தெரியாமல் தேசிய மக்கள் சக்தியின் பயணம் தொடர்கின்றது. தேர்தலின் பின்னர் தேசிய அரசு அமையும் என விமர்சிக்கின்றனர்.
ஆனால் நாம் தேசிய அரசு அமைக்கமாட்டோம். அதற்கான தேவையும் ஏற்படாது. மூன்றிலிரண்டு பெரும்பான்மையே எமது இலக்காக இருக்கின்றது. அதற்கேற்ற வகையிலேயே வியூகம் வகுக்கப்பட்டுள்ளது. இலக்கை அடைவோம். எமது அணியின் பங்களிப்புடன் ஆட்சியமைப்போம்.
அதேவேளை, கொரோனா 2ஆவது அலை ஏற்படவில்லை என சுகாதார சேவைகள் பணிப்பாளர் கூறியுள்ளார். கத்தக்காடு புனர்வாழ்வு முகாமில் கொத்தணி பரவலே ஏற்பட்டுள்ளது. அதனை கட்டுப்படுத்துவோம்-என்றார். (ஒ.5,44)

# உருவாக்கப்பட்ட இலக்கை நோக்கியே தமிழ்க் கூட்டமைப்பு பயணிக்கின்றது!

## முன்னாள் கடற்புலி தளபதி அன்புராஜ் இப்படித் தெரிவிப்பு

மன்னார், ஜுலை 17
கூட்டமைப்பு என்ன நோக்கத்துக்காக உருவாக்கப்பட்டதோ அதே இலக்கை நோக்கித் தான் தற்போதும் பயணிக்கின்றது. தொடர்ந்தும் பயணிக்கும் என்று தெரிவித்தார் முன்னாள் கடற்புலி தளபதி அன்புராஜ்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரையொன்று மன்னாரில் நேற்று இடம்பெற்றது. அங்கு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
எங்களுடைய ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டாலும் தொடர்ந்து அரசியல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். மக்களுக்காக அரசியல் பணிகளை செய்ய வேண்டும் என்பதற்காக உங்கள்முன் நிற்கின்றோம். நாங்கள் போராளிகளாக சேர்ந்து மக்களுடன் இணைந்து 22 நாடாளுமன்ற உறுப்பினர்களை உருவாக்கினோம். எங்களுடைய தேசியத்துக்காக, மண்ணிற்காக, மொழிக்காக, உரிமைக்காக பலம் வாய்ந்த 22 நாடாளுமன்ற உறுப்பினர்களை உருவாக்கி நாடாளுமன்றம் அனுப்பினோம். இறுதியிலே போராட்டம் மௌனித்த பிறகு எங்கள் மக்களின் செயற்பாடுகள் மாறுபட்டதாக மாறிக்கொண்டிருக்கின்றது. படிப்படியாக இரண்டு இரண்டாகக் குறைந்து இன்றைக்கு 14இல் வந்து நிற்கின்றது. நாங்கள் விடமுடியாது. நாங்கள் மீண்டும் பலத்தைச் சேர்க்க வேண்டியதாக இருக்கின்றது.
வாக்குகளை சின்னாபின்னமாகச் சிதைப்பதற்காக, எங்களுடைய பலங்களை பலவீனப்படுத்துவதற்காக, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சின்னா பின்னமாக்கி உடைத்து தனித்து ஒவ்வொருவராக நிற்க வைத்தால் எங்களுடைய மக்களுடைய எதிர்காலம் இலட்சியம், தனித்துவம், உரிமை, மொழி காக்கப்படுமா?. இதுதான் அரசாங்கத்தினுடைய நோக்கம். சின்னாபின்னமாக உடைத்து எறிந்துவிட்டால் நாடாளுமன்றிலே குரல் கொடுப்பதற்கு எவருமே இருக்க மாட்டார்கள். ஒற்றை ஒற்றையாக போய் அங்கே குரல் கொடுத்து நாங்கள் எதையும் சாதிக்க முடியாது. 22 பேர்கள் இன்று வரைக்கும் எத்தனையோ சாதனைகளைச் செய்திருக்கிறார்கள். அது உங்களுக்கு வெளியில் தெரியாமல் இருக்கலாம். எங்களுடைய போராட்ட வரலாற்றிலே எங்களுடைய தலைவர் எதற்காக கூட்டமைப்பை உருவாக்கினாரோ அந்த வழியில் இதுவரை கூட்டமைப்புப் பயணிக்கின்றது. (ம-56)

## மரண அறிவித்தல்



மலர்வு 21 . 04 . 1948

உதிர்வு 16 . 07 . 2020

### சூரியலிங்கம் கிட்ணசாமி

வல்வெட்டித்துறை மதவடியைப் பிறப்பிடமாகவும் தீருவிலை வதிவிடமாகவும் கொண்ட சூரியலிங்கம் கிட்ணசாமி நேற்று (16.07.2020) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்ற சாந்தகுமாரியின் அன்புக் கணவரும், பிரகாஷ், ரமேஷ் (சிதம்பரா கணிதப் போட்டி தலைமை ஆசிரியர்), நிஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற கிட்ணசாமி, சின்னமாமயிலின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னுத்துரை, செல்வரத்தினத்தின் மருமகனும், மற்றும் சந்திரலிங்கம், செல்லக்கிளி (மரகதம்) தனபாலசிங்கம் (இந்திரன்), நிர்மலாதேவி, வேலாயுதம், மோகனதாஸ், விமலாதேவி(கௌரி) ஆகியோரின் சகோதரரும், செல்வமலர், வசந்தமல்லிகா, நிர்மலாதேவி (தேவி), யோகேந்திரன், சிவகுமார், பாலகுமார், காலஞ்சென்ற சந்திரகுமாரி, காலஞ்சென்ற செல்வகுமாரி ஆகியோரின் மைத்துனரும், இராஜசேகரன், கவிதா, தனலஷ்மி ஆகியோரின் மாமனாரும், குறிஞ்சிகன், சஞ்சீவன், ஆருகன், நிலானி, தருண், அஸ்வின், சேயோன், வைஷ்ணவி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (17-07-2020) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்று பிற்பகல் 4.00 மணியளவில் ஊறணி மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
சூ. பிரகாஷ் - 0061403729987 **(Australia)**
சூ. ரமேஷ் - 00447878418437 **(London)**
இ. நிஷா - 0016477738898 **(Canada)**

**தகவல்: குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



### பஸ்ரியாம்பிள்ளை மேரிபோல் தங்கராஜா
**(தங்கராஜா மாஸ்டர், திரவியம்)**

கீரிமலை வீதி, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பஸ்ரியாம்பிள்ளை மேரிபோல் தங்கராஜா (தங்கராஜா மாஸ்டர், திரவியம்) நேற்று (16.07.2020) வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற லூதர் பஸ்ரியாம்பிள்ளை றோசலீன் சின்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற ஜெயராஜதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான காரத்திகேசு சின்னத்தம்பி தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான ஜோண்தம்பிஐயா, மேரி ராசாத்தி மாணிக்கம், ஜோசப் பாலச்சந்திரன், சூசின் தங்கரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான பரமலிங்கம், போல்ராஜா, மயில்வாகனம், சபாபதி, மாணிக்கம் ஆகியோரின் மைத்துனரும் செரின் டக்சினி, ஹரிச்சந்திரா, காமினி (கனடா), மெலனி (ஆஸ்திரேலியா), பிரேமச்சந்திரா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் வினோ குருபாதம் (கொமர்ஷல் வங்கி - சுன்னாகம்), சுபாஷினி (ஆசிரியை- யா/ சன்மார்க்க ம.வி), கிறிஸ்ரி தங்கராஜா (கனடா), அருட்சுதன் ஞானசீலன் (ஆஸ்திரேலியா), ஷேளி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் சரோன் வான்மதி (மொறட்டுவ பல்கலைக்கழகம்), சலோம் துஷ்யந்தி (கொழும்பு பல்கலைக் கழகம்), வெஸ்லி (யாழ்.பல்கலைக்கழகம்), நித்தியஜீவன் (யா/ பரியோவான் கல்லூரி), தேனுகா, சிந்துகா (கனடா), டியோன், ஜொனத்தன் (ஆஸ்திரேலியா), இவாஞ்சலின், ஐவன் சாமுவேல், ஒலிவியா, இவ்லின் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாத்தாவுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (18.07.2020) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பண்டத்தரிப்பு **CACM** சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"சந்திரன் இல்லம்"**
**கீரமலை வீதி, பண்டத்தரிப்பு.**

**தகவல்: குடும்பத்தினர்**

## வடக்கில்..

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனாவின் மீள் பரவலையடுத்து நாடாளுமன்றத் தேர்தலை ஒத்திவைக்குமாறு அரசிடமும் தேர்தல்கள் ஆணைக்குழுவிடமும் நாம் தெரிவித்துவிட்டோம். இதைவிட எம்மால் எதையும் செய்ய முடியாது.

கொரோனாப் பீதியில் இருக்கும் மக்கள் அனைவரும் வெளியில் வந்து சுதந்திரமாக வாக்களிப்பார்கள் என்பதே சந்தேகமே. வாக்களிப்பு வீதம் குறைந்தால் அது அரசுக்கே சாதகமாக அமைந்துவிடும். அது வாக்கு மோசடிக்கும் வழிவகுக்கும். அதுதான் தேர்தலை எப்படியாவது நடத்தவேண்டும் என்பதில் அரசு உறுதியாக உள்ளதுஎன்றார். (எ-22)

## பொது...

பாணம், மிருசுவிலில் 4 சிறுவர்கள் உட்பட 8 பேர் படையினரால் படுகொலை செய்யப்பட்டனர். அது தொடர்பான வழக்கு நடைபெற்று, அதில் சுனில் ரத்நாயக்க குற்றவாளியாக இனங்காணப்பட்டுத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. தற்போதைய ஜனாதிபதி கோத்தபய ராஜபக்ச பொதுமன்னிப்பு வழங்கி சுனில் ரத்நாயக்கவை விடுதலை செய்திருந்தார்.

படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பில், இதற்கு ஆட்சேபனை தெரிவித்து உயர்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கு கடந்த மே மாதம் 23ஆம் திகதி இலத்திரனியல் முறையில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கு இன்று உயர் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது. (எ)

## வடக்கை...

இருந்தும் ஏன் இன்னும் அங்கு வாழும் இளைஞர்களின் ஆதரவைப் பெறமுடியாதுள்ளது? என்று எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே நாமல் ராஜபக்ச மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தெற்கு இளைஞர்களுக்கு இணையானவர்களே வடக்கு இளைஞர்களும். அவர்களிடம் நான் வித்தியாசத்தைக் காணவில்லை. தேசியக் கட்சியொன்றுக்கு வாக்களிப்பதற்கான வாய்ப்பை முதலில் நாம் அவர்களுக்கு வழங்கவேண்டும். ஜனாதிபதித் தேர்தலின்போது மாத்திரமே அந்த வாய்ப்பு வழங்கப்படுகின்றது.

அதுவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடாகவே வாக்குகளைப் பெற முயற்சிக்கப்படுகின்றது. மைத்திரிபால சிறிசேனவும், சஜித் பிரேமதாசவும் அவ்வாறே வாக்குகளைப்பெற்றனர்.

எமக்கு 6 அல்லது 8 வீதம் கிடைத்தாலும் பரவாயில்லை, தனிவழியில் செல்லவேண்டும் என்ற முடிவில் இருக்கின்றோம். எனவே, தேசிய நீரோட்டத்துக்குள் சங்கமிப்பதற்கு அவர்களுக்கு அவகாசம் வழங்கவேண்டும். வாக்குக் கிடைக்கவில்லை என்பதற்காக முயற்சியைக் கைவிடக்கூடாது.

உதாரணமாக ஜே.வி.பி இளைஞர்களை ஐக்கிய தேசியக்கட்சி கொன்றது. அவ்வாறு செய்த ஐக்கிய தேசியக் கட்சியும், ஜே.வி.பியும் இணைவதற்கு 30 ஆண்டுகள் எடுத்தன. இருதரப்புகளும் இணைந்து செயற்படவில்லை எனக் கூறமுடியாது. கடந்த காலங்களில் ஐக்கிய தேசியக்கட்சி அரசுக்கு ஆதரவாகவே ஜே.வி.பி உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் வாக்களித்துள்ளனர். 2 ஜனாதிபதி தேர்தல்களில் ஐ.தே.க பக்கம் நின்றனர். ஆனாலும் இதற்கு 30 ஆண்டுகள் எடுத்தன. எமது அரசியல் பயணத்துக்கு வடக்கு மக்களின் நம்பிக்கையைப் பெறுவதற்கு 30 ஆண்டுகள் எடுக்கும் என நாம் கூறவில்லை. அதற்காக தொடர்ந்தும் முயற்சிக்க வேண்டும்.

குறிப்பாக புலம்பெயர் தமிழர்கள் இன்னும் தனி நாட்டுக்காக குரல் எழும்பும் நிலையிலும், தெற்கிலுள்ள தேசிய கட்சி வடக்கில் அரசியல் செய்யாத நிலையிலும் கூட எமக்கு 10 வீத வாக்குகள் கிடைக்கின்றன. எனவே, வடக்கை கைவிடவேண்டாம் என தெற்கிலுள்ள கட்சிகளிடம் கேட்டுக்கொள்கின்றேன் -என்றார். (ஒ.5,44)

## நல்லூர்...

நேற்றுக் காலை இடம்பெற்றது.

வள்ளியம்மை திருக்கல்யாணப் படிப்புடன் பந்தற்கால் நடப்பட்டு பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கும் மரபுடையவர்களுக்கான காளாஞ்சி மாட்டுவண்டில் மூலம் நல்லூரிலிருந்து கல்வியங்காட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு கலாசார முறைப்படி பெருந்திருவிழாவுக்கான பத்திரிகையும், காளாஞ்சியும் கையளிக்கப்பட்டன. இவ் நிகழ்வில் ஆலய கணக்குப்பிள்ளையும் ஆலய பிரதம சிவாச்சாரியரும் துணைக்குருவும் கலந்து கொண்டனர். ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

## 58 கிலோ...

மாலை 58 கிலோ 600 கிராம் கஞ்சா கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கடற்கரையில் பொதியிடப்பட்ட நிலையில் கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. கஞ்சாவைக் கைப்பற்றிய கடற்படையினர், அதை சிறப்பு அதிரடிப் படையினரிடம் ஒப்படைத்துள்ளனர். சிறப்பு அதிரடிப் படையினர் அதை ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்க நடவடிக்கைஎடுத்துள்ளனர். (எ-26,25)

## ராஜபக்ச...

ளுக்குத் தீர்வை வழங்கியே தீர வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

திருகோணமலையில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

இலங்கையிலுள்ள தமிழ் மக்களுடைய அரசியல் தீர்வு தொடர்பாக இந்த நாட்டை ஆட்சி செய்த பெரும்பாலான ஜனாதிபதிகளுடன் நாம் பேசி இருக்கின்றோம். இந்தியா இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் 13ஆவது திருத்தச் சட்டத்தில் மாகாண சபை அதிகாரம் கிடைத்த போதும் அதன் முழு அதிகாரத்தையும் அரசு எமக்கு வழங்கவில்லை. நாம் கேட்கின்ற அதிகாரம் புதிது அல்ல. சர்வதேசத்தில் உள்ளது போன்ற ஒரு தீர்வையே நாம் கேட்கின்றோம். இதை வழங்குவதாக இலங்கை அரசு சர்வதேச சமூகத்திடம் உறுதியளித்துள்ளது. இந்தியாவும் இந்த விடயத்தை ஏற்றுக் கொண்டுள்ளது. தற்போதைய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இலங்கை ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்சவை ஆட்சிப் பொறுப்பை ஏற்று இரண்டாவது நாளே அழைத்து தமிழர் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என அழுத்தமாகக் கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, முன்னாள் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு தமிழர்களுக்குத் தீர்வு வழங்கப்படும் என்று உறுதியளித்துள்ளார். எனவே, அரசு தொடர்ந்து சாக்குப் போக்குக் கூறி தமிழர்களை ஏமாற்ற நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்.

புத்தபெருமானை நாம் மதிக்கின்றோம்; அவருடைய போதனைகளை நாம் ஆதரிக்கின்றோம். ஆனால், அவருடைய போதனைகளைச் சொல்லிக்கொண்டு வருபவர்கள் எமது மக்களின் காணிகளையும் வரலாற்றையும் கபளீகரம் செய்கின்றார்கள்.

இந்தச் சூழலில்தான் நாம் பொதுத் தேர்தலை எதிர்நோக்குகின்றோம். எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கையான பிளவுபடாத நாட்டுக்குள் சகலரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வைக் கோருகின்ற விடயத்துக்கு மக்களுடைய ஆதரவு உள்ளது என இலங்கை அரசுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் உணர்த்த வேண்டும். வாக்குகளை சிதறடிக்காமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உங்கள் வாக்குகளை வழங்குகள்-என்றார். (எ-22)

## 111 கிலோ...

கையில் 111 கிலோ கஞ்சா மண்டைதீவில் நேற்றுக் கைப்பற்றப்பட்டுள்ளது.

மண்டைதீவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி படகில் வைத்து கடத்தப்பட்ட வேளையிலேயே மேற்படி கடத்தல் முறியடிக்கப்பட்டது. அவற்றைக் கடத்தினர் என்ற சந்தேகத்தில் இருவர் கைது செய்யப்பட்டனர். (ம-25,20,26)

## யாழ்...

பாடுகள் மந்தமாக இருப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழு தவிசாளர் தேசப்பிரிய தெரிவித்திருந்தார். இவ்வாறானதொரு நிலையிலேயே கொழும்பிலிருந்து அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். (ஒ.5)





## சபையில் சரவணபவன்

போர் முடிந்தால் தமிழர்களின் பிரச்சினைகள் தீரும் என நினைத்தவர்கள் அரசியல் தலைவர்கள். ஆனால் இந்தப் போர் வடக்கு- கிழக்கு மண்ணில் ஏன் ஆரம்பித்தது என்பதனையும் இன்று தமிழர்களின் இருப்பு என்பது எவ்வாறான எழுச்சியற்ற நிலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது என்பதனையும் தற்போது ஆட்சியில் உள்ள நல்லாட்சி அரசு உணருமா?

2015 ஜனவரி 8ஆம் திகதி இரு பெரும் கட்சிகள் இணைந்த கூட்டாட்சி ஊடான நல்லாட்சி உருவானது. இது தமிழ் பேசும் மக்களின் நல்லுள்ள உணர்வுகளின் வெளிப்பாடே ஆகும்.

தமிழ் மக்கள் தனித்துவமாக வாக்களித்ததன் வெளிப்பாடே 3 வருடங்கள் நிலை நிறுத்தி தொடர்ந்து கொண்டு செல்கின்ற இன்றைய நல்லாட்சி ஆகும்.

இந்த நல்லாட்சி அரசாங்கம் இலங்கை தழுவிய ரீதியில் வடக்கு- கிழக்கில் நல்லாட்சியை ஏற்படுத்த தேசிய ஒருமைப்பாட்டு நல்லிணக்க அமைச்சு, தேசிய ஒருமைப்பாட்டு நல்லிணக்க அலுவலகம், வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு, இந்து கலாசார அமைச்சு உள்ளிட்ட அமைச்சுக்களை தன்னகத்தே உருவாக்கி செயலாற்றுகின்றது.

எனினும் வடக்கு- கிழக்கு தாயகம் 30 வருட கால யுத்தத்தினால் மீள முடியாத மிகைச் சுமைக்குள் தள்ளப்பட்டு பொருளாதாரம், விவசாயம், உட்கட்டுமானம், மருத்துவம், கல்வி, பொறியியல் மற்றும் வேலைவாய்ப்பு போன்ற பெரும் தலைப்புக்களைக் கொண்ட துறைகள் முற்றுமுழு தாக அழிவடைந்த பின் தள்ளப்பட்ட துறைகளாக மாற்றம் பெற்றன.

இவ்வாறு ஒரு நாட்டினுள்ளே மக்கள் ஒரே இறைமை உடைய எமது ஒரு தாய் பிள்ளைகள் இனம், மதம், மொழி வேறுபாட்டால் பிரித்தாளப்படுவதுடன் அபிவிருத்தியிலும் உந்து சக்தி என்ற விடயத்தை எதிர்பார்த்த அளவில் அடையப்பாமல் பின்தள்ளப்பட்டு வருவதனை இந்த மக்கள் நன்கு உணருவர்.

இந்த மந்தநிலை குறித்த 5 ஆண்டுகால ஆட்சியாளர்களுக்கு அதிகமாக இருந்தாலும் நீண்டகாலத்தில் சர்வதேசத்தின் பாரிய விழுக்காட்டைக் கொண்டிருக்கும்.

ஓகஸ்ட் 2015

## கைக்குண்டுகள் யாழில் மீட்பு

யாழ்ப்பாணம், கொழும்புத்துறையில் நேற்று 17 கைக்குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அந்த வீட்டு வளாகத்தைத் துப்புரவாக்கும் போது அங்கு புதைக்கப்பட்ட நிலையில் பெட்டி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. அதற்குள் வெடிபொருள்கள் இருப்பதை அவதானித்து வீட்டு உரிமையாளர்கள் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு அறிவித்தனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். நீதிமன்ற அனுமதி பெறப்பட்டு சிறப்பு அதிரடிப் படையினரின் உதவியுடன் நேற்று மாலை அவை அங்கிருந்து அகற்றப்பட்டன. கண்டெடுக்கப்பட்ட 17 கைக்குண்டுகளும் செயலிழக்கச் செய்யப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## இங்கிலாந்து நிதான ஆரம்பம்



மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதலாம் நாளான நேற்றைய நாள் நிறைவில் இங்கிலாந்து அணி 3 இலக்குகளை இழந்து 207 ஓட்டங்களைப் பெற்று நிதானமான ஆரம்பம் கண்டுள்ளது.

முதலாவது ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் வெற்றிபெற்றதால் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் வெல்லவேண்டிய கட்டாயநிலை இங்கிலாந்துக்கு உள்ளது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி களத்தடுப்பைத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 29 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் பேர்ண்ஸ் ஆட்டமிழந்தார். அவரை வீழ்த்திய சேஸ், அடுத்த பந்திலேயே கிரௌலியையும் வீழ்த்தினார். அணித் தலைவர் ரூட் 23 ஓட்டங்களுடன் ஏமாற்றினார். எனினும் சிப்லி மற்றும் ஸ்ரோக்ஸ் இணைந்து இங்கிலாந்தை மீட்டெடுத்தனர். இருவரும் அரைச்சதம் கடந்தனர். நாள் முடிவில் இங்கிலாந்து அணி 3 இலக்குகளை இழந்து 207 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

சிப்லி 86 ஓட்டங்களுடனும், ஸ்ரோக்ஸ் 59 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)

வெளிவந்துவிட்டது
பௌதிக இரசாயனம்
ஆசிரியர்: க. வாணிமுகுந்தன் M.Sc.
இலங்கையின் அனைத்துப் பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.
077 717 2715

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
சகல நாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை எம் ஊடாக நடைபெறுகின்றன. மிக குறைந்த கட்டணத்தில் வடமாகாணத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட முகவர்
திருமுருகன் கொம்நெற் (Pvt) Ltd
321, K.K.S வீதி, யாழ்ப்பாணம். 0777554528, 0212227835

பாராளுமன்றத் தேர்தல் 2020
யாழ் கிளிநொச்சி மாவட்டம்
"இரண்டு தேசங்கள் ஒரு நாடு"
யோகேஸ்வரன் ஜெயக்குமார்
ஓய்வு நிலை உதவிப் பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்
உறுப்பினர் - சாவகச்சேரி நகர சபை
விருப்பு இலக்கம் 6
தமிழ் தேசிய மக்கள் முன்னணி
(அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்)
2 6 10
தாயகம் – தேசியம் – சுயநிர்ணய உரிமை

விசேட கலந்துரையாடல்
யாழ். மாவட்டத்தில் வசிக்கும் போரால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கும் புனர்வாழ்வு பெற்ற போராளிகள் மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பத்தைக் கொண்டவர்களும் உங்களுடைய சமூகமயப்படுத்தலில் உள்ள குறைபாடுகளையும் எதிர்காலத்தை மையப்படுத்திய வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பான விசேட கலந்துரையாடல்.
இடம்:- வின்சர் பட மாளிகை (வின்சர் தியேட்டர்).
இல.140, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
காலம்:- 19.07.2020 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்
உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
2020 நாடாளுமன்றத் தேர்தலும் எனது அரசியல் பிரவேசமும்
பரநிருபசிங்கம் வரதராஜசிங்கம் (விண்ணன்)
ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி.

9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி
அமரர் வைத்திலிங்கம்
இலட்சுமணன் (பனங்கட்டி)
தோற்றம் 28.07.1939
மறைவு 17.07.2011



அன்பிலே சிறந்தவராய்
மண்ணிலே உதித்து
அமைவுற்ற வாழ்வினில்
நறு மணம் பரப்பி
இன்பமாக வாழ வைத்த
எம் இதய தெய்வமே! ஐயா!
ஒன்பது ஆண்டுகள் வந்தாலும்
உங்கள் சுகமான
நினைவுகளோடு வாழ்ந்திருப்போம் ஐயா!
தந்தை காலடி எமது கோயில்
குடும்பத்தினர்
இலட்சுமணன் (ஹாட்வெயர்)
கே.கே.எஸ் வீதி, மல்லாகம்.
(cs.33045) (13.17)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.